இரண்டாம் பதிப்பு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள்: 28

சுடர் 32 | கதிர் 208 | வள்ளுவர் ஆண்டு 2048 | ஆனி 08 வியாழக்கிழமை 22.06.2017



## மாணவர்களால் சுகாதார அமைச்சு நேற்று முற்றுகை

கொழும்பு, ஜூன் 22
கொழும்பு சுகாதார அமைச்சைமுற்றுகையிட்ட பல்கலைக்கழக மாணவர்கள் மீது பொலிஸார் கண்ணீர் புகை மற்றும் தடியடிப் பிரயோகங்கள் மேற்கொண்டுள்ளனர். >> 23

## மருத்துவர்கள் இன்று பணிப்புறக்கணிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 22
சையிட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் மீது நேற்று மேற்கொள்ளப்பட்ட தாக்குதலைக் கண்டித்தும், இன்று >> 04

## கல்வி, விவசாய அமைச்சுக்களை நேற்றுப் பொறுப்பேற்றார் விக்கி

ஆளுநர் முன்னிலையில் பதவிப் பிரமாணம்



யாழ்ப்பாணம், ஜூன் 22
வடக்கு மாகாண முதலமைச்சர் தனது அமைச்சுக்கு மேலதிமாக, பதவி விலகிய இரு அமைச்சர்களது பொறுப்புக்களையும் நேற்று ஏற்றுக்கொண்டார். வடக்கு மாகாண ஆளுநர் >> 25



## அரசியல் நாடகத்தின் ஓர் அங்கம் முடிவுக்கு

கூறுகிறார் வடக்கு ஆளுநர் குரே

யாழ்ப்பாணம், ஜூன் 22
வடக்கின் அரசியல் நாடகத்தின் ஒரு பகுதி முடிவுக்கு வந்துள்ளதை உணர முடிவதாக, வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே தெரிவித்தார்.
வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. >> 04

# காணாமற்போனோரின் பணியகம் போர்க்குற்ற விசாரணைக்கு உதவாது

நாடாளுமன்றில் நேற்றுத் திட்டவட்டமாக தெரிவித்தார் தலைமை அமைச்சர் ரணில்

கொழும்பு, ஜூன் 22
காணாமற்போனோர் செயலகம் ஊடாகப் போரின்போது காணாமற்போனவர்களைக் கண்டறிவதே முதன்மை நோக்கம் எனச் சபையில் சுட்டிக்காட்டிய தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, அது போர்க்குற்ற விசாரணைக்கு ஒருபோதும் வழிவகுக்காது என்றும் உறுதியளித்தார்.
நாடாளுமன்றத்தில் நேற்றுப் புதன்கிழமை காணாமற்போனோர் அலுவலகம் தொடர்பான திருத்தச் சட்டவரைவைச் சமர்ப்பித்து உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
நாட்டில் நீண்டகாலம் நடைபெற்ற போரின் காரணமாகப் பலர் காணாமற்போயுள்ளனர். இதன் காரணமாக காணாமல்போனவர்களுக்கு என்ன நடந்தது என்பது தொடர்பில் ஆராய்ந்து பார்க்கும் நோக்குடனே காணாமற்போனோர் செயலகம் நிறுவவுள்ளோம். இந்தச் செயலகத்தின் >> 25

## விபத்தில் சிக்கிய சிறுவன் நேற்று உயிரிழப்பு

கிளிநொச்சி, ஜூன் 22
யாழ்ப்பாணம் மன்னார் ஏ32 வீதியில் இடம்பெற்ற விபத்தில் படுகாயமடைந்த சிறுவன், 5 நாட்களின் பின் நேற்று சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்தார்.
கரியாலை, நாகபடுவானைச் சேர்ந்த ஏ. அபிசாத் >> 25

## வடமாகாண சபை அமர்வில் இன்று ஆசன ஒழுங்கு மாறும்

யாழ்ப்பாணம், ஜூன் 22
வடக்கு மாகாண சபையின் இன்றைய அமர்வில் ஆசன ஒழுங்குகள் தற்காலிகமாக மாற்றப்படும் என்று பேரவைச் செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.
அமைச்சர்கள் இருவர் பதவி விலகியமையால் அவர்கள், முன்வரிசை ஆசனங்களிலிருந்து இடமாற்றப்படுவார்கள் என்று தெரிய >> 04

## ஞானசாரர் நேற்று நீதிமன்றில் சரண்

பிணையில் சென்றவரை மீண்டும் கைது செய்து விடுவித்தது பொலிஸ்



கொழும்பு, ஜூன் 22
கடந்த மூன்று வாரங்களுக்கு மேலாக மறைந்திருந்த கடும்போக்காளரும் பொது >> 25

## ஐ.நா. தீர்மானத்தை செயற்படுத்துவதில் கூட்டு அரசு உறுதி

கூட்டமைப்பிடம் ரவி நேரில் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஜூன் 22
ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவேன் என்பதில் உறுதியாக இருப்பதாகப் புதிய அயலுறவுத் துறை அமைச்சர் >> 25

## காணாமற்போனோரின் உறவுகள் விரும்பும் பொறிமுறையே தேவை

சபையில் வலியுறுத்தினார் சரவணபவன் எம்.பி.



கொழும்பு, ஜூன் 22
காணாமற்போனவர்கள் தொடர்பான அலுவலகம் நிறுவப்பட்டு அதன் நோக்கம் வெற்றியடையவேண்டுமானால், காணாமல் ஆக்கப்பட்டவர்களைத் தேடும் உறவுகள் விரும்பும் வகையிலான விசாரணைப் பொறிமுறை உள்ளடக்கப்படவேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் >> 04

## ஐ.நா. தீர்மானத்துக்கு அரசு செயல் வடிவம்

பரிந்துரைகளை ஒருங்கிணைக்க அமைச்சரவைக் குழு

கொழும்பு, ஜூன் 22
ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை விவகாரம் தொடர்பில் நிறைவேற்றப்பட் >> 04

## 4 இந்திய மீனவர்கள் நெடுந்தீவில் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 22
இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி தொழிலில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் இந்திய மீனவர்கள் 4 பேர் நேற்று நெடுந்தீவுக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.
"நெடுந்தீவுக் கடலில் ஓர் படகில் தொழிலில் ஈடுபட்ட போதே அவர்கள் 4 பேரும் கைது செய்யப்பட் >> 04

புதிய அரசமைப்பு விவகாரம்;

## கூட்டமைப்பு – சு.க. நாளை முக்கிய பேச்சு

யாழ், ஜூன் 22
புதிய அரசமைப்பு விவகாரம் தொடர்பிலான முக்கியமான தீர்க்கமான பேச்சு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும், அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையிலான >> 25

## காணாமற்போனோர் செயலகம் வன்னியிலும் அமையவேண்டும்

சபையில் நேற்று சம்பந்தன் கோரிக்கை

கொழும்பு, ஜூன் 22
காணாமல்போனவர்களைக் கண்டறிவதற்கான அலுவலகம் காலதாமதமாக அமைக்கப்பட்டாலும் அதன் செயற்பாடுகளை அரசு துரிதப்படுத்தவேண்டுமென வலியுறுத்தியுள்ளார் எதிர்க்கட்சித் தலைவரும் >> 25

## பட்டதாரிகளான 35 போராளிகளுக்கு வேலைவாய்ப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 22
மறுவாழ்வளிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டுப் பட்டதாரிகளான, தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் போராளிகள் 35 பேர், மீள்குடியேற்ற >> 04




உங்களது சேமிப்பு வட்டிக்கு 60% வரை
போனஸ் வட்டியுடன் இலவச ஆயுட் காப்புறுதி!

0114 711 411 www.nationstrust.com

Nations Trust Bank Nations MaxBonus

## வீதிப் போக்குவரத்துக் குறித்து மாணவருக்கு விழிப்புணர்வு



யாழ்ப்பாணம், ஜூன் 22
வீதிப் போக்குவரத்துத் தொடர்பில் மாணவர்களுக்கு விழிப்புணர்வூட்டும் நிகழ்வு பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் நேற்று நடைபெற்றது.
பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜெயசுந்தரவின் அறிவுறுத்தலுக்கு அமைய கொழும்பு போக்குவரத்துப் பொலிஸாரால் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது. அதில் அதிதியாக பருத்தித்துறை பிரதேச செயலர் ரி.ஜெயசீலன் கலந்து கொண்டார்.
நிகழ்வில் காங்கேசன்துறை சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சர் றஞ்சித் மகாசிங்க, காங்கேசன்துறை உபபொலிஸ் பரிசோதகர் பியந்த மற்றும் காங்கேசன்துறைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பொலிஸ் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.
வீதிப் போக்குவரத்து தொடர்பான விளக்கம் மாணவர்களுக்கு அளிக்கப்பட்டு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.
அதைத் தொடர்ந்து வீதிப் போக்குவரத்துத் தொடர்பாக வீதி நாடகமும் நடத்தப்பட்டது. (ர)

# இலஞ்சம் பெற்ற 22 அதிகாரிகள் இதுவரை கைது

கொழும்பு,ஜூன் 22
இந்த வருடத்தின் இதுவரையான காலப் பகுதியில் இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் 22 அரச அதிகாரிகள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு தெரிவித்தது.
இது தொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது;
இலஞ்சம் பெற முற்பட்டனர் என 29 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. அது குறித்த சோதனை நடவடிக்கைகள் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளன.
அத்துடன், கைதுசெய்யப்பட்டவர்களில் சிலர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர், சிலர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.
பொலிஸ் அதிகாரிகள் ஐவர், பிரதேச செயலக அலுவலக அதிகாரிகள் நால்வர், பிரதேச சபை, நகர சபை அதிகாரிகள் நால்வர், கல்வித் திணைக்கள அதிகாரிகள் இருவர் மற்றும் சுகாதார துறை அதிகாரிகள் இருவர் போன்றோரே கைது செய்யப்பட்டுள்ளனர். இதேவேளை, இலஞ்சம் பெற முற்படுபவர்கள் தொடர்பான முறைப்பாடுகள் இருப்பின் 1954 என்ற இலக்கத்துக்குத் தொடர்பு கொண்டு தகவல் வழங்க முடியும். ஆணைக்குழுவுக்கு நேரில் வந்தோ அல்லது தபால் மூலமோ தகவல்களைத் தெரியப்படுத்த முடியும் எனவும் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ஐ)

## கிழக்கு மாகாண தொண்டர் ஆசிரியர்களுக்கு நியமனம்

### கல்வி அமைச்சர் உடன்பாடு

கொழும்பு,ஜூன் 22
கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த தொண்டர் ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்குவதற்காக தனியான அமைச்சரவைப் பத்திரமொன்றைச் சமர்ப்பிப்பதற்கு கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் உடன்பட்டுள்ளார் சிறி லங்கா முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். தௌபீக் தெரிவித்தார்.
கிழக்கு மாகாணத் தொண்டர் ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்குவதுடன் தொடர்பான கலந்துரையாடல் கல்வி அமைச்சின் அலுவலகத்தில் நேற்றுப் புதன்கிழமை நடைபெற்றது. இந்தக் கலந்துரையாடலில் கல்வி அமைச்சர் எம். எஸ்.தௌபீக் எம்.பி, கிழக்கு மாகாணத் தொண்டர் ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.
"கிழக்கு மாகாணத்தில் 445 தொண்டர் ஆசிரியர்கள் உள்ளனர். வடக்குக் கிழக்கு மாகாணங்களிலுள்ள தொண்டர் ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்குவது தொடர்பில் ஏற்கனவே அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டது. அப்பத்திர அனுமதியின் பிரகாரம் கிழக்கு மாகாணத் தொண்டர் ஆசிரியர்கள் பாதிப்படையும் நிலைமை காணப்பட்டது. இதன் காரணமாக கல்வி அமைச்சரைச் சந்தித்துக் கலந்துரையாடினோம். சந்திப்பில் கிழக்கு மாகாணத் தொண்டர் ஆசிரியர் நியமனம் பெறக்கூடிய அளவுக்கு உடன்பாடு எட்டப்பட்டுள்ளது. ஏற்கனவே உள்ள அமைச்சரவைப் பத்திரத்தில் திருத்தத்தைக் கொண்டு வந்து கிழக்கு மாகாணத் தொண்டர் ஆசிரியர்களுக்குநியமனம்வழங்கும் வகையில் நடவடிக்கை எடுக்க வுள்ளதாகவும் கல்வி அமைச்சர் உறுதியளித்தார். என்று நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். தௌபீக் தெரிவித்தார். (ஐ)

## போதைப் பாவனைக்கு எதிராக நேற்று ஊர்வலம்

யாழ்ப்பாணம், ஜூன் 22
உலக புகைத்தல் மற்றும் போதைப் பொருள் எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு உடுத்துறையில் நேற்று விழிப்புணர்வு ஊர்வலம் நடத்தப்பட்டது.
"புகைத்தல் போதைப் பாவனையில் இருந்து எம் சமூக நலன் காப்போம். புதியதோர் சமுதாயத்தைக் கட்டியெழுப்புவோம்" என்ற தொனிப்பொருளில் இந்த ஊர்வலம் நடத்தப்பட்டது.
உடுத்துறை பிரதேச செயலக ஏற்பாட்டில் நடத்தப்பட்ட இந்த ஊர்வலத்தில் பொதுமக்கள், மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். ஊர்வலத்தின் இறுதியில் சமுர்த்தி சமூக அபிவிருத்திப் பிரிவினரால் விழிப்புணர்வுக் கருத்துக்கள் வழங்கப்பட்டன. (ர)





## படிவாகனம் தீப்பற்றியதால் விதை நெல் எரிந்து நாசம்

கொழும்பு,ஜூன் 22
விதை நெல்லை ஏற்றிக்கொண்டு சென்ற டிமோ பட்டாரகப் வாகனம் ஒன்று கிரிந்தலே பகுதியில் திடீரெனத் தீப்பற்றி எரிந்தது. இதனால் விதை நெல்லுடன் வாகனமும் தீயில் கருகி நாசமாகியது எனத் தெரிவிக்கப்பட்டது.
இந்தச் சம்பவம் மின்னேரியா கிரிந்தலே பக்கமுனப் முதன்மைச் சாலையில் நேற்றுப் புதன்கிழமை காலை இடம்பெற்றது. பொலன்னறுவை ஒனகம பிரதேசத்திலிருந்து அத்தநகடவலவுக்கு நெல் விதைகளை விநியோகம் செய்யச் சென்ற வாகனமே இவ்வாறு தீயில் எரிந்தது.
வாகனத்தில் ஏற்பட்ட இயந்திரக் கோளாறே இந்தத் தீ விபத்துக்குக் காரணம் என்றும் தெரிவிக்கப்பட்டது. வாகனத்தில் பயணித்த உதவியாளரும், சாரதியும் வாகனத்திலிருந்து பாய்ந்து உயிர் தப்பியுள்ளனர் என்று மின்னேரியாப் பொலிஸார் தெரிவித்தனர்.
இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மின்னேரியாப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் கலந்துரையாடல்

### காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகம் தொடர்பாக

கிளிநொச்சி, ஜூன் 22
காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான அலுவலகம் அமைக்கப்படுவது தொடர்பாக காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் நேற்று கிளிநொச்சியில் கலந்துரையாடல் நடத்தப்பட்டது.
வடக்கு, கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் அதில் கலந்து கொண்டனர்.
காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அலுவலகத்தால் எந்தப் பயனும் கிட்டப் போவதில்லை. அதைத் தாம் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை. எமது பிரதிநிதிகள் நாடாளுமன்றிலும் அதை எதிர்க்க வேண்டும் என்று காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தெரிவித்தனர். (ர)



## நிரந்தர நியமனம் கோரி ஆசிரியர்கள் போராட்டம்



யாழ்ப்பாணம்,ஜூன்22
வடக்கில் உள்ள சில பாடசாலைகளில் பகுதி நேரமாகக் கடமையாற்றி வரும் ஆசிரியர்கள் தமக்கு நிரந்தர நியமனம் வழங்கக் கோரி வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தின் முன்பாக நேற்றுப் புதன்கிழமை போராட்டத்தில் ஈடுபட்டனர்.
"நாம் நீண்டகாலமாகப் பாடசாலைகளில் பகுதிநேர ஆசிரியர்களாக பணியாற்றி வருகின்றோம். இன்று வரை எமக்கு நிரந்தர நியமனம் எதுவும் வழங்கப்படவில்லை. எனவே சம்பந்தப்பட்டவர்கள் எமக்கான நிரந்தர நியமனத்தை வழங்க வேண்டும். அதற்கான துரித நடவடிக்கையை வடக்கு மாகாண ஆளுநர் எடுக்க வேண்டும்." என்று போராட்டத்தில் ஈடுபட்ட ஆசிரியர்கள் தெரிவித்தனர். (ஐ-8)

# மிதிவெடிகளற்ற மாவட்டமாக மட்டக்களப்பு அறிவிப்பு





மட்டக்களப்பு.ஜூன் 22
போரால் பாதிக்கப்பட்ட இலங்கையில் மிதிவெடிகள் முழுமையாக அகற்றப்பட்ட முதல் மாவட்டமாக மட்டக்களப்பு அறிவிக்கப்பட்டுள்ளது. என்று கண்ணிவெடிகள் ஆலோசனைக் குழுவான 'மக்' நிறுவனம் தெரிவித்துள்ளது.
அந்த நிறுவனம் நேற்று புதன்கிழமை வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.
அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ள தாவது. 2002ஆம் ஆண்டிலிருந்து இலங்கையில் மிதிவெடிகள் அகற்றல் பணிகளில் 'மக்' நிறுவனம் தன்னை அர்ப்பணித்துக் கொண்டுள்ளது. 2025 இல் மிதிவெடிகள் அற்ற தேசம் என்ற இலக்கின் அடிப்படையில் இந்த வேலைத் திட்டங்கள் இடம்பெறுகின்றன. இலங்கையில் போரால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் கண்ணிவெடிகள் அகற்றப்பட்ட பாதுகாப்பான மாவட்டம் என்று மட்டக்களப்பு மாவட்டம் இன்று (நேற்று) பிரகடனப்படுத்தப்படுகின்றது. மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த 10 மாத காலப்பகுதியில் 2 லட்சத்து 46ஆயிரத்து 266 சதுர மீற்றர் பரப்பளவு பிரதேசம் மிதிவெடிகள் அகற்றி அழிக்கப்பட்டு துப்புரவு செய்யப்பட்டிருக்கின்றது. இந்த நிலப்பரப்பில் 85 சத வீதம் விவசாயப்பிரதேசங்களாகவும், 10சத வீதம் உட்கட்டுமானப்பிரதேசங்களாக வும், 5 சதவீதம் வனப் பிரதேசங்க ளாகவும் உள்ளன.
'மக்' நிறுவனம் மேற்கொண்ட மிதிவெடி அகற்றல் செயற்பாடு மூலம் 4 ஆயிரத்து 488 பொது மக்கள் நன்மையடைந்திருக்கின்றார்கள்.
'மக்' நிறுவனம் மட்டக்களப்பு, திருகோணமலை மற்றும் மன்னார் ஆகிய மூன்று மாவட்டங்களில் மிதிவெடி அகற்றல் பணியை மேற்கொண்டுள்ளது. இதனால். நேரடியாக 50 ஆயிரம் பொது மக்கள் நன்மையடைந்திருப்பதோடு, வடக்குக் கிழக்கில் 34 சதுர கிலோமீற்றர் பரப்பளவு பிரதேசம் மிதிவெடி கள் அற்ற பாதுகாப்பான பிரதேசமாக மாற்றப்பட்டிருக்கின்றது. ஆயினும், அடுத்த மூன்றாண்டுக ளுக்குள் மக்களின் இயல்பு வாழ்க்கைக்காக நிறையப் பணிகளை ஆற்ற வேண்டியிருக்கின்றது. - என்றுள்ளது.
(ஐ)


## இந்திய மீனவர்களின் மறியல் நீடிக்கப்பட்டது

யாழ்ப்பாணம், ஜூன் 22
எல்லை தாண்டி மீன்பிடித்த குற்றச்சாட்டில், காரை நகர் கடற்பரப்பில் கைதான இந்திய மீனவர்கள் அறுவரின் விளக்கமறியல் ஜூலை மாதம் 5ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டது.
இந்த மீனவர்கள் கடந்த மே மாதம் 23ஆம் திகதி இரவு விசைப்படகு ஒன்றில் உள் நுழைந்து காரை நகர் கடற்பரப்பில் மீன்பிடித்துக்கொண்டிருந்த போது கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டனர்.
அவர்கள் கடற்றொழில் நீரியல்வளத்துறை மாவட்ட அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டதை அடுத்து, அவர்கள் அனைவரும் நீதிமன்ற உத்தரவுக்கு அமைய விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.
அவர்களை நேற்று நீதிமன்றத்தில் முற்படுத்திய போது ஊர்காவற்துறை நீதிமன்ற நீதவான் ஏ.எம். எம்.றியால் அவர்களின் விளக்கமறியலை நீடித்தார்.
(ற)

## யானை தாக்கியதில் ஒருவர் உயிரிழப்பு

### வவுனியாவில் சம்பவம்

வவுனியா, ஜூன் 22
வவுனியா செட்டிக்குளம் மெனிக்கபாம் காட்டுப்பகுதியில் யானை தாக்கி ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளார்.
உயிரிழந்தவர் தனது நண்பருடன் பாலப்பழம் பிடுங்குவதற்காக காலை மெனிக்பாம் காட்டுப்பகுதிக்கு சென்றுள்ளனர். அங்கு பாலப்பழம் பிடுங்கி கொண்டிருக்கும் பொழுது திடீரென வந்த யானை தாக்கியுள்ளது. அவர் சம்பவ இடத்தில் உயிரிழந்தார்.
இது தொடர்பில் வவுனியா செட்டிக்குளம் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது. சம்பவ இடத்துக்கு வந்த செட்டிக்குளம் பொலிஸார் மற்றும் வன ஜீவராசிகள் திணைக்களத்தின் உதவியுடன் உயிரழந்தவரின் உடலம் மீட்கப்பட்டது.
இறப்பு விசாரனையை இறப்பு விசாரனை அதிகாரி அல்காஜ் ஐ.எஸ்.கமீட் மேற்கொண்டார். உடலத்தை உடற்கூற்றுப் பரிசோதனை செய்வதற்கு உத்தரவிட்டுள்ளார்.
இது தொடர்பான மேலதகிக விசாரணையினை செட்டிக்குளம் பொலிஸாரால் முன்னெடுக்கப்படுகின்றது.
(ற)



## போரால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கையை மீளக் கட்டியெழுப்ப துரித நடவடிக்கை அவசியம்

### கிழக்கு முதலமைச்சர் தெரிவிப்பு

மட்டக்களப்பு.ஜூன் 22
போரால் பாதிக்கப்பட்ட பகுதிகள் மற்றும் மக்களின் வாழ்க்கையை மீளக் கட்டியெழுப்பும் நடவடிக்கையை அரசு, பன்னாட்டு உதவியுடன் துரிதப்படுத்த வேண்டும்.
இவ்வாறு கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட் தெரிவித்தார்.
வெடிபொருள்அபாயக் குறைப்பை அண்மித்த மாவட்டமாக நிகழ்வு மட்டக்களப்பு மாவட்டச் செயலகத்தில் நேற்றுப் புதன்கிழமை இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது,
அரச தலைவர் தலைமையில் போரால் பாதிக்கப்பட்ட பகுதிகள் மற்றும் மக்களின் வாழ்க்கையை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.
எமது மக்களின் வாழ்க்கையை கட்டியெழுப்பும் பயணத்தில் பன்னாடுகள் உதவிகளை வழங்குகின்றபோதிலும், மென்மேலும் உதவிகள் தேவையாகவுள்ளன. பௌதீக ரீதியாக எமது மக்களின் வாழ்வியலைக் கட்டியெழுப்ப நடவடிக்கைகள் எடுக்கப்படுவது போன்று, நாட்டின் அரசியல் ரீதியாகவும் சமூக ரீதியாகவும் சமூகங்களிடையே உள்ள ஏற்றத்தாழ்வுகள் மற்றும் முரண்பாடுகள் களையப்பட வேண்டும். இதற்கானவேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படும் பட்சத்தில் எமது நாட்டில் சகல இனங்களும் சந்தேகங்கள் மற்றும் அச்சங்கள் இன்றி வாழக் கூடிய சூழல் ஏற்படும். - என்றார்.
(ஐ)

## சாலைகளில் குப்பை கொட்டுபவர்களை கண்காணிக்கும் சீ.சி.ரி.வி கமராக்கள்

ஹற்றனில் சாலைகளில் குப்பைகள் கொட்டுபவர்களைக் கண்காணிப்பதற்கு சீ.சி.ரி.வி. கமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன. இதன் மூலமான அதிரடி நடவடிக்கையாக நேற்றுப் புதன்கிழமை நான்கு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று ஹற்றன் பொலிஸார் தெரிவித்தனர்.
அவர்கள் மேலும் தெரிவித்ததாவது, இன்று (நேற்று) அதிகாலை முதல் ஹற்றன் நகர சபை எல்லைப் பகுதியில் சாலைகளில் குப்பைகளை வீசுபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுப்பதற்காக சிறப்புக் குழு சிவில் உடையில்நியமிக்கப்பட்டுள்ளனர். அத்துடன் குப்பைகளை வீதியில் வீச வேண்டாம் என அறிவுறுத்தல் பலகைகள் போடப்பட்டுள்ளதோடு, சீ.சி.ரி.வி கமராக்களும் பொருத்தப்பட்டுள்ளன. அறிவித்தலை மீறியவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். என்றனர். அதேவேளை ஹற்றன் டிக்கோயா நகரசபை அதிகாரிகள், ஹற்றன் பொலிஸார், இராணுவத்தினர், சுகாதார பரிசோதகர் ஆகியோர் இணைந்து கழிவு முகாமைத்துவம் தொடர்பான துண்டுப் பிரசுரங்களை மக்களுக்கு நேற்று விநியோகித்ததோடு, இது தொடர்பாக மக்களுக்கு மேலதிக தெளிவுப்படுத்தல்களையும் மேற்கொண்டிருந்தனர். என்றனர்.
(ஐ)

## திருமலையில் பல்கலை, கல்லூரி அமைக்க அமைச்சரவை அனுமதி

கொழும்பு,ஜூன் 22
திருகோணமலை மாவட்ட மாணவர்களின் நன்மைகருதி திருகோணமலை மாவட்டத்தின் கிண்ணியா பிரதேசத்தில் பல்கலைக்கழகக் கல்லூரியை அமைப்பதறு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது என்று காணி மற்றும் நாடாளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர் கயந்த கருணாதிலக்க தெரிவித்தார்.
தகவல் திணைக்களத்தில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துக் கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். திருகோணமலையில் பல்கலைக்கழகக் கல்லூரி அமைப்பது தொடர்பில் திறன்விருத்தி மற்றும் வாழ்க்கைத் தொழிற் பயிற்சி அமைச்சர் சந்திம வீரக்கொடி யோசனை ஒன்றை முன்வைத்திருந்தார். அதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கப்பட்டுள்ள நிலையில், சுமார் 434 மில்லியன் ரூபா செலவில் குறித்த பல்கலைக்கழகக் கல்லூரி அமைக்கப்படவுள்ளது. எனவும் அவர் குறிப்பிட்டார்.
(ஐ)

## ஹெரோயின் வைத்திருந்த நபருக்கு ஆயுள் தண்டனை

புத்தளம்,ஜூன் 22
ஹெரோயின் வைத்திருந்த குற்றச்சாட்டில் குற்றவாளியாக இனங்காணப்பட்ட நபரொருவருக்கு புத்தளம் மாவட்ட மேல்நீதிமன்றம் நேற்றுப் புதன்கிழமை ஆயுள்தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது.
2012ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 8ஆம் திகதியன்று கற்பிட்டிப் பிரதேசத்தில் வைத்து பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினரால் குறித்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டிருந்தார். அவரிடமிருந்து, 1 கிராமும் 180மில்லிகிராமும் நிறையுடைய ஹெரோயின் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டது. இது தொடர்பான வழக்கு தொடர்ந்து இடம்பெற்று வந்த நிலையில் புத்தளம் மேல்நீதிமன்ற நீதிபதி அன்டனி கீடஸ் டெப்த்தினால் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.
(ஐ)

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

## ஐ.நா. செயலரின் தூதுவரானார் இலங்கைப் பெண்

கொழும்பு, ஜூன்22
ஐ.நா.பொதுச் செயலரின் இளையோர் விவகாரங்களுக்கான தூதுவராக இலங்கையைச் சேர்ந்த ஜெயத்மா விக்கிரமநாயக்க நியமிக்கப்பட்டுள்ளார்.
ஐ.நா. பொதுச்செயலர் >> 25

## தொகுதிவாரி முறையில் உள்ளூராட்சித் தேர்தல்

கொழும்பு, ஜூன்22
உள்ளூராட்சித் தேர்தல்களைத் தொகுதிவாரி அடிப்படையில் நடத்துவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.
அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் கடந்த திங்கட்கிழமை நடந்த கலந்துரையாடலில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
தலைமை அமைச்சர் ரணில் விக்ரமசிங்க உட்பட ஐக்கிய தேசியக் கட்சியின >> 25

கொழும்பில் தமிழர் கடத்தல்

## மற்றொரு சிப்பாய் சி.ஐ.டியால் கைது

கொழும்பு, ஜூன்22
மகிந்த ஆட்சிக்காலத்தில், கொழும்பு மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் 5 மாணவர்கள் உள்ளிட்ட 11 தமிழர்கள் கடத்தப்பட்டு காணாமல் >> 25

## காணாமற்போனோர் செயலக சட்ட திருத்தம் நேற்று நிறைவேற்றம்

காணாமல்போனோர் செயலகத்தை அமைப்பதற்குரிய திருத்தச் சட்டவரைவு நாடாளுமன்றத்தில் நேற்று வாக்கெடுப்பின்றி திருத்தங்களுடன் நிறைவேற்றப்பட்டது.
2016 ஒகஸ்ட் மாதம் 11ஆம் திகதி நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட காணாமற்போனோர் அலுவலகம் (தாபித்தலும், நிர்வகித்தலும், பணிகளை நிறைவேற்றுதலும்) சட்டத்தின் திருத்தச்சட்டவரைவு இரண்டாவது மதிப்பீட்டு விவாதத்துக்காக நாடாளுமன்றத்தில் நேற்று சமர்ப்பிக்கப்பட்டது.
ஆளும், எதிரணி உறுப்பினர்கள் விவாதத்தில் பங்கேற்றிருந்தனர். இறுதியில் வாக்கெடுப்பின்றித் திருத்தச்சட்டவரைவு நிறைவேற்றப்பட்டது. (த)

## முதலாம் பக்கத்தொடர்ச்சிகள்...

### ஐ. நா...

டுள்ள தீர்மானத்தில் முன்மொழியப்பட்டுள்ள பரிந்துரைகளை ஒருங்கிணைப்பதற்காக அமைச்சரவைக் குழுவொன்றை அமைப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரமளித்துள்ளது.
அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற அமைச்சரவைத் தீர்மானங் களை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அமைச்சரவை இணைப் பேச்சாளரான கயந்த கருணாதிலக்க மேற்படி தகவலை வெளியிட்டார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
ஐ.நா. மனித உரிமைகள் சபையில் 2015ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திலுள்ள விடயங்களை செயற்படுத்துவதற்கு இலங்கைக்கு 18 மாதங்கள் காலஅவகாசம் வழங்கும் வகையில் 2017 இல் இலங்கை அரசின் இணை அனுசரணையுடன் தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டது.
இதற்காக ஐ.நா. மனித உரிமைகள் சபை மற்றும் ஏனைய அங்கத்துவ நாடுகளிடம் தொடர்ந்தும் தேவையான தொழில்நுட்ப ஒத்துழைப்பு மற்றும் ஏனைய ஒத்துழைப்பைப் பெறுக் கொள்வதற்கும், இதற்காக செயற்படும்போது பல்வேறு அமைச்சுகள் மற்றும் நிறுவனங்களை இணைத்தும், பின்னர் மதிப்பீடுகளை மேற்கொள்வதற்காக நடைமுறையொன்றை வகுக்கும் நோக்கிலும் தலைமை அமைச்சர் தலைமையில் ஏனைய அமைச்சர்களின் ஒத்துழைப்புடன் குழுவொன்று நியமிக்கப்படவுள்ளது.
இந்தக் குழுவுக்கு ஒத்துழைப்பை வழங்குவதற்காகவும் அதிகாரிகளைக் கொண்ட குழுவொன்றைநியமிப்பதற்கான ஆலோசனையை முன்னிலைப்படுத்தித் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க சமர்ப்பித்த ஆவணங்களுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது - என்றார். (த)

### பட்டதாரிகளான

மற்றும் மறுவாழ்வு அமைச்சின் வெற்றிடங்களுக்கு உள்வாங்கப்படுவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.
இவர்களுக்கான நேர்முகத்தேர்வு எதிர்வரும் 29 ஆம் திகதி அரச நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சில் நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. வடக்கு மாகாண ஆளுநர் கூரேயின் வேண்டுகோளுக்கு அமைவாக, தாக்கல் செய்யப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்துக்கே அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதற்கு அமைவாக, இந்த நேர்முகத் தேர்வு நடைபெறவுள்ளதாகத் தெரிய வருகின்றது. (த-5)

### காணாமற்...

ஈ.சரவணபவன் தெரிவித்தார்.
நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற காணாமற்போனோர் அலுவலகம் தொடர்பான திருத்தச் சட்டவரைவு மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
காணாமல் ஆக்கப்பட்டோர் பிரச்சினை தமிழ் மக்களின் வாழ்வுடன் இரண்டறக் கலந்துவிட்ட விடயமாகக் கடந்த மூன்று தசாப்தமாக இருந்துவருகின்றது. 1983ஆம் ஆண்டு சிங்களப் பேரினவாதிகளால் இந்தத் தீவில் நிகழ்த்தப்பட்ட இனக் கலவரத்தில் தொடங்கிய காணாமல் ஆக்கப்படுதல் விவகாரம், 2009ஆம் ஆண்டு இறுதிப்போர் முடிவடையும் வரையில் நீண்டுள்ளது.

**இந்திய இராணுவம் வருகை**

1987ஆம் ஆண்டு அமைதி காக்கும் படை என்ற பெயரில் இந்திய இராணுவம் வடக்கு, கிழக்குப் பிரதேசத்தில் கால் பதித்தது. இந்திய இராணுவம் நிலைகொண்டிருந்த 1987ஆம் ஆண்டு தொடக்கம் 1990ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் காணாமல் ஆக்கப்படுதல்கள் இடம்பெற்றன. இந்திய இராணுவத்தினராலும், அவர்களுடன் சேர்ந்து இயங்கிய தமிழ் ஒட்டுக் குழுக்களா லும் பலர் பலவந்தமாகக் கடத்திச் செல்லப்பட்டனர். இருபத்தியேழு ஆண்டுகள் கடந்தும் அவர்கள் வீடு திரும்பவில்லை. இந்திய இராணுவமோ அல்லது அவர்களுடன் சேர்ந்து இயங்கிய தமிழ் ஒட்டுக்குழுவோ இதற்கு இன்றுவரையில் பொறுப்புக் கூறவில்லை. இந்தக் காலத்தில் கடத்தப்பட்டவர்கள் தொடர்பில் முன்னைய ஆட்சியாளர் மகிந்த ராஜபக்ஷவால் நியமிக்கப்பட்ட காணாமல் ஆக்கப்பட்டோர் விசாரணை ஆணைக்குழு முன்பாக முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டதையும் இந்த இடத்தில் சுட்டிக்காட்டுவது பொருத்தம்.

**ஒட்டுக் குழுக்களும் பொறுப்பு கூறவேண்டும்**

இலங்கை இராணுவத்தின் கட்டுப்பாட்டுக்குள் 1996ஆம் ஆண்டு யாழ்ப்பாணக் குடாநாடு கொண்டுவரப்பட்டது. சமாதான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட 2002ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் வரையிலான காலப்பகுதியில், குடாநாட்டில் இருந்த இளையோர் பலர் இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்டார்கள். சுற்றி வளைப்புகள் என்ற பெயரில் இளையோரைச் சந்தேகத்தில் கைதுசெய்து கொண்டுசென்ற இராணுவத்தினர் அவர்களை இன்றுவரை விடுவிக்கவில்லை. இதே சமகாலப்பகுதியில், இலங்கை இராணுவத்துடன் சேர்ந்து தமிழ் ஆயுத குழுக்கள் பல ஒட்டுக் குழுக்களாக இயங்கின. இவர்களும் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் விடயத்தில் பொறுப்புச் சொல்லவேண்டியவர்களே. அதேவேளை, இந்தக் காலப்பகுதியில் நாட்டின் தலைவியாக விளங்கியவர் சந்திரிகா அம்மையார். இப்போது தேசிய ஒருமைப்பாட்டுக்கும் நல்லிணக்கத்துக்குமான அலுவலகத்தின் தலைவியாகவும் இருக்கின்றார். பொறுப்பான பதவியில் இப்போது இருக்கின்ற இவரும், தனது காலத்தில் நடைபெற்ற காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்களுக்குப் பொறுப்புக் கூறவேண்டி யவரே.

**ஈ.பி.டி.பி. தொடர்பு**

முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக்காலத்தில், 2006ஆம் ஆண்டு தொடக்கம் 2009ஆம் ஆண்டு வரையில் யாழ்ப்பாணத்தில் காணாமல் ஆக்கப்பட்டோர் மிக அதிகம். இராணுவ ஊடரங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்ட இரவுவேளையிலேயே காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்கள் நடந்தன. இராணுவத்தினருடன் சேர்ந்து இயங்கிய ஒட்டுக்குழுவான ஈ.பி.டி.பியினருக்கு இந்தக் கடத்தல்களுடன் நேரடித் தொடர்பிருப்பதாக மக்ஸ்வெல் பரணகம ஆணைக் குழுவில் முறைப்பாடுகள் பதிவுசெய்யப்பட்டிருந்தன. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பதிவுத் தகவல்கள் அடிப்படையில் 450 பேர் வரையில் இந்தக் காலப்பகுதியில் காணாமல் ஆக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

**வட்டுவாகலில் படையினரிடம் ஒப்படைக்கப்பட்டோர் எங்கே?**

இவற்றைவிட மிக மோசமான காணாமல் ஆக்கப்பட்ட சம்பவம் இறுதிப்போரின் முடிவிலேயே இடம்பெற்றது. போரை முடிவுக்குக் கொண்டுவந்ததாக அரசு அறிவித்த தினத்திலும், அதற்கு முன், பின்னான தினங்களிலும் முல்லைத்தீவு மாவட்டத்தின் வட்டுவாகல் பாலத்தில் வைத்து பெருமளவானவர்கள் தங்களது பிள்ளைகளை இராணுவத்தினரிடம் ஒப்படைத்தனர். மதகுரு முன்னிலையிலேயே இது இடம்பெற்றிருந்தது. இவ்வாறு ஒப்படைக்கப்பட்டவர்கள் இன்றுவரை வீடு திரும்ப வில்லை. எத்தனையோ பெற்றோர், பிள்ளைகள் காணாமல் ஆக்கப்பட்டதால் மனநிலை பாதிக்கப்பட்டவர்களாகவும், அடுத்த நேர உணவுக்கே வழியில்லாதவர்களாகவும் தாயக தேசத்தில் அல்லலுற்றுக்கொண்டிருக்கின்றனர்.
காணாமல் ஆக்கப்பட்டவர்களைத் தேடும் உறவுகள் உங்களிடம் நட்டஈட்டை எதிர்பார்க்கவில்லை என்பதை இந்த இடத்தில் குறித்துக் காட்ட விரும்புகின்றேன். அவர்கள் கேட்பதெல்லாம், தங்கள் அன்புக்குரிய உறவுகளுக்கு என்ன நடந்தது? அவர்கள் எங்கே? அவர்கள் கொலை செய்யப்பட்டால் யாரால் செய்யப்பட்டார்கள்? கொலை செய்தவர்களுக்கு என்ன தண்டனை? இதைத்தான் அவர்கள் கேட்கின்றார்கள்.

**அரச தலைவர் கால தாமதம்**

இங்கே இன்னொரு முக்கிய விடயத்தை இந்தச் சந்தர்பத்தில் சுட்டிக்காட்டுவது பொருத்தம் என்று நினைக்கின்றேன். கடந்த ஆண்டு ஒகஸ்ட் மாதம் 23ஆம் திகதி இந்தச் சட்டவரைவு மீது ஒப்பமிட்டீர்கள். நாட்டின் அரச தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இந்த அலுவலகத்தை ஓர் அமைச்சுக்குப் பாரப்படுத்தி வர்த்தமானி வெளியிடுவதில் அரச தலைவர் காலதாமதம் செய்து வந்தார். இதற்கு நீங்கள் கூறும் காரணம், மக்கள் விடுதலை முன்னணியினரின் திருத்தம் உள்ளடக்கப்படவில்லை என்பதுதான்.
ஆனால் இந்தச் சட்டவரைவு தொடர்பில் பாதுகாப்புத் தரப்பினர் தமது கரிசனைகளை வெளிப்படுத்தியிருந்தனர். 15 பக்கத்திலான ஆவணத்தை அரச தலைவரிடம் அவர்கள் ஒப்படைத்திருந்தனர். அதை அவரும் ஏற்றுக் கொண்டார். அவர்களது கரிசனைகளை புறந்தள்ளுவதற்கு இந்த அரசால் முடியவில்லை. அதனாலேயே இந்த அலுவலகம் நிறுவும் விடயம் தள்ளிப் போனது.
அரச தலைவர் இந்த அலுவலகத்தை நிறுவுவதில் உளப்பூர்வமான விருப்புடன் செயற்படுபவராக இருந்திருந்தால், அலுவலகத்தை நிறுவிவிட்டு இந்தத் திருத்தச் சட்டத்தை பின்னர் நாடாளுமன்றத்தில் விவாதித்து நிறைவேற்றியிருக்கலாம். அந்த உளப்பூர்வமான விருப்பம் இன்மையும், பாதுகாப்புத் தரப்பினரின் கரிசனையைக் கவனத்தில் எடுத்ததுமே இந்த அலுவலகம் நிறுவுவதில் ஏற்பட்ட தாமதத்துக்குக் காரணம்.

**இலங்கை அரசின் பொறிமுறையூடாக தீர்வு கிடைக்காது**

இறுதியாக ஒரு விடயத்தைக் கூறி எனது உரையை முடித்துக் கொள்கின்றேன். காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான விடயம் விரைந்து தீர்க்கப்பட வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமிருக்க முடியாது. ஆனால் இதில் பாதிக்கப்பட்டவர்கள், நீங்கள் நிறுவும் இந்த அலுவலகத்தை ஏற்றுக் கொள்வதற்குத் தயாரில்லை.
அவர்களைப் பொறுத்தவரையில் இலங்கை அரசின் எந்தப் பொறிமுறையூடாகவும் தீர்வு கிடைக்காது என்று நம்புகின்றார்கள். அவர்கள் நம்புவதற்கு நியாயமான காரணங்கள் இருக்கின்றன. அவர்களது நேசத்துக்குரிய பாசத்துக்குரிய அன்புக்குரிய உறவுகள் காணாமல் ஆக்கப்பட்டதற்குக் காரணமான இராணுவத்தினரை, தண்டிக்கக் கூடாது என்ற நோக்கோடு செயற்படுவதால், இந்த அலுவலகத்தின் ஊடாகவும் தங்களுக்கு நியாயமான தீர்வு கிடைக்காது என்று எண்ணுகின்றார்கள்.
ஆகவே, இந்த அலுவலகம் நிறுவப்பட்டு அதன் நோக்கம் வெற்றியடைய வேண்டுமானால், காணாமல் ஆக்கப்பட்டவர்களைத் தேடும் உறவுகள் விரும்பும் வகையிலான விசாரணைப் பொறிமுறை உள்ளடக்கப்பட வேண்டும் என்று இந்தச் சபையில் கோருகின்றேன்-என்றார். (த)

### வட மாகாண...

வருகின்றது.
வடக்கு மாகாண சபையில் முன்வரிசையில், முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் முதலாவதாகவும், கல்வி முன்னாள் அமைச்சர் த.குருகுலராசா இரண்டாவதாகவும், சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் மூன்றாவதாகவும், விவசாய முன்னாள் அமைச்சர் பொ. ஐங்கரநேசன் நான்காவதாகவும், போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் ஐந்தாவதாகவுமே ஆசன ஒழுங்கு இதுவரை அமைந்திருந்தது.
கல்வி அமைச்சராகப் பதவி வகித்து வந்த த.குருகுலராசா மற்றும் விவசாய அமைச்சராகப் பதவி வகித்து வந்த பொ.ஐங்கரநேசன் ஆகியோர் தமது பதவிகளிலிருந்து விலகியுள்ளனர். இரு அமைச்சுக்களும் புதியவர்கள் நியமிக்கப்படவில்லை. முதலமைச்சரே அதனைப் பொறுப்பேற்றுக் கொண்டுள்ளார். இதனால் இருக்கை ஒழுங்குகள் தற்காலிகமாக மாற்றப்படவுள்ளதாகத் தெரிய வருகின்றது. பதவி விலகிய இரு அமைச்சர்களின் இடங்களை வெற்றிடமாக வைத்துக் கொண்டு, இரண்டாவது வரிசையில், முதலமைச்சருக்கு பின்பாக ஆளும் கட்சி உறுப்பினர்களான க.விந்தன் மற்றும் அ.பரஞ்சோதி ஆகியோர் உள்ள ஆசனங்களை முன்னாள் அமைச்சர்களுக்கு வழங்குவது தொடர்பில் பரிசீலிக்கப்பட்டு வருகின்றது. இல்லாவிடின், முதலமைச்சர் அடுத்து சுகாதார அமைச்சர், மூன்றாவதாகப் போக்குவரத்து அமைச்சரும், அதற்கு அடுத்ததாகப் பிரதி அவைத் தலைவர், அதனைத் தொடர்ந்து முன்னாள் அமைச்சர்களுக்கு இருக்கை வழங்கலாமா என்பது தொடர்பிலும் பரிசீலிக்கப்பட்டு வருகின்றது. (த-5)

### அரசியல்...

விக்னேஸ்வரனுக்கு எதிராக கொடுக்கப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானம் நேற்று மீளப் பெறப்பட்டது. கடந்த 14 ஆம் திகதி வழங்கிய நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது தொடர் நடவடிக்கை எடுக்கவேண்டாம் எனக் கோரிய இந்த மனுவில் 4 உறுப்பினர்கள் மாத்திரம் தற்போது கையெழுத்திட்டு ஆளுநரிடம் நேற்று ஒப்படைத்தனர். வடக்கு மாகாண சபையின் நீதிக்கான அணியின் ஊடகப் பேச்சாளர் கே.சயந்தன் மற்றும் மாகாண சபை உறுப்பினர் அ.அஸ்மின் இருவருமே ஆளுநரிடம் இதனை ஒப்படைத்தனர்.
இதன் பின்னர் பத்திரிகையாளர்களுக்குக் கருத்து வெளியிட்ட வடக்கு மாகாண ஆளுநர் குரே, வடக்கில் கடந்த வாரம் நிலவிய அரசியல் மோதல்களை, கிரிக்கெட் வர்ணனையைக் கேட்பது போல் பொறுமையுடன் கேட்டுக் கொண்டிருந்தேன். நான் சட்டத்திற்கு அமைவாக நடவடிக்கையை மேற்கொண்டேன். வடக்கில் நிலவிய இந்த அரசியல் கருத்து மோதல் பேச்சுக்களின் ஊடாக சுமுகமான நிலமைக்கு வந்துள்ளது. இதனால் நானும், அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவும் மகிழ்ச்சியடைகின்றோம். முன்னைய காலங்களில் ஏற்பட்ட அரசியல் மோதல்கள் இரத்தம் சிந்துவதில்தான் முடிவடைந்திருக்கின்றன. ஆனால் தற்போது சனநாயகச் சூழலில் விடயம் சுமுகமாகத் தீர்க்கப்பட்டுள்ளது- என்றார். (த-5-8)

### 4 இந்திய...

டனா. அவர்களின் படகும் தடுத்துவைக்கப்பட்டுள்ளது. இந்திய மீனவர்கள் 4 பேரும் யாழ்ப்பாணம் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தின் ஊடாக இன்று ஊர்காவற்றுறை நீதிவான் மன்றில் முற்படுத்தப்படுவர்" என்று கடற்படையினர் தெரிவித்தனர். (ம-101)

### மருத்துவர்கள்...

காலை 8 மணி முதல் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் அறிவித்தது. (வ-5)

## மாதகல் நரசிங்க சித்தரின்உடலம் நேற்றுச் சமாதி



யாழ்ப்பாணம், ஜீன் 22
சிவபதமடைந்த சிவத்திரு நரசிங்க சித்தர் சுவாமிகளின் திருவுடல் புதன்கிழமை அவரது சீடர்கள், பக்தர்கள் மற்றும் ஆயிரக்கணக்கான மக்களின் பங்குபற்றலுடன் சம்புநாதாச்சரத்தில் நேற்று சமாதி வைக்கப்பட்டது.

சுழிபுரம் சம்பில்துறை சம்புநாதாச்சரத்தின் தர்மகத்தா நரசிங்க சித்தர் சுவாமிகள் நேற்று முன்தினம் சிவபதமடைந்தார்.

அவரது திருவுடலுக்கு நேற்று ஆலய வளாகத்தில் யாகக் கிரியைகள் நடைபெற்றன. சித்தரின் சீடர்களும் பக்தர்களும் இணைந்து இந்த யாகக் கிரியைகளை நடத்திவைத்தனர். இதனைத் தொடர்ந்து முற்பகல் 11.30 மணியளவில் அவரது திருவுடல் சமாதி வைக்கப்பட்டது.நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த தேசிக பரமாச்சார்ய சுவாமிகளும் இதில் கலந்துகொண்டார். (4)

# காணாமல் ஆக்கப்பட்டோரின் விவகாரங்களைக் கையாளும் அலுவலகம் அமையவேண்டும்

## இலங்கைக்கான அமெரிக்கத்தூதர் தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 22
காணாமல் ஆக்கப்பட்டோர்விவகாரங்களைக் கையாளும் அலுவலகம் இலங்கையில் அமைக்கப்படுவது மிக அவசியம் என்று இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் அதுல் கெசாப் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் அதுல் கெசாப் கிழக்கு மாகாணத்துக்கு நேற்றுமுன்தினம் பயணம் மேற்கொண்டிருந்தார். அங்கு பல்வேறு தரப்பினரையும் சந்தித்துப் பேச்சு நடத்தியிருந்தார். குறிப்பாகக் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களையும் அமெரிக்கத் தூதுவர் சந்தித்துக் கலந்துரையாடினார். காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பாக, காணாமல் ஆக்கப்பட்டவர்களின் அன்புத்தாய்மார் பதிலைத் தேடுகின்றனர். அதற்குக் காணாமல் போனோர் விவகா ரங்களைக் கையாளும் அலுவலகம் மிகவும் அவசியமாகவுள்ளது என்றும்அமெரிக்கதூதுவர்கருத்து வெளியிட்டுள்ளார்.

இவேளை, மட்டக்களப்பில் அமெரிக்க தூதரகத்தின் ஏற்பாட்டில் இஃப்தார் நிகழ்வு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. அதில் உரையாற்றிய அதுல் கெசாப்,

“இனங்களுக்கு இடையிலான ஒற்றுமையின் ஊடாகவே நாட்டை அபிவிருத்தி செய்யமுடியும். இலங்கையில் சமாதானத்துக்காகவும் அபிவிருத்திக்காகவும் அமெரிக்கா பல்வேறு வகையில் பொருளாதார மற்றும் இராஜதந்திர முறைகளில் உதவிவருகிறது. அதன்படி எதிர்காலத்திலும் இவ்வாறான செயற்பாடுகளில் அதிக கரிசனை செலுத்தப்படும். இனங்களுக்கு இடையிலான ஒற்றுமையிலேயே நாட்டின் அபிவிருத்தி தங்கியுள்ளது. இலங்கையில் முஸ்லிம்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள வன்முறைகளை வன்மையாக கண்டிக்கிறேன். சிங்கள மற்றும் தமிழ் சமூகங்களுடனும் அரசுடனும் இணைந்து வாழும் முஸ்லிம்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் வன்முறைகளைக் கண்டிக்கிறேன். சமூகங்களின் ஒற்றுமைக்காக புனித நோன்பு தினத்தில்பிரார்த்திப்பதாகவும் அவர் தெரிவித்தார். (4)



## முள்ளிக் காட்டில் குவிக்கப்பட்டுள்ள மணல் குவியல்கள் நீதிமன்றுக்கு

### இரவிரவாக ஏற்றினர் பொலிஸார்

யாழ்ப்பாணம், ஜூன் 22
சட்டவிரோதமாகக் கடத்தப்பட்டு வடமராட்சி முள்ளிக் காட்டில் மறைத்து வைக்கப்பட்டிருந்த மணல் குவியல்களை நெல்லியடிப் பொலிஸார் நேற்று இரவிரவாக மீட்டனர். அதனை நீதிமன்றில் பாரப்படுத்தவுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

வடமராட்சி கரையோரத்திலிருந்து சட்டவிரோதமாக மீட்டுச் செல்லப்பட்ட மணல் முள்ளிக் காட்டுப் பகுதிக்குள் குவியல்களாகப் பறிக்கப்பட்டன. நேற்றுமுன்தினமும் அவ்வாறு சட்டவிரோதமாக மணல் கடத்தலில் ஈடுபட்ட வாகனம் ஒன்றை நெல்லியடிப் பொலிஸார் துரத்திச் சென்றபோது முள்ளிக்காட்டுக்குள்வாகனம் ஒனறு சென்று மறைந்தது. அந்தக் காட்டுக்குள் நுழைந்து தேடுதல் நடத்தியபோதே மணல் குவியல்களாகக் காணப்பட்டதனைப் பொலிஸார் கண்டறிந்தனர்.

அதனையடுத்து அவ்வாறு மணல் கடத்தப்படும் பகுதியான முள்ளிச் சந்தியை அண்மித்து சில பாதைகளில் கிடங்குகள் வெட்டப்பட்டுள்ளன. மணல் கடத்தலைத் தடுக்கும் நோக்கில் அவ்வாறு வெட்டப்பட்டப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த நிலையில் முள்ளிக் காட்டுக்குள் பறிக்கப்பட்டுத் தேக்கி வைக்கப்பட்டுள்ள மணல் குவியல்களைப் பொலிஸார் கனரக வாகனங்கள் மூலமாக நேற்று இரவிரவாக ஏற்றினர். மணலைப் பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்தவுள்ளதாகத் தெரிவித்தனர். (4.26)

# ரிசாத், சிவாஜி உள்ளிட்டோர் மீது விசாரணைகள் தொடர்கின்றன

## பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவிப்பு

கொழும்பு,ஜூன் 22
வர்த்தக அமைச்சர் ரிசாத் பதியுதீன், ஞானசார தேரர், வடமாகாண சபை உறுப்பினர் சிவாஜிலிங்கம் உள்ளிட்ட சிலருக்கு எதிரான விசாரணைகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரியந்த ஜயக்கொடி தெரிவித்தார்.

அமைச்சரவைமுடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு அரச தகவல் திணைக்களத்தில் நேற்றுப் புதன்கிழமை நடைபெற்றது. அதில் கருத்துத் தெரிவித்த போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது,

இனங்களுக்கு எதிரான கருத்துக்களை வெளியிட்டிருப்பவர்களுக்கு எதிராக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. அவர்கள் வெளியிட்ட கருத்துக்கள் இனவாதத்தைத் தூண்டும் வகையில் அமைந்துள்ளனவா? இல்லையா என்பது குறித்து சட்டமா அதிபர் திணைக்களமே இறுதிமுடிவு எடுக்கும் . இனங்களுக்கு எதிரான பேச்சுக்களை வெளியிட்டமை தொடர்பில் அரசியல்வாதிகளான அமைச்சர் ரிசாத் பதியுதீன், வடமாகாண சபை உறுப்பினர் சிவாஜிலிங்கம் மற்றும் பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் ஞானசார தேரர் உள்ளிட்டோருக்கு எதிராகவும் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. இவர்களைத் தவிர, இனங்களுக்கு எதிராக ஐக்கியத்தை சீர்குலைப்பது தொடர்பான கருத்துக்களை வெளியிட்டமை தொடர்பில் 21 முறைப்பாடுகள் கிடைத்துள் ளன.

அதேவேளை கடந்த மே மாதம் 16ஆம் திகதி தொடக்கம் இன்று வரை இனங்களுக்கு எதிரான வன்முறைகள், வேற்றினத்தவர்களின் வர்த்தக நிலையங்கள், மத வழிபாட்டுத் தலங்கள் மீதான தாக்குதல்கள் தொடர்பில் 14 சம்பவங்கள் பதிவாகியுள்ளன. இவைதொடர்பாக12 சிங்களவர்கள், இரண்டு முஸ்லிம்கள் மற்றும் தமிழர் ஒருவர் உட்பட 15 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் - என்றார். (ஐ)

## சிசுவை குழிதோண்டி புதைத்த தாய் கைது

கொழும்பு, ஜூன் 22
ஆண் சிசுவொன்றை உறையில் போட்டுக் குழிதோண்டிப் புதைத்த சம்பவம் நிவித்திகல பகுதியில் இடம்பெற்றுள்ளது. நிவித்திகல உடதெல்வல எந்தான பகுதியில் இடம் பெற்ற இச்சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் 40 வயதான தாய் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் விசாரணை யின் போது குற்றத்தை ஒப்புக் கொண்ட சிசுவின் தாய் என்று தெரியவந்திருக்கும் 40 வயதுடைய தாய், “தான் மலசல கூடத்துக்கு சென்ற போது பிரசவம் ஏற்பட்டு சிசு கீழே விழுந்து கதறியது.

அதன்பின்னர் தான் சிசுவை உறையொன்றினுள் போட்டு வீட்டின் பின் குழிதோண்டிப் புதைத்தேன்” என்று வாக்குமூலமளித்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (4)

# இறைமையை மீறியுள்ளது ஐ.நா. நிபுணரின் அறிக்கை

## சாடுகின்றது இலங்கை அரசு

கொழும்பு, ஜூன் 22
ஐ.நா. சிறப்பு அறிக்கையாளர் மோனிகா பின்டோ, ஐ.நா மனித உரிமைகள் சபையில் சமர்ப்பித்த அறிக்கை, இலங்கையின் இறைமையை மீறியுள்ளது என நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ச குற்றஞ் சாட்டியுள்ளார்.

இலங்கை நீதித் துறை தொடர்பாக, அண் மையில் ஐ.நா மனித உரிமைகள் சபையில் சமர்ப்பிக்கப்பட்ட, நீதிபதிகள் மற்றும் சட்டவாளர்களின் சுயாதீனம் தொடர்பான ஐ.நா. சிறப்பு அறிக்கையாளர் மோனிகா பின்டோவின் அறிக்கையில் கடுமையான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டிருந்தன.

இந்த அறிக்கை குறித்த இலங்கை அரசின் நிலைப்பாட்டை, நாடாளுமன்றத்தில் நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ச நேற்று முன் தினம் அறிவித்தார்.

“இலங்கையில் ஏழு நாள்கள் மட்டுமே தங்கியிருந்த அவரது குற்றச்சாட்டுகள் எமக்கு அதிர்ச்சி அளிக்கின்றன. பல்வேறு நாடுகளின் நீதி முறைமைகள் தொடர்பான அவரது ஆற்றல் சந்தேகத்துக்குரியதாக இருக்கிறது.

இந்த அறிக்கை இலங்கையின் புகழுக்குக் களங்கத்தை ஏற்படுத்துகிறது. நாட்டின் இறைமையை மீறுகிறது. அரசமைப்பு பேரவை தொடர்பான மோனிகா பின்டோவின் கருத்து ஏற்புடையதல்ல.

அவர் தனது அறிக்கையில், அரசமைப்புப் பேரவை சுதந்திரமானது அல்ல என்றும், எல்லா நியமனங்களையும் அரச தலைவரே செய்வதாகவும் குற்றம்சாட்டி யுள்ளார். அரசமைப்புப்பேரவை ஏற்றுக் கொண்டால் மாத்திரமே, அரசதலைவரால் நியமனங்களைச் செய்ய முடியும் என்பதை அவர் அறியவில்லை. அரசசார்பற்ற நிறுவனங்களின் தகவல்களின் அடிப்படையில் தான் பின்டோவின் அறிக்கை அமைந்திருக்கிறது.

ஐ.நா சிறப்பு அறிக்கையாளரின் இந்த அறிக்கை தொடர்பான அதிகாரபூர்வ நிலைப்பாட்டை, இராஜதந்திர வழிமுறைகளின் ஊடாக, சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கு அறிவிப்பதற்கு இலங்கை அரசு நடவடிக்கை எடுத்துள்ளது” என்றும் அவர் குறிப்பிட்டார். (கு)

# முள்ளிச் சந்திக் கொள்ளையில் ஒருவர் நேற்றுக் கைதானார்

யாழ்ப்பாணம், ஜூன் 22
முள்ளிக் காட்டுச் சந்தியில் பெண்ணொருவரிடம் சங்கிலி கொள்ளையடித்துச் சென்றனர் குற்றச்சாட்டில் ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

“கொள்ளையடிக்கப் பயன்படுத்தப்பட்ட மோட்டார் சைக்கிள் இலக்கத்தின் அடிப்படையிலேயே குறித்த நபர் கைது செய்யப்பட்டார்.

சில நாள்களுக்கு முன்னர் முள்ளிச் சந்தியை அண்மித்து சாலையில் பயணித்த பெண்ணிடம் சங்கிலி கொள்ளையடிக்கப்பட்டது. அது தொடர்பில் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. அதனடிப்படையில் விசாரணை முன்னெடுத்த பொலிஸார் தொண்டமானாறில் வல்வெட்டித்துறைப் பொலிஸாரின் உதவியுடன் ஒருவரை நேற்றுக் கைது செய்தனர். அவரிடம் விசாரணை இடம்பெறுகிறது” என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (4. 26)

# கச்சாயில் பரிசளிப்பு

தென்மராட்சி ஜூன் 20 (116)

கச்சாய் அ.த.க. பாடசாலை மாணவர் நாடாளுமன்ற கல்வி மனிதவள அபிவிருத்தி மற்றும் தகவல் தொடர்பாடல் அமைச்சின் ஏற்பாட்டில் பாடசாலை பரிசில் நாள் விழா இன்று பி.ப.1.45 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறும். பாடசாலை அதிபர் கா.குணசிங்கம் தலைமையில் நடைபெறும் விழாவுக்கு தலைமை விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு. கிருஷ்ணகுமாரும், சிறப்பு விருந்தினராக பாடசாலை பழைய மாணவர் சங்க லண்டன் கிளையின் தலைவர் சி.துரைசிங்கமும் கலந்து கொள்வர் என அறிவிக்கப்பட்டுள்ளது. (4,9)

## நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| இறால் | 800 | 900 | 1000 | 1000 |
| நண்டு | 400 | 250 | 500 | 300 |
| கணவாய் | 700 | 800 | 800 | 900 |
| பாரை | 600 | 700 | 700 | – |
| சுறா | 600 | 800 | 1000 | – |
| சீலா | 400 | 500 | 600 | 500 |
| விளை | 500 | 500 | 500 | 700 |
| முரல் | 400 | 400 | 450 | – |
| கும்பிளா | 400 | 250 | 400 | 600 |
| கிளாக்கன் | 800 | | 600 | 600 |
| ஓரா | 400 | 400 | 450 | 400 |
| திரளி | 250 | 200 | 200 | 200 |
| நகரை | 250 | 200 | 500 | 400 |
| சூடை | 200 | 100 | 200 | 150 |
| ஒட்டி | 250 | – | 300 | 400 |
| திருக்கை | 350 | 250 | 400 | – |
| மதனம் | 250 | 150 | 300 | – |
| கொய் | 200 | 50 | 80 | 100 |
| பாலை | 300 | 200 | 600 | – |
| வாழை | 200 | – | 400 | 400 |

## மரக்கறிகளின் நேற்றைய நிலவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | நெல்லியடி | திருநெல்வேலி |
|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 80 | 80 | 60 | 80 | 60 |
| கத்தரி | 100 | 80 | 80 | 140 | 150 |
| கரட் | 300 | 300 | | | 260 |
| மரவள்ளி | 60 | 80 | 70 | 60 | 60 |
| பயிற்றை | 80 | 100 | 120 | 100 | 120 |
| பாகல் | 100 | 200 | | | 140 |
| கருணைக்கிழங்கு | 120 | | | 85 | 120 |
| பெ.வெங்காயம் | 100 | 100 | 85 | 100 | 90 |
| சி.வெங்காயம் | 250 | 350 | | 240 | 300 |
| பூசணி | 70 | 100 | 60 | 80 | 80 |
| தக்காளி | 150 | 160 | 120 | 150 | 160 |
| வாழைக்காய் | 60 | 80 | | 30 | 40 |
| கீரை | 25 | 30 | | 20 | 10 |
| பொன்னாங்காணி | 25 | 40 | | 25 | 30 |
| பச்சை மிளகாய் | 300 | 400 | 200 | 400 | 320 |
| புடோல் | 100 | 100 | 50 | 100 | 80 |
| கோவா | 120 | 200 | 140 | 200 | 160 |
| வெண்டி | 100 | 120 | 60 | 100 | 80 |
| போஞ்சி | 150 | 240 | | 160 | 240 |
| லீக்ஸ் | 120 | 140 | 100 | 140 | 120 |
| தேங்காய் | 70 | 60 | | 60 | 60 |
| உருளைக்கிழங்கு | 100 | 120 | 80 | 100 | 120 |
| தேசிக்காய் | 100 | 80 | 10 | 80 | 60 |
| வல்லாரை | 20 | 20 | | 10 | 15 |
| கறிமிளகாய் | 200 | 400 | 240 | 160 | 280 |
| இராசவள்ளி | 200 | - | | - | 300 |
| முருங்கைக்காய் | 250 | 300 | 200 | 150 | 140 |

# நீதியமைச்சருக்கு எதிராக நேற்று ஆர்ப்பாட்டம்

கொழும்பு, ஜூன் 22

முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக்காலத்தில் ஊடகவியலாளர்கள் மற்றும் மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் அச்சுறுத்தப்பட்டமை நல்லாட்சி அரசின் ஆட்சிக்காலத்திலும் தொடர்வதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

சட்டத்தரணி லக்சான் டயஸ் மீதான அச்சுறுத்தல்களும் இதன் ஒரு வெளிப்பாடு எனத் தெரிவித்த மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள், நாட்டில் இனவாத மற்றும் மதவாத வன்முறையை ஏற்படுத்த முயற்சிப்பதாகவும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மைத்திரி - ரணில் நல்லாட்சி அரசின் ஆட்சிக்காலத்தில் 195 ற்கும் அதிகமான கிறிஸ்தவ மத வழிபாட்டு தலங்கள் பௌத்த பிக்குகளினால் தாக்கப்பட்டதாகச் சட்டத்தரணி லக்சான் டயஸ் தெரிவித்திருந்தார்.

எனினும் எந்தவொரு கிறிஸ்தவ தேவாலயங்களும் தாக்கப்படவில்லையென கருதினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்ததாக அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன மற்றும் நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்ச ஆகியோர் தெரிவித்திருந்தனர்.

இந்த நிலையில் உண்மைக்குப் புறம்பான கருத்துக்களை வெளியிட்டமைக்காகச் சட்டத்தரணி லக்சான் டயஸ் பொது மன்னிப்புக் கோரவேண்டும். இல்லாவிட்டால் பதவி விலகவேண்டும் என நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்ச தெரிவித்திருந்தார்.

நீதியமைச்சரின் கருத்துக்கு எதிராக இனவாதத்துக்கு எதிரான கூட்டமைப்பு மற்றும் மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் நேற்று கொழும்பு புறக்கோட்டை தொடருந்து நிலையத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் இனவாதிகளை இனவாதிகள் என்று தானே அழைக்க முடியும், நீதியமைச்சர் பதவி விலகவேண்டும் உள்ளிட்ட வாசகங்களைத் தாங்கியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர். (த)

# சிறுகதைத் தொகுதி சனியன்று வெளியீடு

யாழ்ப்பாணம், ஜூன் 22

இணுவையூர் சிதம்பரதிருச்செந்திநாதன் எழுதிய சிறுகதைத் தொகுதியான மருத்துவர்களின் மரணம் நூல் வெளியீட்டு விழா நாளைமறுதினம் சனிக்கிழமை இடம்பெறவுள்ளது.

இணுவில் மத்திய கல்லூரி தலைமை மண்டபத்தில் பிற்பகல் 3 மணிக்கு இந்த நூல் வெளியீட்டு விழா நடைபெறவுள்ளது. அமரத்துவமடைந்த திருமதி இராஜநாயகி சிதம்பரத்திருச்செந்திநாதன் நினைவுக்காக இந்த நூல் வெளியிடப்படுகிறது.

பேராசிரியர் கே.தேவராஜாவின் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் தலைமை விருந்தினராக யாழ்ப்பாண மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் கலந்துகொள்கிறார். (ம)

# யாழ்.மாநகர சபையால் கால அவகாசம் நீடிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 22

சைவ சமய விவகாரக்குழுவினால் வருடந்தோறும் நல்லூர் உற்சவ காலத்தில் வெளியிடப்படும் நல்லைக்குமரன் மலர் வெளியீட்டுக்கான ஆக்கங்கள் கோரப்படும் இறுதித் திகதி நீடிக்கப்பட்டுள்ளது.

அவ்வாறே பாடசாலை மாணவர்களுக்கு நடத்தப்படும் பரீட்சை விண்ணப்பத்துக்கான முடிவுத்திகதியும் நீடிக்கப்பட்டது. இவை இரண்டுக்குமான காலம் எதிர்வரும் 25ஆம் திகதிக்கு நீடிப்புச் செய்யப்பட்டுள்ளது என்று யாழ்ப்பாண மாநகர ஆணையாளர் தெரிவித்தார். (4)

# கொடிகாமத்தில் கண்காட்சி

தென்மராட்சி ஜூன் 22

கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி மாணவர்களால் உருவாக்கப்பட்ட ஆக்கப்பொருள்களின் காட்சிப்படுத்தலும் சகல வசதிகளுடன் நவீனமயப்படுத்தப்பட்ட வகுப்பறைத் திறப்பு விழாவும் இன்று மு.ப.10 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் இடம்பெறும்.

கல்லூரி அதிபர் கு.ரவீந்திரா தலைமையில் நடைபெறும் இந்தநிகழ்வுக்கு தலைமை விருந்தினராக தென்மராட்சி வலயப் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் கலந்து கொள்வார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (4, 9)

# தொட்டியில் இறந்த குழந்தையை இழுத்து வெளிப்படுத்திய நாய்

## தாயார் கைதாகி சிகிச்சையில்

வவுனியா, ஜூன் 22

பிறந்த குழந்தை கழிவறைத் தொட்டியில் இறந்து காணப்பட்டபோது நாய் ஒன்று அதனை இழுத்து வந்ததால் பரபரப்பு ஏற்பட்டது. அதனைப் பெற்றெடுத்தார் என்று குற்றஞ்சாட்டப்படும் தாய் கைதாகி விசாரணையில் உள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் வவுனியாவில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்றது.

கழிவறையினுள் இந்த குழந்தையை பிரசவித்துள்ள அந்த பெண், குழந்தையை கழிவறை தொட்டியிலிட்டு கொலை செய்துள்ளதாக பிரதேசவாசிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர். ஆனால் சிசு பிறந்தவுடனேயே உயிரிழந்து விட்டது. அதனால் குழந்தையை கழிவறைத் தொட்டியிலிட்டதாக அந்த பெண் கூறியுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அந்த பெண்ணின் கணவர் இரண்டு வருடங்களுக்கு முன்னர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த பெண் பொலிஸ் பாதுகாப்பில் வவுனியா மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவருகிறார். குழந்தையின் சடலம் தொடர்பான உடற்கூற்றுப் பரிசோதனைக்காக வவுனியா மருத்துவனையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (4)

# உண்ணீர் சொருவிக்கும் சிறப்பு வழிபாடு ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 22

சமரச சுத்த சன்மார்க்க சத்திய ஞான கோட்டம் நடத்தும்

உண்ணீர் சொருவிக்கும் சிறப்பு வழிபாடும் அகில உலக சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்க மகாநாடும் நேற்று ஆரம்பமாகியது.

உயிர் இரக்கத்தின் வழிநின்று உலக சகோதரத்துவத்தை வளர்த்தல் என்னும் கருப்பொருளில் இந்த நிகழ்வு மீசாலை வடக்கு கொடிகாமத்தில் அமைந்துள்ள சமரச சுத்தசன்மார்க்க சத்தியஞான கோட்டத்தில் நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன. நிகழ்வுகள் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 9 ஆம் திகதி வரை இடம்பெறும்.

தூர இடத்திலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் வந்து கலந்துகொள்கின்ற அன்பர்களுக்குத் தங்குமிட வசதியும் பசியாற்றுவித்தலும் இதர ஒழுங்குகளும் செய்து தரப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (4)

# வல்வெட்டியில் கௌரவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 22

பல்கலைக்கழகத்துக்கு 2016 ஆம் ஆண்டு தெரிவான மாணவர்களுக்கான கௌரவிப்பு விழா இன்று பி.ப ஒரு மணிக்கு வல்வெட்டித்துறை சிதம்பரக் கல்லூரி மாநாட்டு மண்டபத்தில் வல்வெட்டித்துறை சிதம்பரக் கல்லூரி அதிபர் சி.குருகுலசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் சி.புஸ்பலிங்கம் கலந்துகொள்ளவுள்ளார். (4)

# இராமாவிலில் இன்று தேர்

மீசாலை, ஜூன் 22

மீசாலை வடக்கு இராமாவில் கந்தசுவாமி கோயில் தேர்த்

திருவிழா இன்று வியாழக்கிழமை இடம்பெறும். நாளை தீர்த்தத் திருவிழா இடம்பெறும்.

கோயிலில் கடந்த 14ஆம் திகதி புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. (4)

# தரம் 5 பரீட்சை ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 22

தரம் 5 வகுப்புகளில் கற்கும் மாணவர்களுக்கான மாகாண நிலை ஆறாவது மாதிரிப் பரீட்சை நாளை மறுதினம் சனிக்கிழமை நடைபெறவிருந்த நிலையில் முஸ்லிம் மாணவர்களின் நலன் கருதி ஒத்திவைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. இந்தப் பரீட்சை ஜூலை முதலாம் திகதி சனிக்கிழமை மு.ப.9 மணிக்கு பாடசாலைகளில் நடைபெறுமென்று மாகாணக் கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் அறிவித்துள்ளார். நோன்பு காலத்தில் மாதிரிப் பரீட்சை நடத்தப்படுவதாக பெற்றோர் முறையிட்டதையடுத்து பரீட்சை நடைபெறும் திகதியில் மாற்றஞ் செய்யப்பட்டுள்ளதென்று அவர் மேலும் அறிவித்துள்ளார். (4-9)

இது புதுசு

ரம்ழான் புது வரவாக ஆண்களுக்கான ரெனிம் ஜீன்ஸ் வகை கள் சில தற்போது சந்தைக்கு வந்துள்ளன. இவை 3 ஆயிரம் ரூபாவிலிருந்து விற்பனை செய்யப்படுகின்றன.



# வடமாகாணத்துக்கு வெளியே கிரவலை கொண்டு செல்வதால் எழுந்த பிரச்சினைக்குத் தீர்வு

## மைத்திரி கூறினார் என்று அதிகாரிகள் தெரிவிப்பு

யாழ்ப்பாணம் ஜூன் 22
வடக்கு மாகாணத்தில் இருந்து பெருமளவு கிரவல் மண் வெளியேற்றப் படுவது தொடர்பில் வவுனியா மாவட்டச் செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் முக்கிய பிரச்சினைக்குரிய விடயமாகச் சுட்டிக்காட்டப்பட்டது. அது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்குமாறும் கோரப்பட்டது. இது குறித்துச் சாதகமான பதிலை அரச தலைவர் பெற்றுத் தருவதாகக் கூறி யுள்ளார் என்று கூறப்பட்டுள்ளதாக மாவட்டச் செயலக அதிகாரிகள் தெரிவித்தனர்.



வடக்கு மாகாணத்திலிருந்து கிரவல் மண் அதிகளவு வெளியேற்றப்படுவதால் வடக்கு மாகாணத்தில் உள்ள கட்டட வேலைகள் மற்றும் வீதித் திருத்த வேலைகளுக்குக் கிரவல் மண் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக கடந்த மே மாதம் வவுனியா மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் வவுனியா மாவட்ட உதவிச் செயலர் சுட்டிக்காட்டினார். கிரவல் மண் அதிகமாக அகழ்ப்படுவதால் எதிர்காலத்தில் பெருந் தட்டுப்பாடு நிகழும் என்றும் தெரிவித்திருந்தார். கனிய வளங்களைப் பாதுகாக்கும் நோக்கில் வனப்பகுதியில் மணல் அகழ்வதைச் சுற்றாடல் அமைச்சு தடை செய்துள்ளது. இதானால் உள்ளூரில் காணப்படும் கிரவல் மணல் மேடுகளில் இருந்து அதிகளவான கிரவல் மணல் அகழப்படுகின்றது.

இது பற்றி இணைத்தலைமைகளான வடக்கு மாகாண முதலமைச்சர் மற்றும் அமைச்சர் ரிசாட் பதியுதீன் ஆகியோரின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது.
இந்தக் கிரவல் மண் அகழ்தல் தொடர்பாக அபிவிருத்தி சார்ந்த கூட்டம் ஒன்றில் அரச தலைவரின் கவனத்துக்கு இணைத்தலைவரினால் கொண்டுவரப்பட்டது. அதனையடுத்து இது தொடர்பான சாதகமான நடைமுறையினை விரைவில் கொண்டு வருவதாக அரச தலைவர் தெரிவித்ததாக வவுனியா மாவட்டச்செயலக அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர். (4-ரி)

# மக்களுக்கு வழங்கிய வாக்குறுதியை இராணுவம் நிறைவேற்றவேண்டும்

## கால அவகாசம் நிறைவடைந்தும் காணி விடுவிக்காமைக்குக் கண்டனம்



யாழ்ப்பாணம், ஜூன் 22
முல்லைத்தீவு மாவட்டம் கேப்பாபிலவு பகுதியில் இராணுவம் அபகரித்து வைத்திருக்கும் தமிழ் மக்களின் நிலங்களை விடுவிப்பதாக ஒப்புக்கொண்ட நிலப்பரப்புக்கள், இராணுவத்தினரால் கோரப்பட்ட காலப்பகுதி முடிவடைந்தும் இன்னும் விடுவிக்கப்படவில்லை. இது கண்டனத்துக்குரியது. சொன்ன சொல்லை ராணுவத்தினர் காப்பாற்ற வேண்டும். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இ.சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
முல்லைத்தீவு மாவட்டம் கேப்பாபிலவு பகுதியில் இராணுவம் அபகரித்து வைத்திருக்கும் தமிழ் மக்களின் நிலங்களை விடுவிப்பதாக ஒப்புக்கொண்ட நிலப்பரப்புக்களை விடுவிப்பதற்கு இராணுவம் ஓர் கால அவகாசத்தைக் கோரியிருந்தது. அந்தக் காலப்பகுதி முடிவடைந்தும் நிலங்கள் விடுவிக்கப்படாதமை கண்டனத்துக்குரியது. ஏனெனில் குறித்த நிலங்களின் உரிமையாளர்கள் இன்று 114 நாள்களாக வீதியில் போராடி வருகின்றனர்.
இந்த மக்களின் போராட்டம் உச்சம் பெற்றபோது குறித்த நிலத்தில் இருந்து 70 ஏக்கர் நிலப்பரப்பை மட்டும் வைத்துக்கொண்டு எஞ்சிய நிலப்பரப்பை முதல் கட்டமாக விடுவிக்கின்றோம். அதற்கு 6 வார கால அவகாசம் தாருங்கள். அப்பகுதியில் உள்ள படை நிலைகளை மறுபகுதிக்கு மாற்றுவதற்கான செலவுப் பணத்தை தாருங்கள் என்றும் படைத்தரப்பு கோரியிருந்தது. இதன் பிரகாரம் குறித்த மக்கள் 6 வாரம் பொறுமை காத்த தோடு படையினர் கோரிய பணத்தை மீள்குடியேற்ற அமைச்சும் வழங்கியிருந்தது.
இந்த நிலையிலும்கூட படையினர் தாம் அளித்த வாக்குறுதியின் பிரகாரம் செயற்படவில்லை. 6 வார கால அவகாசம் கோரிய படையினர் தற்போது 8 வாரகாலஅவகாசம்முடிவடைந்தும்கூட அந்த நிலப்பரப்புக்களை விடுவிக்க முன்வரவில்லை. அங்கே வீதியில் காவல் இருக்கும் மக்களின் நாள்களை எண்ணி படையினரும் இந்த அரசும் ரசிக்கின்றனரா என்பதனையே நான் கேட்க விரும்புகின்றேன்.
இதேவேளை இரணைதீவு மக்கள் தமது தீவை விடுவிக்குமாறு மேற்கொள்ளும் போராட்டம் நீடிக்கும் நிலையில் இராஜாங்க அமைச்சர் ருவான் விஜயவர்த்தனா நேரில் வந்து பார்வையிட்டு பதிலளிப்பார் என்று கூறப்பட்டு ஒரு மாதம் கடந்து விட்ட நிலையில் அந்த விடயமும் நடக்கவில்லை. இந்த மக்களும் தெருவில் கிடக்கின்றனர். எனவே இவர்களின் கண் முன்னே காணப்படும் நிலங்களைக்கூட விடுவிக்க முடியாத அரசு காணாமல்போய் மறைந்துள்ளவர்களைக் கண்டுபிடித்து தரு வார்கள் என்று எவ்வாறு நம்பிக்கை கொள்வது? இவ்வாறு கேள்வி எழுப்பினார். (4-101)

# நெடுந்தீவைப் பாதுகாக்க தடுப்பு அணை விரைவில்

## பிரதேச மக்களின் கோரிக்கைக்கு மாவட்ட அதிகாரிகள் நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 22
நெடுந்தீவுக் கடற்கரையைக் கடலரிப்பில் இருந்து பாதுகாப்பதற்கு கடற்கரையோர பாதுகாப்பு திணைக்களத்தின் உதவியுடன் தடுப்பு அணை கட்டப்படும் என்று மாவட்டசெயலக அதிகாரிகள் தெரிவித்தனர்.
நெடுந்தீவு பிரதேசத்தை அபிவிருத்தி செய்வது தொடர்பிலான கலந்துரையாடல் நெடுந்தீவு பிரதேச செயலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதில் இந்தப் பிரச்சினை தொடர்பில் சுட்டிக்காட்டப்பட்டது. அக் கூட்டத்தில் கலந்துகொண்ட மக்கள் பிரதிநிதிகள் தெரிவிக்கையில்,
"நெடுந்தீவு பிரதேசம் நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்ட பிரதேசம். எமது பிரதேசத்தை கடலரிப்பில் இருந்து பாதுகாப்பதற்கான திட்டங்களோ அல்லது அதற்கான ஏற்பாடுகளோ இதுவரையில்லை. அதனால் எமது பிரதேசம் கடலரிப்புக்குள்ளாகி எமது தீவின் நிலப்பகுதி படிப்படியாகக் கடலுக்குள் போய்க்கொண்டிருகின்றது. இதற்குத் தீர்வு காணாதுவிட்டால் எமது நாட்டுக்கு அயல்நாடான இந்தியாவில் அத்துப்பட்டி என்ற கிராமம் வரைபடத்தில் இருந்து காணாமல் போனதுபோல எமது நாட்டில் நெடுந்தீவு பிரதேசம் என்ற ஒன்றே இல்லாது போய்விடுகின்ற அபாயம் ஏற்பட்டுள்ளது. 1965 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் ஏற்பட்ட சூறாவளியின் போது நெடுந்தீவின் ஒரு பகுதி மிக மோசமாக அரிக்கப்பட்டு சிறுபகுதி நீருக்குள் போய்விட்டது. இனிவரும் காலங்களிலும் இவ்வாறான இடர் ஏற்படலாம். அவ்வாறு ஏற்பட்டால் எமது பகுதி மேலும் சடுதியாக மூழ்கும் அபாயம் உள்ளது.
இதனை உணர்ந்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடி நடவடிக்கை எடுத்து எமது தீவு அழிவடையாது பாதுகாத்துத் தருமாறு கேட்கின்றோம்" என்றனர்.
இதற்குப் பதிலளித்த மாவட்டச் செயலக அதிகாரிகள், "நெடுந்தீவு பிரதேசத்தின் கரையோரப்பகுதிகள் கடலரிப்புக்குள்ளாவது தொடர்பில் நாம் ஆராய்ந்து வருகின்றோம். நாம் கடற்கரையோர பாதுகாப்புத் திணைக்கள அதிகாரிகளுடன் இணைந்து இதற்கான தீர்வினை வழங்குவது தொடர்பில் ஆலோசிப்போம். நாமும் குறித்த திணைக்களமும் இணைந்து நெடுந்தீவில் கடல் தடுப்பு அணைகள் கட்டுவதற்கான நடவடிக்கைகளை எடுப்போம்" என்றனர். (4-8)

## ரி.ஐ.டியினரின் நெருக்குதலால்

# வள்ளுவர் சிலையிலிருந்த 'ஈழம்' நேற்று நீக்கம்




கிளிநொச்சி, ஜூன் 22
கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபை வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள திருவள்ளுவர் சிலையை தாங்கியுள்ள உலக பட மாதிரி பீடத்தில் எழுதப்பட்டிந்த "ஈழம்" எனும் சொல் தொடர்பில் பயங்கரவாத விசாரணைப் பிரிவினர் துருவித் துருவி விசாரணை நடத்தினர். அதனையடுத்து ஈழம் என்ற சொல் நேற்று நீக்கப்பட்டது.
கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபை வளாகத்தில் உலக தமிழ்ச் சங்கம் அன்பளிப்புச் செய்த திருவள்ளுவர் சிலை கடந்த சனிக்கிழமை திரை நீக்கம் செய்யப்பட்டது.
திருவள்ளுவரின் திருக்குறள் உலக பொது மறை என்பதனால் திருவள்ளுவரின் சிலையை உலகத்தின் மீது இருப்பது போன்று சிலை தாங்கியை வடிவமைக்க கிளிநொச்சி தமிழ்ச் சங்கம் தீர்மானித்தது. அதன்படி உலக நாடுகள், கண்டங்கள், சமுத்திரங்களின் பெயர்கள் எழுதப்பட்டு சிலை தாங்கியும் அமைக்கப்பட்டிருந்தது. இதில் இலங்கையை அதன் மற்றொரு பெயரான "ஈழம்" என்று எழுதப்பட்டு அடைப்புக்குறிக்குள் இலங்கை என எழதப்பட்டிருந்தது.
இதுவே பயங்கரவாத தடுப்பு பிரிவினருக்குச் சர்ச்சையாக காணப்பட்டது. அதனால் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கொழும்பில் இருந்து வருகை தந்திருந்த பயங்கரவாத தடுப்பு பிரிவினர் சிலையை அமைப்பதற்கு சபையின் வளாகத்தில் அனுமதி வழங்கிய கரைச்சி பிரதேச சபையின் செயலரை சென்று விசாரித்ததோடு, ஈழம் எனும் சொல் இன முரண்பாட்டை, பிரிவினையை ஏற்படுத்தும் சொல் எனவும் தனி நாட்டை பிரதிபலிக்கிறது என்றும் எனவே அந்தச் சொல்லை பயன்படுத்த முடியாது என்றும் தெரிவித்து திருவள்ளுவர் சிலையின் சிலைதாங்கியில் உள்ள ஈழம் எனும் சொல்லை அழித்துவிடுமாறும் தெரிவித்துச் சென்றுள்ளனர்.
அதன்படி ஈழம் என்ற சொல் அழிக்கப்பட்டது. இந்தச் செயற்பாடு மக்கள் மத்தியில் பெரும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது. பாடவிதானங்களில் கூட இலங்கையின் மறுபெயர்களில் ஒன்றாக ஈழம் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்தோடு காரைநகர் சிவன் கோவிலை ஈழத்துச் சிதரம்பரம் என்றே அழைக்கின்றார்கள், தேவார அம்சங்கள், காப்பியங்கள் முதல் பல்வேறு சமய மற்றும் இலக்கியங்களில் ஈழம் என்ற சொல் பயில் நிலையிலுள்ளது.
இதனைத் தவிர தற்போது வடக்கில் ஈழம், தமிழீழம் எனும் சொற்களுடன் ஆரம்பிக்கப் படுகின்ற பல அரசியல் கட்சிகள் சட்ட ரீதியாக இயங்கி வருகிறமை குறிப்பிடத்தக்கது. (4-35)

# பிரதேச செயலருக்கு மிரட்டல்!

## பொலிஸில் முறைப்பாடு

யாழ்ப்பாணம், ஜூன் 22
முல்லைத்தீவு மாவட்டம் துணுக்காய் பிரதேச செயலாளருக்கு எதிராக இனந்தெரியாதோரால் கொலை அச்சுறுத்தல் விடப்பட்டுள்ளது. இது தொடர்பில் மல்லாவி பொலிஸாரிடம் முறையிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.
துணுக்காய் பிரதேச செயலாளராக பணிபுரியும் இ.பிரதீபனுக்கு இவ்வாறு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக எழுத்து மூலமாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மல்லாவிப் பிரதேசத்தில் உள்ள பொது அமைப்புக்கான காணி விடயம் தொடர்பில் இந்த அச்சுறுத்தல் விடப்பட்டுள்ளதாக அவரால் அதில் கூறப்பட்டிருக்கிறது.
அச்சுறுத்தல் தொடர்பில் நேற்றுமுன்தினம் மாலையில் பிரதேச செயலாளரினால் மல்லாவிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. விசாரணை செய்வதாகப் பொலிஸாரால் கூறப்பட்டது. (4-101)

ஸ்ரீ வெங்கடேஸ்வர மஹாவிஷ்ணு கோவில்

ஹேவிளம்பி வருடம் ஆனித்திங்கள் 25ம் நாள் (09-07-2017) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு

புதிதாக நிர்மாணிக்கப்பட்ட 92 அடி உயர இராஜகோபுரம் மற்றும் பரிவாரமூர்த்திகளுக்கும்,

மஹாகும்பாபிஷேக அழைப்பு



மெய்யன்பர்களே!

இலங்கை திருநாட்டின் கங்கையும், கடலும் சங்கமிக்கும் முகத்துவாரம் பதியில் வீற்றிருக்கும் அருள்மிகு ஸ்ரீ பூமிநீளா பத்மாவதி கோதாநாயகி ஸமேத ஸ்ரீ வெங்கடேஸ்வர மஹாவிஷ்ணு, ஸ்ரீ தும்பிக்கை ஆழ்வார், ஸ்ரீ அஷ்டலட்சுமி, ஸ்ரீ முத்துமாரியம்மன் உட்பட கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள பரிவாரமூர்த்திகளுக்கும், புதிதாக நிர்மாணம் செய்யப்பட்ட சந்ததள 92 அடி உயர இராஜகோபுரத்திற்கும், நிகழும் மங்களகரமான ஹேவிளம்பி வருடம் ஆனித்திங்கள் 25ம் நாள் (09-07-2017) ஞாயிற்றுக்கிழமை, பூராட நட்சத்திரமும், பூரணை திதியும், சிம்ம லக்கினமும், சித்த யோகமும் கூடிய சுபமுகூர்த்த நேரமான காலை 9.00 மணிக்கு மஹாகும்பாபிஷேகம் நடாத்திட திருவருள் கூடியுள்ளது.

புதிதாக நிர்மாணிக்கப்பட்ட காலைபரவருக்கும் மஹாகும்பாபிஷேகம் நடைபெறும்.

திருப்பதி ஆலயத்தின் ஆகம முறைப்படி, திருப்பதி ஆலயத்தின் பட்டாச்சாரியார்களினால் நடாத்தப்படும் பூஜை நிகழ்வுகளின் விபரம்...

07-07-2017 - ஆனித்திங்கள் 23ம் நாள் வெள்ளிக்கிழமை
காலை 8.00 மணிக்கு 8ம் கால யாக பூஜை, பூர்ணாகுதி
மாலை 4.30 மணிக்கு 9ம் கால யாக பூஜை, பூர்ணாகுதி

05-07-2017 புதன்கிழமை, 06-07-2017 வியாழக்கிழமை, 07-07-2017 வெள்ளிக்கிழமை ஆகிய 03 தினங்களிலும்
காலை 7.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை எண்ணெய்க்காப்பு சாத்துதல் நடைபெறும்.

08-07-2017 - ஆனித்திங்கள் 24ம் நாள் சனிக்கிழமை பௌர்ணமி தினத்தன்று
காலை 8.00 மணிக்கு 10ம் கால யாக பூஜை, பூர்ணாகுதி. மாலை 4.30 மணிக்கு புண்ணியாக வாசனம், பிம்பசுத்தி, ரக்ஷ்சாபந்தனம், 11ம் கால யாக பூஜை, திரவிய விசேட ஹோமம், ஸ்பர்சாகுதி, பூர்ணாகுதி.

காலை 9.00 மணிக்கு புதிதாக நிர்மாணிக்கப்பட்ட
92 அடி உயர இராஜகோபுரம் மற்றும் பரிவாரமூர்த்திகளுக்கும்
மஹாகும்பாபிஷேகம்
மிகச்சிறப்பாக நடைபெறும்.

இங்ஙனம் : ஆலய அறங்காவலர்கள்.

Sri Venkateshwara MahaVishnu Temple :
100, Temple Road, Modera, Colombo 15, Sri Lanka. Tel: 011 2524014 / 0753727272, 0777 364 944 / 0777867867


# அமைச்சருக்கு இல்லாத அதிகாரத்தில் முறைகேடு இடம்பெற்றது எவ்வாறு?

வடக்கு மாகாண அமைச்சர்களுக்கு எதிராக சுமத்தப்பட்ட நிதிமோசடி, அதிகார முறைகேடு, பாரபட்சம், ஊழல் மற்றும் ஒழுக்கரீதியான குற்றச்சாட்டுகள் தொடர்பாக விசாரணை செய்த விசாரணைக்குழுவின் அறிக்கை தொடர்பில் கல்வி அமைச்சர் த.குருகுலராசா முதலமைச்சருக்கு முன்வைத்த தன்னிலை விளக்க அறிக்கையின் இரண்டாவது பகுதி

ஆ) இலங்கை அரசமைப்புச் சட்டம் 154F(1) இன் பிரகாரம் மாகாண அமைச்சரவை அமைக்கப்பட்டு அதனால் வழங்கப்படும் ஆலோசனைகளில் ஆளுநர் தனது நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். எனவே நிர்வாகம் தொடர்பான ஆளுநரின் அதிகாரங்கள் வேறொருவருக்கு கையளிக்கப்படுமாயின் அது தொடர்பான ஆலோசனைகளை வழங்கும் அதிகாரம் இயல்பாகவே அமைச்சரவைக்கு உரியதாகிறது.

## அமைச்சரின் ஆலோசனை குறித்து விசாரிக்க முடியாது

இ) இலங்கை அரசமைப்புச் சட்டம் 154F(3) இன் பிரகாரம் "அமைச்சர்களால் ஆளுநருக்கு ஆலோசனை எதுவும் வழங்கப்பட்டதா? அப்படியாயின் என்ன ஆலோசனை வழங்கப்பட்டது? என்றும் பிரச்சினை நீதிமன்றம் எதிலும் விசாரணை செய்யப்படுதல் ஆகாது". எனவே அமைச்சரவைப் பத்திரங்கள் குறித்து கேள்வி எழுப்பவோ, விசாரிக்கவோ ஆன அதிகாரம் எந்த நீதிமன்றத்துக்குமோ இந்த விசாரணைக்குழுவுக்கோ கிடையாது என்பது இங்கு சுட்டி க்காட்டப்படுகிறது. அவ்வாறு விசாரிக்கப்படுவது அரசமைப்புச் சட்டத்தை மீறுவதாக அமைகிறது என்பது மீளவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

## முறைப்பாடு 3.1 க்கான விளக்கம்

3.1வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சிவபாதம் நந்தகுமார் என்பவர் 58 வயது 3 மாதங்கள் கடந்துள்ள நிலையில், அவருக்கு 16.01.2017இல் தவறான இடமாற்றம் ஒன்றை வழங்கி இருந்தமை மூலம் அதிகார முறைகேடு செய்தமை.

வடக்கு மாகாண சபை உறுப்பினர் சந்திரலிங்கம் சுகிர்தனால் முன்வைக்கப்பட்ட மேற்குறித்த குற்றச்சாட்டு தொடர்பாக,

இந்த விடயம் முற்றிலும் கல்வி அமைச்சின் செயலாளருக்குரியது. நேரடியாக இது தொடர்பாக எந்தவித அதிகாரமும் எனக்கு இல்லை. இல்லாத அதிகாரத்தில் முறைகேடு செய்திருக்கமுடியாது. ஆயினும் இந்த விடயம் தொடர்பாக குறிக்கப்பட்ட அமைச்சின் அமைச்சர் என்ற வகையில் பின்வரும் விளக்கத்தை அளிக்கிறேன்.

## முறைப்பாட்டுக் குழுவின் பரிந்துரையிலேயே கல்விப் பணிப்பாளர் நியமனம்

சிவபாதம் நந்தகுமார் இலங்கை கல்வி நிர்வாக சேவையில் நியமிக்கப்பட்டது முதல் தொடர்ந்து இடமாற்றம் ஏதுமின்றி வடமராட்சி வலயக் கல்வி அலுவலகத்தில் பல்வேறு கடமைகளை 2017.01.15 வரை கடமையாற்றிக் கொண்டிருந்தார். 2011ஆம் ஆண்டு அவரை சிறப்புத் தர மூத்த அலுவலர்கள் அதே அலுவலகத்தில் பணியாற்றிக் கொண்டிருந்த வேளையில் முறையற்ற வகையில் வலயக் கல்விப் பணிப்பாளர் பதவியைப் பெற்றுக்கொண்டார். இந்த நியமனத்தால் இவரை சிறப்புத் தர மூத்த நிலையில் இதே அலுவலகத்தில் கடமையாற்றிக் கொண்டிருந்த சி.புஸ்பலிங்கம் பாதிக்கப்பட்டமையால் அவர் முறையற்ற நியமனங்கள், பதவியுயர்வுகள் மற்றும் இடமாற்றம் தொடர்பான முறைப்பாட்டுக் குழுவின் தலைவருக்கு 2016.12.08 திகதிய முறைப்பாடு வழங்கியிருந்தார்.

இந்த முறைப்பாட்டுக்கு முறையற்ற நியமனங்கள், பதவியுயர்வுகள் மற்றும் இடமாற்றம் தொடர்பான முறைப்பாட்டுக் குழுவின் தலைவரால் NP/COS/AD/02/MN/EDU/PE இலக்க 2016.09.15ஆம் திகதி செயலாளருக்கு எழுதிய கடிதத்தில் "வடமராட்சி கல்வி வலயத்தின் கல்விப் பணிப்பாளராக தற்போது கடமையாற்றும் சி.நந்தகுமார் அதே



வலயத்தில் 17 வருடங்களாக சேவை செய்து வருகின்றார். அதே கல்வி வலயத்தில் கல்வி முகாமைத்துவ பிரதிக் கல்விப் பணிப்பாளராக சிற்றம்பலம் புஸ்பலிங்கம் கடமையாற்றி வருகின்றார். புஸ்பலிங்கம் சேவை மூப்பு அடிப்படையில் சி.நந்தகுமாரைவிட மூத்த பட்டியலில் உள்ளவர்களோடு ஓய்வு பெறுவதற்கு இன்னும் 10 மாதங்களே உள்ளன. அவரிலும் பார்க்க சேவை மூப்புக் குறைந்த ஒருவர் கல்விப் பணிப்பாளராக அதே வலயத்தில் பணியாற்றும்போது அதன் காரணமாக உளரீதியாக பாதிக்கப்படும் ஒருவராக குறித்த அலுவலர் விளங்குவதை எமது குழு அனுதாபத்துடன் நோக்குகின்றது" என்பதால்,

- சி.புஸ்பலிங்கம் அவர்களுக்கு ஒரு சந்தர்ப்பமாக வடமராட்சி கல்வி வலயத்தின் பணிப்பாளராக நியமனம் செய்தல்
- 2016 ஒகஸ்ட் மாதத்துடன் முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளராக கடமையாற்றும் அலுவலர் சேவையிலிருந்து ஓய்வு பெறவுள்ளதால் அந்த வலயத்துக்குப் பணிப்பாளராக கடமையாற்றுவதற்கு சி.நந்தகுமாருக்கு இடமாற்றம் வழங்குதல்.

என்ற தமது பரிந்துரைகளை அந்தக் குழு முன்வைத்தது.

அதேவேளை முறையற்ற நியமனங்கள், பதவியுயர்வுகள் மற்றும் இடமாற்றம் தொடர்பான முறைப்பாட்டுக் குழுவின் தலைவரால் NP/COS/AD/02/PE இலக்க 2016.10.10ஆம் திகதிய கடிதமூலம் முதலமைச்சருக்கு முகவரியிட்டு எனக்குப் பிரதியிட்டு எழுதிய கடிதத்தில் "புஸ்பலிங்கம் அவர்கள் இளைப்பாறுவதற்கு இன்னும் சில மாதங்களே உள்ள நிலையில் மேற்குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்ச்சியாக அவருக்கு இழைக்கப்பட்ட பாரதூரமான அநீதிகள் என்பதை வெளிப்படுத்தும் சான்றுகளாக உள்ளன. இவருடைய முறைப்பாடு தொடர்பாக இந்தக் குழு விரிவாக ஆராய்ந்ததுடன் அவருக்கு இழைக்கப்பட்ட அநீதி தொடர்பில் மிகுந்த வருத்தமடைகிறது. அவருக்கு ஏற்பட்ட மன உளைச்சல்கள், விரக்திகள், பாதிப்புக்களை இந்தக் குழுவால் உணரக்கூடியதாக உள்ளது. அவர் இளைப்பாறுவதற்கு இன்னும் சில மாதங்களே உள்ள நிலையில் அவருக்கு வழங்கப்படும் குறைந்தபட்சத் தீர்வாக அவருக்கு உடன் நடைமுறைக்கு வரக்கூடியதாக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளராக நியமிப்பதற்கு ஏற்ற நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும், உறுதியுடன் இந்தக் குழு பரிந்துரைக்கிறது" என பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

இந்தப் பரிந்துரைக்கு முதலமைச்சர் ; NP/CM/CS/03/68 இலக்க 2016.11.07ஆம் திகதி செயலாளருக்கு அறிவுறுத்தி எனக்கும், முறையற்ற நியமனங்கள் பதவியுயர்வு தொடர்பான விசாரணைக்குழுவின் தலைவருக்கும் பிரதியிட்ட கடிதத்தில் "இந்த விடயம் சார்பாக மேற்படி விசாரணைக்குழுவின் தலைவரின் பரிந்துரைக்கு அமைவாக ஏற்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு மேற்படி முறைப்பாட்டுக் குழுவுக்கும் எனக்கும் அறிக்கையிடவும்" எனவும் குறிப்பிட்டிருந்தார்.

இதற்கமைய கல்வி அமைச்சின் செயலாளரால் அமைச்சரவைப் பத்திரம் தயாரிக்கப்பட்டு 2016.12.05இல் நடைபெற்ற 46ஆவது அமைச்சரவைக் கூட்டத்தில் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டது.(இல : கஅ/பத்திரம்/78/2016) அமைச்சரவையால் வடமராட்சி கல்வி வலயத்தில் பிரதிக் கல்விப் பணிப்பாளராக கடமையாற்றிக் கொண்டிருந்த இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் 11ஐச் சேர்ந்த சி.புஸ்பலிங்கம் அவர்களை வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளராகவும், வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளராக கடமையாற்றிக் கொண்டிருந்த இலங்கை கல்வி நிர்வாக சேவையைச் சேர்ந்த சி.நந்தகுமார் அவர்களை 2017.01.01 முதல் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளராகவும் இடமாற்றம் செய்ய அனுமதி வழங்கப்பட்டது.

(நாளை தொடரும்)

# புதிய அரசமைப்பு உருவாகும்வரை அரசியல் தீர்வை எதிர்வுகூற முடியாது

*அமைச்சர் மனோ கணேசன் தெரிவிப்பு*

கொழும்பு, ஜுன்22
புதிய அரசமைப்பு உருவாக்கம்தொடர்பானயோசனைகள் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படும்வரை அரசியல் தீர்வை வடிவமைப்பது கூட்டாட்சி அடிப்படையிலா அல்லது ஒற்றையாட்சியின் அடிப்படையிலா என்று கூறமுடியாது. அது தொடர்பில் எம்மால் ஒரு தீர்மானமும் எடுக்க முடியாது. நாடாளுமன்றமே முடிவெடுக்கும் என அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

முஸ்லிம்களுக்கு இப்போது நாட்டில் ஏற்பட்டிருக்கும் இனவாதப் பிரச்சினையை ஒரு தேசியப் பிரச்சினையாகவே பார்க்க வேண்டும். அப்போதுதான் அதைத் தீர்க்கவும் வேறு இனங்களுக்கு அது பரவாமல் தடுக்கவும் முடியும். இந்த நாட்டில் பிரதானமாக நான்கு இனங்களும் மூன்று மொழிகளும் உள்ளன. அதே போன்று 19 வகையான மக்கள் பிரிவினரும் உள்ளனர். பௌத்த மதத்துக்கு இருக்கின்ற முதன்மை இடத்தை ஏற்றுக்கொள்ளும் அதே வேளை, ஏனைய இனங்களையும், மதங்களையும் நாம் மதிக்க வேண்டும். இந்த உண்மையை உணர்ந்தால் ஓரினத்தை இன்னோர் இனம் தாக்கவேண்டிய நிலை ஏற்படாது. சகல பிரச்சினைகளும் தீர்க்கப்பட வேண்டும் என்பதற்காகவே புதிய அரசமைப்பைக்கொண்டு வரவுள்ளோம். அது தொடர்பிலான யோசனைகளை நாம் சமர்ப்பிப்போம். நாடாளுமன்றமே இறுதி முடிவெடுக்கும்" என்றார். (த-ய-3)

## பிரதேச சபை உறுப்பினர்கள் எண்ணிக்கை குறைக்கப்படும்

கொழும்பு, ஜுன்22
புதிய அரசமைப்பின் பிரகாரம் பிரதேசசபை உறுப்பினர்களின் எண்ணிக்கையை குறைக்குமாறு அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

தலைமை அமைச்சர் தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியுடன் நடைபெற்ற சந்திப்பின்போதே இந்த விடயம் தொடர்பாக அரச தலைவர் வலியுறுத்தியுள்ளார்.

இதன்போது, புதிய அரசமைப்பில் பிரதேசசபை உறுப்பினர்களின் எண்ணிக்கையை அரைவாசியாகக் குறைக்குமாறு அரசதலைவர் பணிப்புரை விடுத்துள்ளார். புதிய அரசமைப்பின் அடிப்படையில் பிரதேச சபை உறுப்பினர்களின் எண்ணிக்கை எட்டாயிரமாக வரையறுக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, பிரதேசசபை உறுப்பினர்ஒருவருக்குமாதக் கொடுப்பனவாக 15 ஆயிரம் ரூபா வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (த-ய)

## 100 ரூபாவுக்குக் கடவுச்சீட்டு

கொழும்பு, ஜீன் 22
இடரால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மிகக்குறைந்த செலவில் கடவுச்சீட்டை வழங்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

வெள்ளம், மண்சரிவு போன்ற இயற்கை இடர்களால் கடவுச்சீட்டு காணாமல் போயிருந்தால், அதனைப் புதிதாக வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட பகுதிப் பிரதேச செயலாளர்களின் பரிந்துரைக்கமைவாக, விண்ணப்பதாரர் செலுத்த வேண்டிய கட்டணங்களைக் குறைக்க அரசு தீர்மானித்துள்ளது.

2017ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதியின் பின்னர் கடவுச்சீட்டைப் பெற்றுக் கொண்டிருந்தால், இது வரை வெளிநாடு செல்லாத நபராக இருந்தால், அவரிடம் 100 ரூபா என்ற சாதாரண கட்டணத்தை மாத்திரம் பெற்றுக்கொண்டு புதிய கடவுச்சீட்டை வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கையை ஒகஸ்ட் மாதம் 30ஆம் திகதி வரை செயற்படுத்துவதற்கு அமைச்சரவை அனுமதித்துள்ளது.

தற்போது காணப்படுகின்ற சட்டரீதியான நிலைமையின் கீழ் கடவுச்சீட்டு செல்லுபடியாகும் காலப் பகுதி முடிவதற்கு முன்னர் அது காணாமற்போயிருந்தால் அல்லது சேதமடைந்திருந்தால் புதிய கடவுச்சீட்டைப் பெற்றுக் கொள்ள 10 ஆயிரம் ரூபா அறவிடப்படுகின்றது.

எனினும் அண்மையில் நாட்டில் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் மண்சரிவு காரணமாகக் குறிப்பிடத்தக்க அளவு மக்களின் கடவுச்சீட்டு சேதமடைந்துள்ளது. இதனை கருத்திற் கொண்டே அரசால் இந்த நடவ

## பொதுபலசேனாவுக்கும் ஹெல உறுமயவுக்கும் தொடர்புகள் ஏதுமில்லை

*அமைச்சர் சம்பிக்க திட்டவட்டம்*

கொழும்பு, ஜுன்22
ஜாதிக ஹெல உமயவுக்கும் பொதுபல சேனாவின் செயற்பாடுகளுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை. வீணாக எவரும் ஹெல உறுமய மீது சேறுபூசக்கூடாது என ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அமைச்சர் சம்பிக்க ரணவக்க இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:

"2005ஆம் ஆண்டு மகிந்த ராஜபக்சவுக்கு ஆதரவளித்தோம். அப்போது ஞானசார தேரர் ரணிலுக்கு ஆதரவளித்தார். 2010 இல் சரத் பொன்சேகாவுக்கும், 2015இல் மகிந்த வுக்கும் ஆதரவு வழங்கினோம். எனவே, குறித்த தேரரை வைத்து ஹெல உறுமய மீது சேறுபூசும் நடவடிக்கையை எவரும் முன்னெடுக்கக்கூடாது.

ஜாதிகஹெலஉறுமயவை உருவாக்கிய அனைவரும் ஜனநாயகத்துக்கு உட்பட்டே செயற்படுகின்றனர். ஞானசார தேரரும் ஜாதிக ஹெல உறுமயவை உருவாக்கிய போது தேர்தலில் போட்டியிட்டிருந்தார். ஆனால், அவர்வெற்றிபெறவில்லை. தற்போது அவர் நீதி மன்றில் முன்னிலையாகவுள்ளதாகவும் கூறியுள்ளார்.

புலனாய்வுப் பிரிவு கள் சிலவற்றிடம்பணம்பெற்றுக் கொண்ட சிலரே தற்போது நாட்டில் பிரச்சினைகளைத் தோற்றுவித்துள்ளனர்" என்றார். (த-ய)

## சகல நிறுவனங்களிலும் டெங்கு ஒழிப்புப் பிரிவு

*அரச தலைவர் மைத்திரி உத்தரவு*



கொழும்பு, ஜுன்22
டெங்கு ஒழிப்புத் தொடர்பில் அனைத்து நிறுவனங்களிலும் விசேட பிரிவு ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன உத்தரவிட்டுள்ளார்.

மகரகம இளைஞர் சேவை மன்றத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கொழும்பு மாவட்ட சுற்றாடல் சம்மேளன நிகழ்வில் பங்கேற்று உரையாற்றியபோதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இந்தப் பிரிவுக்கு நியமிக்கப்படும் நபர்கள் நாள்தோறும் அரை மணித்தியாலங்கள் டெங்கு ஒழிப்பு மற்றும் கழிவகற்றல் தொடர்பில் நடவடிக்கை எடுக்க வேண்டும். ஊடகங்களின் ஊடாகவும், சுகாதார மற்றும் சுற்றாடல் அமைச்சின் ஊடாக வழங்கப்படும் ஆலோசனைகள் பின்பற்றப்படவேண்டும். கொழும்பு மாவட்டத்தில் உள்ள அனைவரினதும் சுகாதாரத்தை உறுதிசெய்ய வேண்டும். இது தொடர்பிலான சுற்றுநிருபம் வெளியிடப்பட்டுள்ளது- என்றார். (த-ய)


## மரண அறிவித்தல்

### கந்தசாமி ஜெயக்குமார் (ஜெயா)



வேலணை கிழக்கு 4 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனி Bielefeld ஐ வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி ஜெயக்குமார் 19.06.2017 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தசாமி மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும் வீரவாகு கனகாம்பிகை (ஜேர்மனி) தம்பதியரின் அன்பு மருமகனும் விஜித்திராவின் அன்புக் கணவரும் மதுசா, மிதுசன், அஜய் ஆகியோரின் அன்புத் தந்தையும் விஜயகுமார், நேசகுமார் (ஜேர்மனி), சிவகுமார், தேவி, லலிதா, யோகநாயகி (ஜேர்மனி), சுபாசினி ஆகியோரின் அன்பு சகோதரரும் இந்திரன், ராஜன், சீலன், உதயா, சுகந்தமலர், றஞ்சினிதேவி, றஞ்சி, விஜயரூபன், செல்லா, தீபா ஆகியோரின் அன்பு மைத்துனரும் கரனின் அன்பு உடன்பிறவாச் சகோதரரும் சுகந்தன் (பிரான்ஸ்), ராஜன் (இங்கிலாந்து), சுகந்தகுமாரி, விஜி, ரேவதி (கனடா), ஆதவன், அசோக், அபிசா ஆகியோரின் அன்பு சித்தப்பாவும் விதுசன், மதுசன், யது, ஹரிஷ் ஆகியோரின் அன்பு பெரியப்பாவும் கிந்துசா, பிரியா, சிந்து, குயிலா, காண்டீபன், கார்த்திகா, வினேஷ், கௌசி, தர்சன், சுதர்சன், சுவாதிகா, சுஜீவன், சுஜி, கிருஷாந், நிருபன், சச்சின், றோசன், தக்ஷன், யனிஷ்கா ஆகியோரின் அன்பு மாமாவும் தரிஷ் அவர்களின் அன்பு பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.06.2017) வியாழக்கிழமை ஜேர்மனியில் நடைபெறும். அதேவேளை 4 ஆம் வட்டாரம் வேலணையில் ஆத்மாசாந்திப் பிரார்த்தனை பிற்பகல் 3 மணியளவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

4 ஆம் வட்டாரம், வேலணை.

தகவல்: குடும்பத்தினர்.
077 607 8337



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்

மண்ணுலகத்தில் அவதரித்தது
20 . 10 . 1950



ஈசன் பாதத்தில் சரணடைந்தது
19 . 05 . 2016

22.06.2017

### அமரர் கணேஸ்வரி (தேவி) நாகரத்தினம்

அவர்களின் சிவபதப்பேறு குறித்த ஓராண்டு நிறைவு நாள் இன்று (22.06.2017) வியாழக் கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.



*வானளவு உயர்ந்த உள்ளம் கடலளவு ஆழ்ந்த*
*கருணை வெறுப்பைக் காட்டாமல் அன்பை மட்டுமே*
*எமக்கு அள்ளி வழங்கிய அமுத சுரபியே!*
*வாழ்நாள் முழுவதும் தன்னைப் பற்றிக்*
*கவலையடையாது பிள்ளைகளின்*
*சந்தோசமே வாழ்க்கை என வாழ்ந்து காட்டிய*
*என் உத்தம தாயே! எமைக் கலங்க வைத்துவிட்டு*
*ஈசன் பாதம் சரணடைந்து*
*ஓராண்டு சென்றதோ அம்மா*
*மறுபிறவி என்று இருந்தால்*
*செருப்பாக நான் பிறக்க வேண்டும்*
*என் அம்மா காலில் மிதிபட அல்ல எங்களை*
*சுமந்த உங்களை ஒருமுறையாவது*
*நாம் சுமக்க வேண்டும் தாயே!*
*உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம்*
*வல்ல பரம் பொருளை வேண்டி நிற்கும்*

உங்கள் பாசமுள்ள
கணவர், மகள், மகன்மார்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
குடும்பத்தினர். 021 224 0560

தொம்பை வீதி,
உடுவில் கிழக்கு, சுன்னாகம்.

# சிப்பாயைக் கட்டிப் போட்டு கண்டியில் துப்பாக்கி பறிப்பு

## படைவிட்டோடி கைது

கண்டி குடாஓயா கமாண்டோ பயிற்சிப் பாடசாலையில் காவலில் இருந்த இராணுக் கொமாண்டோ ஒருவரின் கை, கால்களைக் கட்டிப் போட்டு வாயில் துணியை அடைத்து, நீரில் அமிழ்த்திவிட்டு அவரது துப்பாக்கியைப் பறித்துச் சென்ற துணிகரச் சம்பவமொன்று கடந்த வெள்ளிக்கிழமை இரவு நடந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட குடாஓயா பொலிஸார் பயிற்சிப் பாடசாலையிலிருந்து சுமார் ஏழு கிலோமீற்றர் தூரத்திலுள்ள காடொன்றில் வைத்து சந்தேகநபரைக் கைதுசெய்ததுடன் துப்பாக்கியையும் மீட்கப்பட்டனர். கைதானவர் இதே பாடசாலையில் பயிற்சி பெற்று, இராணுவத்தில் சிறிது காலம் பணியாற்றிய பின் தப்பியோடியவர் எனத் தெரியவருகின்றது. (த-ய)

# இயற்கை இடர்களால் அரிசிக்குத் தட்டுப்பாடு

கொழும்பு, ஜூன்22

எதிர்காலத்தில் அரிசிக்குத் தட்டுப்பாடு ஏற்படும் சாத்தியம் காணப்படுகின்றமையால் நாட்டுக்குத் தேவையான அரிசியைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என விவசாய அமைச்சர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் வறட்சி காரணமாக இந்த நிலைமையேற்பட்டுள்ளது.

இதனால் எதிர்பார்க்கப்பட்ட அளவில் நெல் உற்பத்தி மேற்கொள்ளப்படவில்லை.

எனவே, மக்களின் நுகர்வுக்கு மேலதிகமாகத் தேவைப்படும் அரிசி வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும்.

மூன்று இலட்சம் மெற்றிக்தொன் அரிசி கொள்வனவுக்கான அனுமதி, வாழ்க்கைச் செலவு தொடர்பான குழுவில் வழங்கப்பட்டுள்ளது.

இதில் இரண்டு இலட்சம் மெற்றிக்தொன் அரிசி தனியார்துறை ஊடாக நாட்டிற்குள் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றார். (த-ய)

# சிறுவர்களின் உளவியல் பிரச்சினைகளைத் தீர்க்க அரசு சிறப்பு நடவடிக்கை

கொழும்பு, ஜூன் 22

சிறுவர்களுக்கு உள ரீதியாக ஏற்படக்கூடிய பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்குவதற்காக சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கென அதிகார சபையின் சிறுவர் மனநலப் பிரிவொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்றும், இதன்மூலம் பிரச்சினைகளை வெளியில் சொல்லிக் கொள்ள முடியாமல் விரக்தியடையும் சிறுவர்களுக்கு உளவியல் ரீதியான சிகிச்சைகளை வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும் சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் உயரதிகாரியொருவர் தெரிவித்திருக்கிறார்.

மனவிரக்திக்கு ஆளாகும் சிறுவர்கள் தற்கொலை செய்து கொள்வது வழக்கமாகியுள்ளதால் அவ்வாறானவர்களின் பிரச்சினை களைக் கண்டறிந்து தீர்க்கவேண்டியது கட்டாயமாகவுள்ளது.

மனவிரக்திக்கு ஆளாகும் சிறுவர்களை அரவணைத்து அவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவேண்டிய தலையாய பொறுப்பு பெற்றோர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் மற்றும் முதியவர்களுக்கும் உள்ளது என அந்த அதிகாரி மேலும் கூறினார். (த-ய)



# இறைவரி கட்டமைப்பை சீராக்க அரசு நடவடிக்கை

கொழும்பு, ஜூன் 22

இலங்கையில் தற்போது நடைமுறையிலுள்ள இறைவரிகளுக்கான கட்டமைப்பைச் சீராக்கப் புதிய சட்டவரைவுகள் அறிமுகம் செய்யப்படவுள்ளன என நிதி இராஜாங்க அமைச்சர் எரான் விக்கிரமரத்ன தெரிவித்தார்.

கொழும்பில் நடந்த ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இந்தத் தகவலை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'டெக்ஸ் பில்' என்ற தலைப்பில் அறிமுகப்படுத்தப்படவுள்ள இந்தப் புதிய சட்டவரைவில் தனிப்பட்டவர்களும் நிறுவனங்களும் செலுத்தவேண்டிய வரி விகிதம் தெளிவாகக் காட்டப்படும்.

இதன்மூலம் பல்வேறு துறைகளுக்கு மேலும் உறுதியான, தெளிவான வரிச்சலுகைகள் வழங்கப்படும். இதன்மூலம் வரியிறுப்பாளர்களுக்கு விதிக்கப்படும் தாமதக் கட்டணங்களும் அபராதங்களும் கணிசமாகக் குறைவடையும்.

இந்தப் புதிய சட்டவரைவு தொடர்பில் நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்பட்ட பின் மாற்றங்கள் கவனத்தில் கொள்ளப்படும்.

வரிக் கட்டமைப்பில் பாரம்பரிய முறைகளைக் கைவிட்டுவிட்டுச் சீனா, பங்களாதேஸ், வியட்நாம் போன்ற நாடுகள் நவீன முறைகளைக் கையாண்டு வருகின்றன.

அதே ரீதியில் இலங்கையும் தனது வரிக் கட்டமைப்பைமாற்றிக்கொள்ளவேண்டியது அவசியமாகும் என்றார். (த-ய)

# சூனியம் வைத்தோர் பிடிபட்டால் வழக்கு

கொழும்பு, ஜூன்22

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன உட்பட பல முக்கியஸ்தர்களுக்கு எதிராகக் கெப்பிற்றிக்கொலாவ, உஸ்கல்ல மைதானத்தில் சூனியம் வைத்தவர்கள் எனக் கருதப்படும் நபர்கள் பிடிபட்டால் அவர்களுக்கு எதிராக மயான பூமி சட்டத்தின்கீழ் வழக்கு தொடரமுடியும் என அநுராதபுரம் மூத்த பொலிஸ் அத்தியட்சகர் ரவி பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இந்தச் சூனிய விவகாரம் தொடர்பில் பல்வேறு கோணங்களில் விசாரணைகள் நடந்து வருவதாகவும், அவர்கள் பிடிபட்டால் அவர்களுக்கு எதிராக மயான பூமிச் சட்டத்தின் கீழ் வழக்கொன்றையும், அவதூறு வழக்கொன்றையும் தொடரமுடியுமெனவும் அவர் கூறியுள்ளார்.

சூனியம் செய்தவர்களைப் பிடிப்பதற்கான நடவடிக்கையில் பொலிஸ், பொலிஸ் புலனாய்வுப் பிரிவு, இராணுவப் புலனாய்வுப் பிரிவு மற்றும் பாதுகாப்பு அமைச்சின் புலனாய்வுப் பிரிவு ஆகியவை கூட்டாக ஈடுபட்டிருப்பதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (த-ய)

## 14ஆம் வருட நினைவேந்தல்



திருமதி
**வசந்தாதேவி தனபாலசிங்கம்**
(முன்னாள் பிரதம லிகிதர் –சாவகச்சேரி நகரசபை)

ஆண்டுகள் பதினான்கு சென்றாலும்
எம் உள்ளத்திலே என்றென்றும் வீற்றிருக்கும் எமது
தெய்வமே உங்கள் அன்பான அரவணைப்பும்,
அறிவுரைகளும் இல்லாமல் தவிக்கின்றோம்
தங்களின் ஆத்மாசாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்

பிரிவால் துயருறும்
கணவர், பிள்ளைகள், மருமகள்மார்,
மருமகள், பேரப்பிள்ளைகள்
நுணாவில் மேற்கு, சாவகச்சேரி.

பிறப்பு 26.12.1947
இறப்பு 26.06.2003
திதி: திரயோதசி 22.06.2017

## விண்ணக வாழ்வில் 9ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
**சின்னத்தம்பி குணசிங்கம்**
(ஓய்வு பெற்ற திட்டமிடல் பணிப்பாளரும், மாவட்ட அனர்த்த முகாமைத்துவ இணைப்பாளரும், கச்சேரி - முல்லைத்தீவு)



தாயின் மடியில் 11.01.1943
முருகனடியில் 01.07.2008
திதி: 22.06.2017

அன்பொடு ஊரில் முன் தோன்றிய அறிஞனாய்
எண்ணிலடங்கா சேவையில் உளம் கவர்ந்து,
பண்புகள் பல சொல்லி பணிவுகள் பல காட்டி நின்றாய்
நிறைவாய் நின் நினைவுகள் தொடரும்.
ஆத்ம சாந்திக்காக வேண்டும்.

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்
தீபா இல்லம், முதலாம் வட்டாரம், புதுக்குடியிருப்பு.
077 350 2726

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 04 . 05 . 1948



மறைவு 23 . 05 . 2017

**அமரர் சரஸ்வதி இலகுநாதர்**

" அன்பின் இருப்பிடமாய் பாசத்தின் உறைவிடமாய்
யாவருக்கும் வழிகாட்டியாய் இருந்த
தங்களின் ஞாபகங்கள்
என்றென்றும் எம்மை விட்டு அகலாது
31 ஆம் நினைவு நாளில் தங்களின் ஆத்ம சாந்திக்காக
பிரார்த்தனை செய்கின்றோம் "

கடந்த 23.05.2017 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவி அமரர் சரஸ்வதி இலகுநாதர் அவர்களின் வீட்டுக் கிருத்திய கிரியைகள் இன்று (22.06.2017) வியாழக்கிழமை மு.ப 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றவுள்ளது. அதனைத் தொடர்ந்து நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கைதடி கிழக்கு, கைதடி.
குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் **கார்த்திகேசு முருகதாஸ் இராதாக் கிருஷ்ணன்**
(சட்டத்தரணி பிரசித்த நொத்தாரிசு)
திதி : 22.06.2017

மலர்வு 14.05.1954
உதிர்வு 03.07.2016

ஓராண்டென்ன ஓராயிரமாண்டு
உருண்டோடினாலும்
காலம் கூட தோற்குமையா எம்
கருத்தினிலிருந்து உமை நீக்க......

158, சட்டநாதர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

என்றும் உம் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**தவராஜா திருவேந்தன்**
"வைஸ்ணவி ரவல்ஸ்"

பிறப்பு 04.12.1979
இறப்பு 17.06.2016
திதி: திரயோதசி

என் அன்பு மகனே நீ என்னை விட்டு
சென்றதெங்கே என் கண்ணில்
கண்ணீர் இல்லை ஐயா உதிரம்
கொட்டுதையா உன் நினைவில்
நடைப் பிணமாய் வாழ்கின்றேன்.
உன் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றேன்.

அன்பு அம்மா, சகோதரர்கள்,
பிள்ளைகள்

நிரந்த முகவரி:
"பத்ம கோட்டம்"
இறங்கனிய வளவு,
குருநாத சுவாமி கோயிலடி,
குரு வீதி, காங்கேசன்துறை.

தற்காலிக முகவரி:
முதலாம் குறுக்குத் தெரு,
ஊரெழு கிழக்கு,
ஊரெழு.

# அரபு நாடுகளிலிருந்து இலங்கைக்கு நிதியுதவி

## புலனாய்வுத்துறை விசாரிக்கவேண்டும் என்கிறார் அத்துரலிய ரத்ன தேரர்



கொழும்பு, ஜூன்22
அரபு நாடுகளில் இருந்து இலங்கைக்கு வரும் நிதியுதவிகள் மூலம் அமைச்சர்கள் சிறப்பு வேலைத் திட்டங்களை முன்னெடுப்பது தொடர்பில் புலனாய்வுத்துறை விசாரணை நடத்தவேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
முஸ்லிம்களுக்கு எதிராக இப்போது இடம்பெற்று வரும் செயற்பாடுகளை அடிப்படையாக வைத்து தங்களுக்குப் பாதுகாப்பு இல்லையென்று அவர்கள் உணருகின்றனர். ஒட்டுமொத்த சிங்கள மக்களும் தங்களுக்கு எதிராகத் திரும்பியுள்ளனர் என்று அவர்கள் நம்புகின்றனர்.

அது பிழை. முஸ்லிம்களுக்குப் பிரச்சினை உண்டு என்பது உண்மை. அது தொடர்பில் யாரும் பேசுவதில்லை. முஸ்லிம்களை நாம் அடிப்படைவாதத்துக்குள் தள்ளிவிடக்கூடாது. மிதவாத முஸ்லிம்களை நாம் அரவணைக்கவேண்டும்.

இலங்கையில் உள்ள முஸ்லிம் அமைப்புகளுக்கு இப்போது அரபு நாடுகளில் இருந்து பணம் வருகின்றது. அந்தப் பணத்தைக் கொண்டு அவர்கள் அடிப்படைவாதச் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர். அடிப்படைவாதப் பயிற்சியைப் பெறுகின்றனர். அவர்கள் ஐ.எஸ் அமைப்புடன் இணைந்து போராடுகின்றனர். அவ்வாறு இல்லையென்று சொல்ல முடியாது.

எனவே, இவ்வாறு இலங்கைக்கு வருகின்ற நிதி தொடர்பில் புலனாய்வு விசாரணை நடத்தவேண்டும்.

சில அமைச்சர்கள் அரபு நாடுகளின் பணத்தைக் கொண்டு அவர்களின் அரசியல் வேலைகளைச் செய்கின்றனர். தனியான வேலைத்திட்டங்களை செய்கின்றனர்.

இது ஓர் ஆபத்தான நிலைமை. அரசுவிழிப்புடன் இருக்கவேண்டும்.

இனவாதத்தை ஆதரிக்க முடியாது. போரால் நாம் இழந்தது போதும். அதனால் நாம் ஒரு லட்சம் உயிர்களை இழந்துவிட்டோம். இனியும் ஓர் அழிவு எமக்கு வேண்டாம். நாம் இனங்களிடையே ஒற்றுமையை வளர்க்க வேண்டும். இனவாதத்தைத் தூண்டுவார்கள் சிங்களவர்கள் மட்டும்தான் என்று சொல்ல முடியாது. முஸ்லிம்களில் சிலரும் இனவாதத்தைத் தூண்டுகின்றனர்.

முஸ்லிம்கள் வீதியில் இறங்கிச் சத்தம்போட்டு இனவாத்தைத் தூண்டுவதில்லை. வேறு வழிகளில் அதைச் செய்கின்றனர்.

ஆனால், சிங்களவர்கள்தான் முட்டாள்கள் போல் வீதிகளில் இறங்கி கத்திக் கூச்சலிட்டு இனவாதத்தைத் தைத் தூண்டுகின்றனர்.

இதனால்தான் சிங்களவர்கள் இனவாதிகளாகத் தெரிகின்றனர். என்றார். (த-ய)

## பெயர் மாற்றம்

புகையிரத வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவிலைச் சேர்ந்த **இராஜகாரியர். இப்பிறேம் சாளின் சுதர்சன்** ஆகிய நான் எனது பெயரை இன்றிருந்து **இராஜகாரியர். சுதர்சன்** எனப் பெயர் மாற்றி சகல ஆவணங்களிலும் கையொப்பம் இடுவேன் என இத்தால் சகலருக்கும் அறியத்தருகின்றேன்.

**இ.சுதர்சன்**

## வீடு வாடகைக்கு

சகலவசதிகளுடன் வீடு வாடகைக்கு உண்டு. மாத அடிப்படையில் கொடுக்கப்படும். ஜேமன் செப்பேட் நாய்க்குட்டியும் விற்பனைக்கு உண்டு.

**077 790 6224**

## பெயர் மாற்றம்

இல.84, தேசிய வீடமைப்புத்திட்டம், நாவற்குழியைச் சேர்ந்த **மேரி றொபீனா சாந்தகுமாரி** ஆகிய நான் எனது பெயரை இன்றிருந்து **சாந்தகுமாரி** எனப் பெயர் மாற்றம் செய்து சகல ஆவணங்களிலும் கையொப்பம் இடுவேன் என இத்தால் சகலருக்கும் அறியத்தருகின்றோம்.

**சாந்தகுமாரி**

சிவமயம்



## காரைநகர் களபூமி திக்கரை முருகன்

**ஆலயத்தில் இன்று (22.06.2017) வியாழக்கிழமை தேரில் ஆரோகணித்து வரும் ஆறுமுக அண்ணலை நாம் உள்ளத்தாமரையில் அமர்த்தி முருகநாமத்தை உச்சரிப்போம்**

மாமரமாய் நின்ற சூரனை வேருடன் அழித்து குளிர்ச்சி நிறைந்த மலைகளைத் தொளைத்து வலிமை நிறைந்த அசுரர்களின் மார்பைத் தொளைத்து தாமரை மலரில் வாழும் பிரமதேவரைச் சிறையில் அடைத்து இந்திரனைச் சிறையில் இருந்து விடுவித்து, வேள்விகள் புரியும் முனிவர்களின் ஆசி மொழிகளைப்பெற்றும், வானவுலகில் வாழ்கின்ற தேவர்க ளின் துதியைப் பெற்றும் நாவன்மையுடைய நக்கீரருடைய பாடலைப் பெற்றும் உலகில் ஒப்பில்லாத புகழ்பெற்ற அடியவர்களின் உள்ளத்தில் ஆழமாகவும் அகலமாகவும் கூரியவேல் தாங்கிய வள்ளி, தெய்வானை சமேத திக்கரை ஆறுமுக அண்ணலை வாழ்த்தி வணங்கி திருத்தேரின் வடம் பிடித்து நம் வினைகளை அழித்து அடியார்களுக்கு உரிமையாம் படி முத்தியுலகை அறியும்படி பேரருள் பெற்று உய்வோமாக.

**க.கு.க.சிவபாலன்(K.K.K)**
**களபூமி, காரைநகர்.**

## வீடு விற்பனைக்கு

வட்டு தெற்கு, வட்டுக்கோட்டை கார்த்திகேய வித்தியாலய வீதியில் 04 பரப்புக்காணியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.

**077 614 6434**

## அம்மா பரமேஸ்வரி ஜோதிட நிலையம்
### பண்டித் துளசிராம் சுவாமி

இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ளார்கள். வம்சாவளியாக அம்மா பரமேஸ்வரி அருள் கொண்டு கைரேகை முகநாடி பிறந்த திகதி நட்சத் திரம் ஜாதகம் ஆகியவற்றைக் கொண்டு துல்லியமாக நடந்தவை நடக்கின்றவை. நடக்கப் போகின் றவை இவர் பாரம்பரியமாக ஜோதிடம் சொல்பவர். ஆயுள்பூஜை, லட்சுமிகடாச்சப் பூஜைகள். எல்லா தோசங்க ளுக்கும் பரிகாரம் செய்யப்படும். வியாபார ஸ்தாபனங்களுக் கும் பரிகாரம் செய்யப்படும். படிப்பு, தொழில், திருமண யோகம், குழந்தைப் பாக்கியம், , கணவன் மனைவி ஒற்றுமை, ககல்யாண யோகம், எதிரிகள் கண்திருஷ்டி, கோட் வழக்குகள், வசிகரம் செய்யப்படும். எண்கணிதப்படி மண மக்கள் பொருத்தம் பார்க்கப்படும். நம்பிக்கையுடன் இவரை ஒருமுறை சந்தியுங்கள்.

**நேரம்: காலை 9.00 மணிமுதல் இரவு 9.00 மணிவரை**
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (முலைவச் சந்தி அருகில்) **T.P: 077 2186 324**

## விவசாயமும் கமநல சேவைகளும், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம்,நீர் வழங்கல், உணவுவழங்களும் விநியோகமும், சுற்றாடல் மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு, வடக்கு மாகாணம்

### திட்ட அலுவலகத்திற்கான வாடகைக் கட்டடத்தினைப் பெறுவதற்கான கோரிக்கை

திட்ட அலுவலகத்திற்கான பின்வரும் வசதிகள் மற்றும் நிபந்தனைகளின் அடிப்படையில் வாடகைக்கு கட்டடத்தினை வழங்க விரும்புவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

1. வதிவிட அளவு குறைந்தது 2000 சதுர அடிகளைக் கொண்டதாகவும், அண்ணளவாக ஆறு அறைகளுடன் பெரியளவிலான விறாந்தையைக்(Hall) கொண்டதாகவும், ஆகக் குறைந்தது இரு வாகனத்தரிப்பிட வசதி கொண்டதாகவும் இருத்தல் வேண்டும்.
2. விவசாய அமைச்சிலிருந்து (புறூடி லேன், அரியாலை) 1Km சுற்று வட்டத்திலும், பிரதான வீதிகளுக்கு அண்மையிலும் இருப்பதும் விரும்பத்தக்கது.
3. முற்பணம் வழங்கப்படமாட்டாது.
4. மதிப்பீட்டுத் திணைக்களத்தின் மதிப்பீட்டின் அடிப்படையில் வாடகை வழங்கப்படும்.
5. மேற்படி நிபந்தனைகளுக்கு உட்பட்டதான விண்ணப்பத்தில் வீட்டு உரிமையாளரின் முழுப்பெயர், தொடர்பு முகவரி, தொலைபேசி இலக்கம், எதிர்பார்க்கும் மாதாந்த வாடகைத் தொகை ஆகிய விபரங்களுடன் ஏனைய தகவல்களையும் உள்ளடக்கி தங்களால் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் இடது பக்க மேல் மூலையில், "திட்ட அலுவலகத்திற்கான வாடகைக் கட்டடம்" என எழுதப்பட்ட கடித உறையினுள் செயலாளர்.விவசாய அமைச்சு.வடக்கு மாகாணம், இல 04, புரூடி லேன், அரியாலை, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு 2017.06.30 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடிய வகையில் நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**ஆர். வரதீஸ்வரன்,**
**செயலாளர்.**

## சாவகச்சேரி பிரதேச சபை
### குறித்தொதுக்கப்பட்ட மாகாண நன்கொடை வேலைத்திட்டத்திற்கான கேள்வி கோரல்

01. தலைவர், பெறுகைக்குழு, சாவகச்சேரி பிரதேச சபை, தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட கட்டுமாண வேலைகளுக்காக கோருகின்றார்.
02. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.
03. கேள்வி பெற தகுதியுடையவராவதற்கு, வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமான தரத்தில் வீதி அமைப்புக்கான இக்ராட் (ICTAD) பதிவு மேற்கொள்ளப் பட்டிருத்தல் வேண்டும்.
04. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.
05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் செயலாளர், சாவகச்சேரி பிரதேச சபை, கொடிகாமம் (தொலைபேசி: 021-373 4825, 021-2050356, தொலைநகல்: 021-2050356, மின்னஞ்சல் - chavakachcherips1@yahoo.com) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் 19.07.2017 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் வேலை நாட்களில் காலை 09.00 மணி முதல் பிற்பகல் 14.00 மணி வரை கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.
06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் தவிசாளர் /செயலாளர், சாவகச்சேரி பிரதேச சபை கொடிகாமம் எனும் இடத்திலிருந்து 27.06.2017 ஆம் திகதியிலிருந்து 19.07.2017 வரை காலை 09.00 மணிக்கும் பிற்பகல் 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.2000/- (வரி நீங்கலாக) செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண் டும்.
07. கேள்வி இரு பிரதிகளில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். இதனை நேரில் அல்லது பதிவுத் தபால் மூலம் தவிசாளர்/செயலாளர், சாவகச் சேரி பிரதேச சபை கொடிகாமம் எனும் முகவரிக்கு 19.07.2017 திகதி பிற்பகல் 14.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரரின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
08. கேள்வியானது கேள்வி சமர்ப்பிக்கும் இறுதித்திகதியில் இருந்து 63 (அறுபத்து மூன்று நாட்கள் 20.09.2017) நாட்கள் வரையும் செல்லுபடியாகும்
09. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| கேள்வி எண் | வேலை விபரம் | மதிப்பீட்டு தொகை (மில்லியன்) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் (வீதி) | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணை வைப்பு (ரூபா) | செல்லுபடியாகும் காலம் |
| NP/14/41(6)/2/PSDG/5 | சம்பாவெளி வீதி – விடத்தற்பளை | 3.038 | 3 மாதம் | C8 | 30,500.00 | 18.10.2017 |
| NP/14/41(6)/2/PSDG/6 | சந்தை வீதி –கொடிகாமம் | 3.040 | 3 மாதம் | C8 | 30,500.00 | 18.10.2017 |
| NP/14/41(6)/2/PSDG/7 | புலம் வீதி - கைதடி | 3.038 | 3 மாதம் | C8 | 30,500.00 | 18.10.2017 |
| NP/14/41(6)/2/PSDG/8 | மூன்றாம்பள்ள வீதி - வரணி | 3.039 | 3 மாதம் | C8 | 30,500.00 | 18.10.2017 |
| NP/14/41(6)/2/PSDG/9 | ஞானவைரவர் வீதி - மீசாலை | 3.025 | 3 மாதம் | C8 | 30,500.00 | 18.10.2017 |
| NP/14/41(6)/2/PSDG/10 | சங்க வீதி –நாவற்குழி | 3.033 | 3 மாதம் | C8 | 30,500.00 | 18.10.2017 |
| NP/14/41(6)/2/PSDG/11 | சித்தி விநாயகர் வீதி – நாவற்குழி | 3.473 | 3 மாதம் | C8 | 35,000.00 | 18.10.2017 |

10. கேள்விதாரர்களுக்கான முன்கலந்துரையாடல் 10.07.2017 ஆம் திகதி மாலை 14.30 மணிக்கு சாவகச்சேரி பிரதேச சபை அலுவலகத்தில் நடைபெறும். இக்கலந்துரையாடலில் ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கலந்துகொள்ளலாம். இதற்கு எவ்வித கொடுப்பனவும் வழங்கப்படமாட்டாது.

**தலைவர்,**
**உள்ளூர் அதிகார பெறுகைக்குழு,**
**சாவகச்சேரி பிரதேச சபை**
**கொடிகாமம்**
**22.06.2017**

## குப்பை கொட்டுவோருக்கு எதிராக நடவடிக்கை

கொழும்பு, ஜன22
முறையற்ற விதத்தில் குப்பைகளைக் கொட்டுபவர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுப்பதற்கு கொழும்பு நகரில் மாத்திரம் ஆறு சிறப்புக் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளதாகக் கொழும்பு மாநகரசபை தெரிவித்துள்ளது.

இந்தக் குழுக்களின் உதவியோடு முறையற்ற விதத்தில் வீதிகளில் குப்பை கொட்டுவோரை ஒளிப்பதிவு செய்யவுள்ளதாகக் கொழும்பு மாநகர சபை ஆணையாளர் வீ.கே.அநுர தெரிவித்தார்.

இதற்காக இராணுவம், பொலிஸார் மற்றும் நகரசபை அதிகாரிகள் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

அதேவேளை, குப்பைகளைப் பிரிவுகளாகப் பெற்றுக்கொள்ளும் செயற்பாடுகள் ஆரம்பமானது முதல் கொழும்பு நகரில் சேகரிக்கப்படும் குப்பைகளின் அளவு 650 தொன் வரை குறைவடைந் துள்ளது என்றும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (த-ய)



# புலிகளைத் தோற்கடிக்க உதவிய இந்தியாவை ஒருபோதும் மறவோம்

## நாமல் எம்.பி. பெருமிதம்

கொழும்பு, ஜூன்22
புலிகளுடனான போரை முடித்து வைப்பதற்கு இந்தியா எமக்கு வழங்கிய உதவியை நாம் வரலாற்றில் ஒருபோதும் மறக்க மாட்டோம் என்று நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஸ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

"நாம் இந்தியாவை எதிர்ப்பதோ, அமெரிக்காவை எதிர்ப்பதோ, சீனாவை எதிர்ப்பதோ தனிப்பட்ட நோக்கில் அல்ல. அந்த நாடுகளுடன் எமக்கு தனிப்பட்ட கோபம் கிடையாது. எமது நாட்டுக்கு ஆபத்து வரும்போது, எமது நாட்டு வளங்களை அந்த நாடுகள் கைப்பற்றுவதற்கு முற்படும்போது, அதற்கு எம் நாட்டு அரசு இடங்கொடுக்கும் போதுதான் நாம் எமது எதிர்ப்பைக் காட்டுகிறோம்.

சில சந்தர்ப்பங்களில் போர் நிறுத்தப்பட வேண்டும் என்பதுபோன்ற நிலைப்பாட்டுக்கு இந்தியா வந்திருந்தாலும்கூட பெரும்



> “ எமக்கென்று ஒரு பன்னாட்டுக் கொள்கை உண்டு. அந்தக் கொள்கைக்கு விரோதமாக எம் மால் செல்ல முடியாது. எமது நாட்டின் வளங்களை இந்தியாவுக்கோ அல்லது சீனாவுக்கோ விற்பதற்கு அரசு முயற்சி செய்தால் அதை நாம் எதிர்ப்போம்.

அழுத்தத்தை எமக்குத் தரவில்லை.

கடந்த காலங்களைப்போல் இலங்கை அரசின் கட்டுப்பாட்டை மீறி இந்தியா விமானத்தில் வந்து பருப்புப் போடவில்லை. மொத்தத்தில் இந்தியா எமது காலை வாரவில்லை.

ஆனால் எமக்கென்று ஒரு பன்னாட்டுக்கொள்கை உண்டு. அந்தக் கொள்கைக்கு விரோதமாக எம்மால் செல்ல முடியாது. எமது நாட்டின் வளங்களை இந்தியாவுக்கோ அல்லது சீனாவுக்கோ விற்பதற்கு அரசு முயற்சி செய்தால் அதை நாம் எதிர்ப்போம்.

அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை எந்த நாட்டுக்கு விற்பதாக இருந்தாலும் நாம் அதை எதிர்ப்போம். எமக்கு எந்த நாடு என்பதல்ல முக்கியம். அந்த ஒப்பந்தம்தான் முக்கியம்.

துறைமுகம் என்பது அந்த நாட்டின் கட்டுப்பாட்டில் தான் இருக்கவேண்டும். அது தேசிய பாதுகாப்புடன் தொடர்புபட்ட விடயமாகும். அதை விற்கமுடியாது" என்றார். (த-ய)

## கறுப்புப் பணத்தைக் கண்டறிய சுவிஸ் வாங்கியுடன் உடன்பாடு

கொழும்பு, ஜூன்22
இலங்கைக் குடிமக்கள் களவாக சுவிஸ் வங்கிகளில் முடக்கும் பணத்தொகையை அறிய இலங்கை அரசு, சுவிஸ் நாட்டுடன் புரிந்துணர்வுக் குறிப்பாணை ஒன்றை ஏற்படுத்த திட்டமிட்டு வருவதாகக் கூறப்படுகின்றது.

இலங்கையர்கள் பலர் சுவிஸ் வங்கிகளில் பெருந்தொகையான பணத்தை முடக்கிக் குற்றச் செயல்களுக்குப் பயன்படுத்தி வருகின்றனர் என அரசு சந்தேகிக்கின்றது .

குறித்த இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டால், சுவிஸ் வங்கி அதிகாரிகள் வங்கிக் கணக்குகளின் விவரங்களை இலங்கை அரசுடன் பகிர்ந்து கொள்ள முடியும்.

இந்த நடவடிக்கைக்கான நாடாளுமன்ற அங்கீகாரம் சென்ற வாரம் வழங்கப்பட்டுள்ளது .

இரகசியக் கணக்குகளுக்கு பெயர்போன சுவிஸ் வங்கிகள் அண்மைக் காலமாக உலக நாடுகளின் அழுத்தத்துக்கு உள்ளாகி வருகின்றன.

நாடுகள் இப்படி ஒப்பந்தம் செய்வதால், பயங்கரவாதத்துக்குத் துணைபோகும் குற்றவாளிகளின் வங்கிக் கணக்குகள் முடக்கப்படுவது மாத்திரமல்லாமல், பணத்தைப் பறிமுதல் செய்யவும் முடியும் .

92 இலங்கையர்கள் சுவிஸ் வங்கிகளில் 58.3 மில்லியன் டொலர் தொகையை முடக்கி வைத்துள்ளனர் எனச் சொல்லப்படுகின்றது.


சுவிஸ் வங்கிக் கணக்கு வைத்துள்ள இலங்கையர்கள், தமது பணத்தை இலங்கை வங்கிகளில் முதலிடலாம் எனக் கடந்த நவம்பர் மாதம், அப்போதைய நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்திருந்தார்.

இதற்கு 2.3வீத வட்டி வழங்கப்படுவதுடன், சட்டரீதியான பாதுகாப்பில் இருக்கும் என்றும் அறிக்கை வெளியிடப்பட்டிருந்தது.

உலகநாட்டுத் தலைவர்கள் பலரின் சுவிஸ் வங்கிக் கணக்குகள் பல கடந்த காலங்களில் அந்தந்த நாடுகள் கொடுத்த அழுத்தம் காரணமாக முடக்கப்பட்டுள்ளமை கவனிக்கத்தக்கது. (த-ய)


நீங்காத நினைவலைகளில்
எட்டு ஆண்டுகள்...

அமரர் சுப்பிரமணியம் நாகராஜா
(Retired MSO Jaffna Post Office)



மலர்வு
18.07.1930

உதிர்வு
22.06.2009

திதி: சதுர்த்தசி 22.06.2017

வைகையில ஊர்முழுக வல்லூரும் சேர்ந்தெழுக
கைபிடியாய் கூட்டி வந்து கரைசேர்த்து விட்டவரே
நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து பல்லாண்டு
சென்றிடினும் ஆறவில்லை எம் துயர்.

*என்றும் உங்கள் நினைவுடன்*
*ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.*

எங்கள் குடும்பத்தின் குலவிளக்காக நம் குடும்பத்தின் வளர்ச்சிக்காக அயராது உழைத்து அனைவரது வாழ்வினையும் பிரகாசிக்கச்செய்த அமரர் சுப்பிரமணியம் நாகராஜா அவர்களது ஆத்ம சாந்திக்காக இன்று (22.06.2017) வியாழக்கிழமை தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்தில் விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்று தெல்லிப்பழை மகளீர் இல்லம், கோண்டாவில் சிவபூமி சிறுவர் இல்லம், சுழிபுரம் முதியோர் இல்லம் ஆகிய பராமரிப்பு நிலையங்களிலுள்ள சிறுவர்கள், முதியோர்களுக்கு உணவு உபசாரமும், நாளை (23.06.2017) வெள்ளிக்கிழமை நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்திலும் 25.06.2017 ஞாயிற்றுக்கிழமை கீரிமலை அன்னதான மடத்திலும் அன்னதான நிகழ்வும் இடம்பெறவுள்ளன.

**குடும்பத்தினர் சார்பாக**
**மகன் நாகராஜா விஜயகுமார் - சுவிஸ்**

(CS 5032) (1-4)

புலிகளைத் தோற்கடித்தமைக்காக

# குற்றமிழைத்த இராணுவத்தை தண்டிக்காமல் விடமுடியாது

## மூத்த ஊடகர் போத்தல ஜயந்த வலியுறுத்தல்




கொழும்பு, ஜூன்22

விடுதலைப் புலிகளைத் தோற்கடித்த ஒரே காரணத்திற்காக குற்றங்களை இழைத்த இராணுவத்தினரைத் தண்டிக்காமல் விடுதலை செய்யக்கூடாது என்று மூத்த ஊடகவியலாளர் போத்தல ஜயந்த தெரிவித்துள்ளார்.

பொதுமக்களைக் கடத்திக் கொலை செய்வதற்கு இராணுவச் சிப்பாய்களுக்கு அனுமதி வழங்கியது யார் என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

மகிந்த ஆட்சியில் வெள்ளை வானில் கடத்தப்பட்டு தாக்கப்பட்டதையடுத்து நாட்டை விட்டு வெளியேறிய போத்தல, 8 வருடங்களுக்குப் பின்னர் நாடுதிரும்பிய நிலையில் நேற்றுமுன்தினம் குற்றப் புலனாய்வுப் பிரிவில் முறைப்பாடு ஒன்றைப் பதிவு செய்தார்.

அதன் பின்னர் அவர் ஊடகவியாலாளர்களிடம் தெரிவித்ததாவது:

ஊடக நண்பகர் கீத் நோயரின் தாக்குதல் தொடர்பாகக் கைது செய்யப்பட்டுள்ள இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் என் மீதான தாக்குதலுடனும் தொடர்புபட்டிருக்கலாம் என்ற சாதாரண சந்தேகம் எனக்கு வந்துள்ளதை முறைப்பாட்டில் கூறியுள்ளேன்.

நான் கடத்தப்பட்டுத் தாக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் அணிந்திருந்த இரத்தம் தோய்ந்த ஆடை மற்றும் ஏனையவை மன்றில் ஒப்படைக்கப்பட்டதா என்பது பற்றி எனக்குத் தெரியாது. எனினும் இந்தக் குற்றச் செயலுக்காக நட்டஈட்டை வழங்கி நழுவிச் செல்ல வேண்டாம் என்று அரசுக்குக் கூற விரும்புகிறேன்.

வடக்கு, கிழக்கில் படுகொலை செய்யப்பட்ட தமிழ் ஊடகவியலாளர்களுக்காக நீதி கோரி குரல் எழுப்பப்பட வேண்டும்.

என்னைப் பற்றியும், லசந்த விக்கிரமதுங்க, பிரகீத் எக்னலிகொட, கீத் நோயர் ஆகியோரைப் பற்றியும் பல இடங்களிலும் பரவலாக பேசுகின்றனர். ஆனால் வடக்கு, கிழக்கைச் சேர்ந்த தமிழ் ஊடகவியலாளர்கள் 40 பேர்வரை படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இதுகுறித்து எவரும் பேசுவதில்லை. தமிழ் ஊடகவியலாளர்களுக்காகவும் குரல் எழுப்பப்படவேண்டும்.

விடுதலைப் புலிகள் இராணுவத்தினரால் தோற்கடிக்கப்பட்டிருக்கலாம். ஆனால் அந்த இராணுவத்திலுள்ள சிலர் மக்களைக் கடத்துகின்றனர், கொலை செய்கின்றனர். விடுதலைப் புலிகளை தோற்கடித்த மற்றும் போரை வென்ற ஒரே காரணத்திற்காக அவர்களை விடுதலை செய்யமுடியுமா?

அப்படிச் செய்ய முடியாது. விடுதலைப் புலிகளைத் தேற்கடித்ததால் இராணுவத்தினர் செய்த குற்றங்களை மறைக்க முடியுமா? அவ்வாறு செய்ய அனுமதி வழங்கியது யார்? அவர்கள் தனிப்பட்ட காரணங்களுக்காக இந்தக் கடத்தல், கொலைகளைச் செய்யவில்லை. அரசியலிலுள்ளபலம் படைத்த சிலரது தேவைக்காகவே இதனை புரிந்துள்ளனர் என்றார். (த-ய)



# பிரான்ஸ் போர்க் கப்பலில் ராஜாங்க அமைச்சர் ருவான்

கொழும்பு, ஜூன் 22

நல்லெண்ணப் பயணமாகக் கொழும்புத் துறை முகத்துக்கு வந்துள்ள பிரான்ஸ் போர்க்கப்பல்களை, பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தன நேற்று முன் தினம் பார்வையிட்டார்.

பிரான்ஸ் கடற்படையின் மிஸ்ரால் எனப்படும் பெரும் தரையிறக்க மற்றும் உலங்குவானூர்தி தாங்கிக் கப்பலும், கோர்பெட் என்ற போர்க்கப்பலும் நேற்று முன் தினம் கொழும்பு வந்தன.

இந்தக் கப்பல்களை நேற்று முன் தினம் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தன சென்று பார்வையிட்டதுடன், பிரான்ஸ் கடற்படை அதிகாரிகளுடனும் பேச்சு நடத்தினார். (த)

# அரச மருத்துவர்களின் இடமாற்றங்களில் அநீதி

## மருத்துவர் சங்கம் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன்22

அரச மருத்துவர்களின் இடமாற்றங்கள் மருத்துவச் சபையின்கொள்கைகளுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு வருவதாக இலங்கை அரச மருத்துவர் சங்கம் குற்றஞ்சாட்டி யுள்ளது.

அரசியல் பலத்துடன் பாரபட்சமான முடிவுகளை எடுப்பதன் மூலம் சுகாதார அமைச்சு தன் இஸ்டத்துக்கு இடமாற்றங்களைச் செய்துவருகின்றது.

தமது குறைகளை மூடிமறைக்கும் அமைச்சு அதிகாரிகள் தமது சங்கத்தின் மீது குற்றம் கண்டுபிடிப்பதை வாடிக்கையாகக் கொண்டிருப்பதாக இலங்கை அரச மருத்துவர்கள் ச்ங்கத்தின் செயலாளர் மருத்துவர் நவீன் டீ சொய்ஸா தெரிவித்தார். சுகாதார அமைச்சின் தான்தோன்றித்தனமான இடமாற்றங்களின் மூலம் ஏராளமான வைத்தியசாலைகளில் சிறப்பு வைத்திய நிபுணர்களுக்கு பற்றாக்குறை நிலவுகின்றது. அதேவேளை பல வைத்தியசாலைகளில் தேவைக்கு அதிகமாக வைத்தியர்கள் உள்ளனர்.

நாட்டின் மிக முக்கிய துறைகளில ஒன்றான வைத்தியத்துறையில் இவ்வாறான தில்லுமுல்லுகள் நடப்பது பொதுமக்களுக்கே ஆபத்தாக முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (த-ய)

# களுத்துறையில் 6 பாடசாலைகளில் மண்சரிவு அபாயம்

கொழும்பு, ஜூன்22

களுத்துறை மாவட்டம், மத்துகம பிரதேசத்தில் ஆறு பாடசாலைகளுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதுடன் அந்தப் பாடசாலைகளை உடனடியாக இடமாற்றம் செய்யுமாறு தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் வலயக் கல்விப் பணிப்பாளருக்கு அறிவித்தல் விடுத்துள்ளது.

இந்தப் பாடசாலைகள் அமைந்துள்ள பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகளின்படி பாடசாலைகளை அண்டியுள்ள குன்றுகளில் வெடிப்புகள் ஏற்பட்டிருப்பதாகவும், சில குன்றுகளிலுள்ள பாறைகள் ஏற்கனவே சரிந்திருப்பதாகவும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. (த-ய)



# போர்த்துக்கல் தீ; உயிரிழப்பு அதிகரிக்கலாம்



லிஸ்பன், ஜூன் 22
போர்த்துக்கலின் தலைநகர் லிஸ்பனில் உள்ள வனப் பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஏற்பட்ட காட்டுத் தீயில் சிக்கி 64 பேர் உயிரிழந்தனர் என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்ட நிலையில் இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என்று அச்சம் வெளியிடப்பட்டது.

ஐரோப்பா கண்டத்தின் தென்பகுதியில் உள்ள போர்த்துக்கல் நாட்டின் தலைநகரான லிஸ்பனில் இருந்து சுமார் 200 கிலோமீற்றர் தூரத்தில் தென்கிழக்கு வனப் பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை திடீரென்று காட்டுத்தீ ஏற்பட்டது. மளமளவென பரவிய தீ காட்டில் இருந்த மரங்களைப் பதம் பார்த்ததுடன் காட்டின் ஓரமாகச் செல்லும் சாலையோரம் இருந்த மரங்களையும் பற்றியது. இதனால் மரங்கள் முறிந்தும் எரிந்தும் விழுந்தும் சாலைகளை மறித்துக் கொண்டன. இடைநடுவில் பலர் சிக்கிக் கொண்டனர். அவர்கள் தமக்கு உதவி தேவை என்று அழைப்பு விடுத்ததை அடுத்து தீயணைப்புப் படையினர் சம்பவ இடத்துக்கு விரைந்து வருவதற்குள் 41பேர் தத்தமது கார்களுடன் எரிந்து உயிரிழந்தனர். உலங்கு வானூர்திகளின் மூலம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டவர்களில் 23 பேர் உயிரிழந்ததை அடுத்து இறுதியாக வெளியான உத்தியோகபூர்வத் தகவலின்படி உயிரிழப்பு எண்ணிக்கை 64ஆக உள்ளது. மீட்புப் பணிகள் தொடர்ந்து வருவதன் காரணமாக இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என்று போர்த்துக்கல் ஊடகங்கள் அச்சம் வெளியிட்டன.

உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் விதமாக நேற்றுமுன்தினம், நேற்று, இன்று என மூன்று நாள்கள் துக்கம் கடைப்பிடிக்கப்படும் என்று போர்த்துக்கள் அரசின் சார்பில் அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)



## ஓவியமா புதையலா!


வொஷிங்டன், ஜூன் 22
அமெரிக்காவின் நியுஜெர்சியை சேர்ந்த கார்ல் சபடினோ என்பவரின் ஒட்டுமொத்த வாழ்க்கையையுமே மாற்றவுள்ளது ஓர் ஓவியம். கார்ல் சபடியோ சாவுப் படுக்கையிலிருந்த தன்னுடைய அத்தையைப் பார்க்க வந்தார். “தையல் இயந்திரத்தைத் திறந்து பார்” என்றார் அத்தை. தையல் இயந்திரத்துக்குள் ஓர் ஓவியம் மட்டும் இருந்தது. அத்தையின் இளம் வயது ஓவியமாக இருக்கும் என்று நினைத்து, அப்படியே வைத்துவிட்டார். மூன்று நாள்களுக்குப் பிறகு, அத்தை, மீண்டும் “தையல் இயந்திரத்தை மறக்காதே” என்று கூறிவிட்டு உயிரிழந்தார். அந்த ஓவியத்தில் ஏதோ இருக்கிறது என்று தற்போதுதான் கார்லுக்குப் புரிந்தது. அதை நிபுணர்களிடம் காட்டினார். பாப்லோ பிகாசோவின் அரிய ஓவியம். அவரது கையெழுத்தும் அதிலிருந்தது. 10 டொலர்களுக்கு வாங்கப்பட்ட இந்த ஓவியம், இன்று 30 மில்லியன் டொலர்களுக்கு விலை போகும் என்கிறார்கள் ஓவிய உலகைச் சேர்ந்தவர்கள். (ம)

## வாழ்வதற்கு தகுந்ததாக 10 கிரகங்கள்

வொஷிங்டன், ஜூன் 22
10 கிரகங்கள் பூமியைப் போன்று வாழ்வதற்கான சூழலை கொண்டிருக்கின்றது என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது குறித்த தகவல்களை 'நாசா' விஞ்ஞானி மரியோ பெரஸ் பன்னாட்டு ஊடகங்களிடம் பகிர்ந்துகொண்டார்.

அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி அமைப்பான 'நாசா' வேற்று கிரகங்கள் பற்றி ஆராய்வதற்கு விண்வெளியில் கெப்ளர் தொலைநோக்கியை நிறுவி, ஆராய்ச்சி செய்து வருகிறது. இதன் முடிவுகள் நேற்று முன்தினம் வெளியிடப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. இதில் வேற்று கிரகவாசிகள் பற்றிய தகவல்கள் இடம் பெறும் என எதிர்பார்ப்பு நிலவியது.

ஆனால் புதிய கிரகங்கள் தொடர்பிலான தகவல்கள் வந்துள்ளன. கெப்ளர் விண்வெளி தொலைநோக்கி மூலம் சூரிய மண்டலத்துக்கு வெளியே மேலும் 219 கிரகங்கள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த கிரகங்களுடன் சேர்த்து, இப்படி கண்டுபிடிக்கப்பட்டுள்ள மொத்த கிரகங்களின் எண்ணிக்கை 4 ஆயிரத்து 34 ஆகும். இவற்றில் 10 கிரகங்கள் வாழ்வதற்கான சூழலைக் கொண்டுள்ளன. (ம)



# 2016 இல் மட்டும் 7 கோடி மக்கள் அகதிகளாகினர்

வொஷிங்டன், ஜூன் 22
பல்வேறு காரணங்களால் கடந்த வருடம் மட்டும் சுமார் 7 கோடி மக்கள் அகதிகளாக இடம்பெயர்ந்துள்ளனர் என்று ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கை ஒன்று சுட்டி நிற்கிறது.

ஈராக்கில் நடக்கும் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புக்கு எதிரான போர், சிரியாவில் நடக்கும் உள்நாட்டுப் போர் மற்றும் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புக்கு எதிரான போர், ஆப்கானிஸ்தான், தெற்கு சூடான், லிபியா, ஏமன், பாகிஸ்தான் மற்றும் சில ஆபிரிக்க நாடுகளில் நிலவும் உள்நாட்டுப் போர் ஆகியன காரணமாக அன்றாடம் பல நூற்றுக்கணக்கான அப்பாவி மக்கள் உயிரிழக்கின்றனர். இன்னும்பலர் அகதிகளாக வேறு நாடுகளுக்குச் செல்கின்றனர். கடந்த வருடம் மட்டும் அகதிகளாக வேறு நாடுகளுக்கு அடைக்கலம் தேடிச் சென்றவர்களின் எண்ணிக்கை 7 கோடி என்று ஐக்கிய நாடுகள் சபை குறிப்பிடுகிறது.

ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான ஆணையர் பிலிப்போ கிராண்டி, “உலகில் அமைதியை ஏற்படுத்துவது மிகவும் கடினமாகி விட்டது. புதிய பிரச்சினைகள், குழப்பங்கள் உருவாகிக் கொண்டே இருக்கின்றன.

கடந்த ஆண்டில் தெற்கு சூடானைச் சேர்ந்த 40 லட்சம் பேர் அண்டை நாடான உகண்டாவில் தஞ்சமடைந்துள்ளனர். சிரியாவைச் சேர்ந்த 40 லட்சத்துக்கும் மேற்பட்டோர் பல்வேறு நாடுகளுக்கு அகதிகளாகச் சென்றுள்ளனர்” எனத் தெரிவித்தார். (ம)

“ கடந்த ஆண்டில் தெற்கு சூடானைச் சேர்ந்த 40 லட்சம் பேர் அண்டை நாடான உகண்டாவில் தஞ்சமடைந்துள்ளனர். சிரியாவைச் சேர்ந்த 40 லட்சத்துக்கும் மேற்பட்டோர் பல்வேறு நாடுகளுக்கு அகதிகளாகச் சென்றுள்ளனர்.

## வார்ம்பியர் உயிரிழப்பு; வடகொரியாவுக்கு அமெ. கண்டனம்

பியாங்யாங், ஜூன் 22
வடகொரியாவை உளவுபார்த்தார் எனத் தண்டனைக்கு உள்ளாக்கப்பட்டு பின் உடல் நிலை மோசமடைந்ததால் விடுவிக்கப்பட்ட அமெரிக்க இளைஞர் ஒட்டோ வார்ம்பியர் உயிரிழந்ததை அடுத்து வடகொரியாவுக்கு அமெரிக்கா கடும் கண்டனம் விடுத்தது.

அமெரிக்காவைச் சேர்ந்த 22 வயதான ஒட்டோ வார்ம்பியர் கடந்த ஆண்டு வடகொரியாவுக்கு சுற்றுலா சென்றிருந்தபோது அந்த நாட்டை உளவு பார்த்தார் என்று தெரிவித்து வடகொரிய அரசு அவரை கைது செய்தது. இந்தக் குற்றச்சாட்டில் ஒட்டோ வார்பியருக்கு 15 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து சிறைத் தண்டனை அனுபவித்து வந்த வார்ம்பியரின் மூளை திசுக்களில் பாதிப்புகள் ஏற்பட்டு அவர் செயல்படாத நிலை ஏற்பட்டது. அவரது உடல் நிலை மோசமானதைத் தொடர்ந்து கடந்தவாரம் வடகொரியாவிலிருந்து அமெரிக்கா அனுப்பப்பட்டார். இந்த நிலையில் அமெரிக்காவில் கடந்த திங்கட்கிழமை அவர் உயிரிழந்தார்.

“வடகொரியாவில் நடப்பது காட்டு மிராண்டித்தனமான ஆட்சி. சட்டத்தின் ஆட்சியையும் தனிமனித ஒழுக்கம் மற்றும் நாகரிகத்தையும் கடைப்பிடிக்காத ஆட்சியாளர்களின் கையில் சிக்கும் அப்பாவி மக்கள் சந்திக்கும் இதுபோன்ற துயரகரமான நிகழ்வுகளைத் தடுக்கவேண்டும் என்னும் எனது தலைமையிலான ஆட்சி நிர்வாகத்தின் கொள்கைக்கு வலிமை சேர்க்கும் விதமாக ஒட்டோவுக்கு நேர்ந்த அவலமுடிவு அமைந்துள்ளது” என ட்ரம்ப் தனது கண்டன அறிக்கையில் குறிப்பிட்டார். (ம)



# இணுவில்
# அருள்மிகு கந்தசுவாமி கோயில்
# தேர்த்திருவிழா சிறப்பிதழ்- 22.06.2017



**ஆனி 08 (22.06.2017) வியாழக்கிழமை**
**முற்பகல் 10.00 மணிக்கு தேர்த்திருவிழா**

### மஹோற்சவக் குருவின் ஆசிச்செய்தி

கருணைகூர் முகங்களாறும்
கரங்கள் பன்னிரண்டுங்கொண்டே
ஒரு திரு முருகன் வங்தாங்கு
உதித்தனன் உலக முய்ய"

எனக் கந்தபுராணம் கூறுவதற்கு அமைய இக் கலியுகத்தில் கந்த வழிபாடே சிறப்பானதாகும். அந்தவகையில் வரலாற்று முக்கியம் வாய்ந்த இன்னல்கள் நீக்கிடும் இணுவைப் பெருமான் உலகப்பெரு மஞ்சத்தின் சொந்தக்காரன் தேர் ஏறி ஊர்மக்கள் ஒன்று கூடி "முருகா" என்று பக்திபரவச உணர்வோடு கோஷமிட வீதியுலா வருகின்றார். தீயவை அழிந்து நல்வர்களை காத்தருள வருகிறார். அன்புக்கு அடி பணியும் முருகப்பெருமான் அன்பர்களை காண நேரில் வருகிறார் இத்தருணத்தில் அனைவரும் ஒன்றுபட்டு ஒற்றுமையுடன் வருகை தந்து முருகப்பெருமானின் அஷ்ட ஐஸ்வரியங்களையும் பெற்று வளமுடன் வாழ வேண்டும் என்று வாழ்த்துகின்றோம்.

**மஹோற்சவக்குரு**
**இராம ஸ்ரீஸ்கந்த ஸ்ரீ கஜராமக் குருக்கள்**
**பரம்பரைக் குருக்கள்**

### அருளாசிச்செய்தி



சைவமும் தமிழும் தம் உயிரென மதிக்கும் மாண்புடைய மக்கள் வாழும் திருப்பதி இணுவில். இத்திருப்பதியில் பழம் பெரும் ஆலயங்கள் அமைந்திருக்கின்றன. இணுவில் திருக் கிராமம் தெய்வீகம் நிறைந்த ஞான பூமியாகும். இந்த ஞான பூமியிலே தான் பெரிய கோயில் எனப்படும் இணுவில் கந்தசுவாமி கோயில் அமைந்து காணப்படுகின்றது. மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்றும் ஒருங்கே அமையப் பெற்ற ஆலயமாக எழில் கொஞ்சும் இயற்கை வனப் புடன் கந்தசுவாமி கோயில் அமைந்துள்ளது. இத் திருத்தலத்தின் வருடாந்த மஹோற்சவப் பெருவிழாக்களில் இன்று தேர்த்திருவிழா மிகச் சிறப்பாக அமைந்துள்ளது. எல்லாம் வல்ல முருகப் பெருமான் எல்லோரும் வேண்டும் வரம் கொடுத்து நல்ல வண்ணம் வாழ வழிகாட்ட வேண்டு மென நல்லாசிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு'

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரியார்**
**ஆதீன குருமுதல்வர்- நல்லை ஆதீனம்.**

### எழிலார்ந்த இணுவையெம்பதியில் தமிழான கடவுளே தேரேறி அருள் செய்ய வேண்டும்

சைவத் தமிழ் பண்பாட்டுக்கும் இயல்,இசை, நாடகம் எனும் முத்தமிழும் தழைத்தோங்கும் அழகான திருவூராக விளங்குவது இணுவில். இணையிலி என அழைக்கப்பட்ட நிலப்பரப்பின் பெயரே மருவி இணுவில் என வந்ததாக அறிய முடிகின்றது. இத்தகு இணுவைத் திருப்பதியில் வரலாற்றுப் புகழ்பெற்ற ஏராளமான ஆலயங்களைக் காணலாம். இணுவில் கந்தசுவாமி கோயில் காலத்தால் முற்பட்ட வரலாற்றுப் பெருமைகளைப் பறைசாற்றி நிற்கும் ஆலயம். ஏவிளம்பி வருட மஹோற்சவங்கள் சிறப்பாக இடம்பெற்று இன்று தேர்த்திருவிழா மிக சிறப்பாக நடைபெறுகின்றது. கந்தசுவாமியார் சங்காரத் தொழிலைப் புரிய தேரேறி வருகின்றார். எம்மவரின் துயர் தீர்த்து எல்லோருக்கும் நல்ல வாழ்வு தர முருகப்பெருமானை வழிபடுவோம். வாரீர்.

**மதுரகவி**
**காரை எம்.பி.அருளானந்தன்.**

### ஆசிச்செய்தி

புண்ணியம் நிறைந்த கலைகள் எல்லாம் ஓங்கிநிற்க பக்திபரவசம் நிரம்பிய இணுவை பதியிலே சக்தி, பக்தி, முக்தி நிறைந்த கரு ணைக் கடவுள் முருகப்பெருமான் தேருலா வருவது திருவருள் தருவது கண்கொள்ளாக் காட்சியாகும். அத்தருணம் பக்த அடியார் கள் அனைவரும் வருகை தந்து முருகப்பெருமான் அருளைப் பெற வேண்டி நிற்கின்றோம்.

**ஆலய பரம்பரை பிரதமகுருக்கள்மார்**
**ஸ்ரீஸ்கந்த ஜெயந்திராமசர்மா**
**அபராஜிக் குருக்கள்.**

## தேர்த்திருவிழா சிறப்புற வாழ்த்துவோர்

**V.S.P**
**நல்லெண்ணெய்**
போலிகளைக் கண்டு ஏமாறாமல்
V.S.P நல்லெண்ணெய்
வாங்கும்போது
தயாரிப்பாளரும்ஏக விநியோகஸ்தரும் :
**பரிமளா ஸ்ரோர்ஸ்**
26/A , மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
எனும் முகவரியைப் பார்த்து வாங்கவும்.
26/A , மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

**அண்ணா தொழிலகம்**
அண்ணா நிறுவனத்தின்
புதியதோர் உற்பத்தி
அண்ணா நூடில்ஸ்
உடனடித் தயாரிப்பு
உண்ணச் சுவையான
உணவு அண்ணா உற்பத்தி
விற்பனை நிலையங்கள்
எல்லா இடமும்
பெற்றுக்கொள்ளலாம்.


**துரை வீதி, இணுவில்.**
**021 224 1565**

**சதீஸ்**
**வீடியோ அன் போட்டோ**
வீடியோ, போட்டோ மங்கலகரமான
நிகழ்வுகளுக்கு மிகத் துல்லியமான
முறையில் செய்து தரப்படும்.

கே.கே.எஸ். வீதி.
இணுவில்கிழக்கு, இணுவில்
077 956 7800

**ஸ்ரீ லக்ஷ்மி பிளாசா**
**Sri Lakshmi Plaza**
திருமணம், கொண்டாட்டங்கள்
பெருநிறுவன நிகழ்வுகள் பிறந்த
நாள் விழா விசேட நிகழ்வுகள்
இன்னும் பல..

E-mail :- jaffnasrilakshmiplaza@gmail.com
http://www.facebook.com/jaffnasrilakshmiplaza
021 222 9296, 075 783 6550 / 0044 746 657 8511
இல.84, ஐயனார் கோயில் வீதி,
தட்டாதெரு சந்தி (அருகில்), யாழ்ப்பாணம்.

**ஆனந்தா**
கட்டடப் பல்பொருள் நிலையம்
சகலவிதமான கட்டடப் பொருள்கள்,
கூரைத்தகடுகள் மற்றும் சிமெண்ட்,
பெயின்ற் வகைகள்.
**Anantha**
Building Materials Supplier
Dealers in Timber.
Cement & Hardware
கே.கே.எஸ் வீதி, இணுவில்.

**FASHION HOUSE**
**பெஷன் ஹவுஸ்**
சகலவிதமான அலுமினியம், பித்தளை
பாவனைப் பொருள்கள் விற்பனையாளர்
No. 203, K.K.S. Road, Jaffna.
Tel: 021 222 8713
Fax : 021 222 3034,
Website: fashionhousejaffna.com

**VARMA**
**HARDWARE**
சகலவிதமான கட்டடப்
பொருள்கள்,
கூரைத்தகடுகள் மற்றும்
சிமெண்ட், பெயின்ற் வகைகள்.
K.K.S Road, Inuvil.

**அம்பிகை Ambihai Fancy**
215(75) K.K.S Road, Jaffna
T.P: 021 222 5759
E.mail: sivaambihai@gmail.com
K.K.S Road, Inuvil. T.P 021 224 2074
**அம்பிகாபதி Ambihapathy**
Fancy Goods Dealers in : Imitation Jewellery,
Fanncy Goods & Cosmetice
66, Grand Bazaar, Jaffna.
66, பெரியகடை, யாழ்ப்பாணம்

**நல்லூர்க் கந்தன்**
**திருமண சேவை**

எல்லா மதம், எல்லா
இனம், வெளிநாடு,
உள்நாடு ஆகிய சகல
திருமணங்களும்
எம்மால் செய்து
கொடுக்கப்படும்
வி.ஜெயந்தி
தொ.பே. 077 973 3183,
021 227 1468 / 021 222 7002
கஸ்தூரியார் வீதி,

**சாந்தி புடைவை அகம்**
No.157, Modern Market,
(Power House Road), Jaffna.
021 222 2045
Branch: K.K.S.Road,
Kondavil.
Tel: 021 224 1590

**ராஜ் சுவையகம் கிறீம்ஹவுஸ்**
ஐஸ்கிறீம் மற்றும் சிற்றுண்டி
வகைகள் சுவையாகவும்
தரமாகவும் வழங்கப்படும்
K.K.S Road, இணுவில்.

**சிவசம்பு களஞ்சியம்**
அபிஷேகப் பல்பொருள் வாணிபம்
அனைத்து வகையான அபிஷேகப்
பொருள்களையும் இங்கு
பெற்றுக் கொள்ளலாம்.
இல.03, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 1783

**கணேசன் சென்ரர்**
புடைவை அழகுசாதனப்
பொருள்கள் விற்பனையாளர்
கே.கே.எஸ் வீதி, இணுவில்.
021 224 1508

**நாதன் சகோதரர்**
**Nathan Brother's**
பல்பொருள் வாணிபம்
கே.கே.எஸ் வீதி,
இணுவில்.

(C/28970)(10)

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# பிடிவாதத்தை சு.க. கைவிடவேண்டும்

நிறைவேற்று அரச தலைவர் முறைமையை முற்றாக ஒழிப்பேன் என 2015 தேர்தலில் மைத்திரிபால சிறிசேன வும் ரணில் விக்கிரமசிங்கவும் மக்களுக்கு உறுதிமொழிவழங்கியிருந்தனர். இவர்கள்மட்டும்அல்ல, இதற்கு முன்னர் சந்திரிகா அம்மையாரும், மகிந்த ராஜபக்சவும்கூட இதுபோன்று கூறிக்கொண்டுதான் ஆட்சிக்கு வந்தார்கள். ஆனால் பதவியிலிருந்து நீங்கியபோதும், நீக்கப்பட்ட போதும் அவர்கள்தமது வாக்குறுதியை நிறைவேற்றியிருக்கவில்லை. மீண்டும் அதுவேதான் நடக்கப் போகிறதோ என்கிற அச்சம் எழத் தொடங்கியிருக்கிறது.

நிறைவேற்று அரச தலைவர் முறைமையை ஒழிப்பது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தனியே சந்தித்துப் பேசுவதற்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சி முடிவு செய்திருப்பதன் பின்னணியில் இந்த அச்சம் நிராகரிக்கப்படமுடியாதது.

நிறைவேற்று அரச தலைவர் முறைமையைத் தக்க வைப்பதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை இணங்க வைத்துவிட்டால், பின்னர் அதைக் காட்டியே ஐக்கிய தேசியக் கட்சியையும் வழிக்குக் கொண்டு வந்துவிடலாம் என்றுசிறிலங்கா சுதந்திரக்கட்சி கருதுகின்றது. அதற்காகவே கூட்டமைப்புடன் பேச அது முடிவு செய்துள்ளது.

நிறைவேற்று அதிகார அரசதலைவர் முறையைப் பேணுவதற்கு அந்தக் கட்சி விரும்புவதற்கு இரு காரணங்கள் இருக்கின்றன. அவற்றில் முதலாவது, கூட்டு அரசு ஒன்று அமைக்கப்பட்டிருக்கும் நிலையில் அரசின் நிர்வாகம் முழுமையையும் பெரும்பாலும் ஐக்கிய தேசியக் கட்சியே வைத்திருப்பதால்அரசதலைவர்பதவியின்அதிகாரங்களை விட்டுக்கொடுப்பதுசுதந்திரக்கட்சிக்குப்பலவீனமாகிவிடும் என்று அதுகருதுகின்றது. இரண்டாவது, அதிகாரம்மிக்கஅரச தலைவர்முறைமையைஒழித்துவிட்டால்கட்சியில்தனக்கிருக்கும்பலத்தைப்பயன்படுத்திக்கொண்டுமகிந்தராஜபக்ச மீண்டும் ஆட்சியைப் பிடித்துவிடக்கூடும் என்கிற அச்சம்.

இவற்றின் அடிப்படையிலேயே, கட்சியின் சொந்த நலன் கருதியே, நிறைவேற்று அதிகார அரச தலைவர் முறையை நீக்குவதற்கு சுதந்திரக் கட்சி பின்னடிக்கிறது.

இந்த ஆட்சி முறையைஐக்கியதேசியக்கட்சிதான்கொண்டு வந்தது என்றாலும், அதன் வழியாக நீண்ட காலம் பயனடைந்தது சுதந்திரக் கட்சியேதான். அதனாலோ என்னவோ, இந்த ஆட்சி முறையைவிட்டுக்கொடுப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சி தயாராகவே இருக்கிறது. இப்போது பிரச்சினை சுதந்திரக் கட்சிதான்.

இந்தப் பிரச்சினை தீர்க்கப்படாத வரையில், புதிய அரசமைப்புஉருவாக்கத்திற்கானவழிநடத்தல்குழுவின்முயற்சிகள் தடைப்படப்போகின்றன. இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான வரலாற்று வாய்ப்பாகத் தற்போதைய கூட்டு அரசு பார்க்கப்பட்டாலும், அந்தக் கூட்டேதான் இப்போது புதிய பிரச்சினைக்கான காரணமாகவும் உள்ளது.

புதிய அரசமைப்பில் அதிகாரப் பகிர்வு விடயங்களே கடுமையானஎதிர்ப்பைச் சந்திக்கும்என்று எதிர்பார்க்கப்பட்டதற்கு மாறாக, தென்னிலங்கைக்கட்சிகள்தமதுகட்சிநலனே பெரிது என்று செயற்படுவது தெளிவாகத் தெரிகிறது. சிறுபான்மைமக்களின்பிரச்சினைகளும்அதிகாரப்பகிர்வும் அவர்களுக்கு இரண்டாம் பட்சமே என்பது இதற்கூடாகத் தெளிவாகின்றது.

அதிகாரங்களைப் பகிர்ந்துகொள்வதிலும் சிறிலங்கா சுதந்திரக்கட்சி முழுமையான இணக்கப்பாட்டோடு இருக்கிறது என்றுகூறி விடமுடியாது. சிலபல முட்டுக்கட்டைகளைப் போட்டு வருகிறது. சில அதிகாரங்களைப் பகிர்வதற்கு எதிர்ப்பையும் வெளியிட்டு வருகிறது.

பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான இதுபோன்ற வாய்ப்புகளைத் தவற விடும் வகையில் தெற்கு அரசியல் கட்சிகள் இப்படித் தான்தோன்றித் தனமாக நடப்பது கண்டிக்கத்தக்கது. சுதந்திரக் கட்சி உடனடியாக இந்தப்போக்கைக் கைவிட்டு, நிறைவேற்று அதிகார அரசதலைவர் முறையை ஒழிப்பதற்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்குவதுடன், அதிகாரப் பகிர்விற்கும் நிபந்தனையற்ற ஆதரவை வழங்குவதற்கும்முன்வரவேண்டும். அதுவே இலங்கையின் எதிர்காலத்திற்குச் சிறந்தது.

கட்டுரை

# வடக்கு மாகாண பொருளாதாரத்தில் சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில்களின் அபிவிருத்தி

அமரசிங்கம் கேதீஸ்வரன்

கைத்தொழில் துறையின் அபிவிருத்தியின் ஊடாகவே வளர்ந்துவரும் பொருளாதாரம், தனது உயர்வினைத் திறனை வெளிப்படுத்த முடியும். முதல் நிலை விளைபொருள்களை வெளியீடாகத் தரும் விவசாயத் துறையும், இணைப்புச் சேவைகளை வழங்கும் சேவைத் துறையும் ஒரு பொருளாதாரக் கட்டமைப்பில் அவசியமானவை. இருப்பினும், துரித வளர்ச்சியை முன்கொண்டு செல்லும் துறையாக கைத்தொழில் துறையே செயல்பட்டு வருகிறது.

இந்த நாட்டின் கைத்தொழில் துறை, வருடாந்தம் 15 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளதுடன், 2015 இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 28.5 சதவீதத்தைப்பங்களிப்புச்செய்துள்ளது. அத்துடன் மொத்த ஊழியப்படையில் 26 சதவீதத்தினருக்கு தொழில்வாய்ப்பை வழங்கியுள்ளது.

### கைத்தொழில்துறை நான்கு பெரும் பிரிவுகளை உள்ளடக்கியதொன்று

கைத்தொழில் துறையின் செயற்பாட்டுத்திறனை அடிப்படையாகக் கொண்டு அது நுண் தொகைத் தொழில், சிறியகைத்தொழில், நடுத்தரக் கைத்தொழில், மற்றும் பெரிய கைத்தொழில் என வகைப்படுத்தப்படும். உற்பத்தித் துறைசார் கைத்தொழில்களை வரையறை செய்யும்போது, அதில் வருடாந்த நிதிச்சுழற்சி, ஊழிய வேலைவாய்ப்பை வழங்கியுள்ள அளவு ஆகியவற்றின் அடிப்படையில் வரையறுக்க இயலும். அந்தவகையில் 15 மில்லியனுக்கு கீழ்ப்பட்ட வருடாந்த நிதிச் சுழற்சியும், 10 க்கு குறைவான ஊழிய எண்ணிக்கையும் கொண்டதாக அமையும் தொழில்கள் நுண்தொழில்கள் என வகைப்படுத்தப்படுகின்றன. இதேபோல 16 தொடக்கம் 250 வரையான வருடாந்த நிதிச்சுழற்சியும், 11 தொடக்கம் 50 வரையான ஊழியர் எண்ணிக்கையும் கொண்ட கைத்தொழில் முனைவுகள் சிறிய கைத்தொழில்கள் எனவும், 251 தொடக்கம் 750 மில்லியன் அளவிலான வருடாந்த நிதிச்சுழற்சியும், 51 தொடக்கம் 300 வரையிலான வேலைவாய்ப்பையும் வழங்கும் தொழில்துறைகள் நடுத்தரக் கைத்தொழில்கள் எனவும் வகைப்படுத்தப்படுகின்றன.

இலங்கையின் மொத்த தொழில் முயற்சிகளில் 75 சதவீதத்துக்கும் அதிகமானவை சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. மொத்த தொழில்வாய்ப்பில் 45 சதவீதத்தை வழங்கும் துறையாக இது இருந்துவருகிறது. மாகாணமட்டத்தில் இதனை நோக்கும்போது, மேல் மாகாணத்திலேயே அதிகளவு தொழில்துறைகள் வளர்ச்சியடைந்திருப்பதுடன் ஏனைய எட்டு மாகாணங்களிலும் ஒருசிறியளவான அபிவிருத்தியே இந்தத் துறையில் ஏற்பட்டுள்ளது. வடக்கு மாகாணத்தை பொறுத்து கணிசமான வாய்ப்புக்கள் இந்தத்துறைக்கு வழங்கப்பட்டது எனச் சொல்ல முடியாதுள்ளது.

### முக்கியத்துவம்பெறும் சிறிய மற்றும் நடுத்தரத் தொழில் முயற்சிகள்

அந்த வகையில் சிறியமற்றும் நடுத்தரத் தொழில் முயற்சிகள், பொருளாதார வளர்ச்சிக்கான அடிப்படையாகவும், பிராந்திய அபிவிருத்திவேலைவாய்ப்புஉருவாக்கம், மற்றும்வறுமைதவிர்ப்பு என்பனவற்றுக்கான முதன்மைக் காரணியாகவும் இருந்து வருகின்றன. தற்போது இலங்கையில் 245 அரசுடமைதொழில் முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதுடன் இவற்றில் 55 தொழில் முயற்சிகள் உபாய ரீதியாக முன்நிலைக்குத் தெரிவு பெற்ற முயற்சிகளாகக் காணப்படுகின்றன.

நெருக்கடி மிக்க வடக்குமாகாண பொருளாதாரத்தில் சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில்களின் அபிவிருத்தி மிகமிக அவசியமானதாகும்.

குறிப்பாக தொழில் முயற்சியாண்மை, தொழில் நுட்பம், முகாமைத்துவ ஆற்றல் ஆகிய மூன்று அடிப்படைத் திறன்கள் மீதும் நெருக்கடிகளை எதிர்கொள்ளும் வடமாகாண பொருளாதாரம், புதிய தொழில்துறையாக்கத்துக்குள் நுழைவதற்கு நன்கு திட்டமிடப்பட்ட அணுகுமுறைகளும், நிறுவன ரீதியான வழிப்படுத்தல்களும் அவசியமானவை. அந்த வகையில் இந்தக் குடிசனத்துறைசார் முயற்சிகளினது வளர்ச்சியினாலேயே சிறியமற்றும் நடுத்தர தொழில் முனைவுகள் வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்லப்பட முடியும்.

இந்தத்துறைகளில் முன்னேற்றம் எட்டப்படாமைக்கான காரணிகளாக கீழ்க்கண்டவை அமைகின்றன.

### முன்னேற்றம் எட்டப்படாமைக்கான காரணிகள்

01. முறையான சந்தை உபாயம் காணப்படாமை மற்றும் இளம் தொழில்களின் பாதுகாப்புக்கு போதிய முன்னுரிமை அளிக்கப்படாமை
02. தயாரிப்பின் உயர் செலவினால் தரம் குறைந்த பொருள்கள் உற்பத்தி செய்யப்படல்
03. குறைந்த அளவில் அமைந்த பெறுமதி சேர்ப்பு.
04. முறையான தொடர்புகள் காணப்படாமை
05. போதிய நிதியளிப்பாளர் காணப்படாமை.
06. தயாரிப்பு, பொதியிடல், மற்றும் தரப்படுத்தலில் குறைந்த தரம் காணப்படுகின்றமை
07. குறைந்த சந்தைத் தொடர்புகள்
08. உயர்பரிமாற்ற செலவு, என்பவையே. அவைகளாகும்.

இலங்கை மத்திய வங்கி, தனது பிரதான பிராந்திய செயற்பாடாக இந்தத்துறையை தெரிவு செய்து வழிப்படுத்தி வருகின்ற போதிலும், வணிகவங்கிகளும், நிதிசார் அமைப்புக்களும், கடன் வழங்கலில் தகுதியுடைய பிணைகளின் பெயரிலேயே கடன் வழங்குவதால், உருத்தாவணம் பெற்றுக்கொள்ள இயலாது அரச காணிகளில் குடியிருப்போர் இந்த காணிகளை ஈடாக பரிமாற்றம் செய்ய முடியாது போவதால், மத்திய வங்கியின் சலுகைகளை ஒரு சாரார் அனுபவிக்க முடியாதுள்ளனர். அத்துடன் தொழில்நுட்ப அறிமுகம் என்ற வகையில் உரிய பொறிமுறைகள் குறித்து அக்கறை செலுத்தப்படவில்லை. எவ்வாறாயினும் வடக்கு மாகாணத்தை துரித கைத்தொழில் வலையமாக மத்திய அரசுபிரகடனம் செய்துள்ள நிலையில், சிறியமற்றும் நடுத்தரக் கைத்தொழில்களின் துரித செயல்பாட்டுக்கு பல பொருத்தமான செயற்பாடுகள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. மாகாணஅரசுக்கு அதிகாரப் பகிர்வின் கீழ் பிரித்து வழங்கப்பட்ட துறைகளில் ஒன்றாக கைத்தொழில்துறை இருந்து வரும் நிலையில், மாகாண அரசு இதில் அக்கறை செலுத்திச் செயற்பட அதிக விடயங்கள் உள்ளன.

கட்டுரையாளர்-
கிளிநொச்சி மாவட்டச் செயலக
உதவித் திட்டமிடல் பணிப்பாளர்



# பொருளாதார நெருக்கடிக்குள் வடபகுதி மக்கள்

சேரலாதன்

இலங்கையின் வடபகுதியில் வாழ்கின்ற தமிழ் மக்கள் பொருளாதார ரீதியில் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். தொழில் வாய்ப்புக்கள் கிடைக்காமை, விவசாய முயற்சிகள் பயன்தராமை, அதிகரித்த கடன் சுமைகள் ஆகியவை இதற்கான பிரதான காரணங்களாகும்.

போருக்கு முந்திய காலப்பகுதியில் வடபகுதி மக்கள் மகிழ்ச்சியான வாழ்வை வாழ்ந்து வந்தனர். அப்போதெல்லாம் இங்குள்ளவர்கள் அரச துறைகளில் இணைந்து நாட்டின் பல பாகங்களிலும் பணிபுரிந்து வந்தனர். வடக்கை விட்டு வெளியிடங்களில் பணி புரிந்தவர்கள் தமது மாதாந்த வேதனத்தின் பெரும் பகுதியைச் சேமித்து காசுக் கட்டளைகள் (மணி ஓடர்கள்) வாயிலாகத் தமது வீடுகளுக்கு அனுப்பி வைப்பார்கள். மணி ஓடர் பொருளாதாரம் என இது விமர்சிக்கப்பட்டது. தற்போது அரச வேலைகள் கிடைப்பது குதிரைக்கொம்பாக மாறிவிட்டது. வேலையற்ற பட்டதாரிகள் தொடர் போராட்டங்களில் ஈடுபடும் அளவுக்கு நிலைமை மோசமாக மாறியுள்ளது.

வடபகுதி விவசாயிகளைப் பொறுத்தவரையில் அவர்கள் சிறந்த உழைப்பாளிகளெனப் பெயர் பெற்றவர்கள். முன்னரெல்லாம் அவர்களது உழைப்புக்கேற்ற வருமானம் கிடைத்து வந்தது. இதனால் பொருளாதாரரீதியான சிரமங்களை இவர்கள் எதிர்கொண்டதில்லை. ஆனால் இன்றோ நிலைமை மாறிவிட்டது.

சந்தைகளைப் பொறுத்தவரையில் விவசாய உற்பத்திப் பொருள்களுக்கு ஒரே சீரான விலைகள் வழங்கப்படுவதில்லை. அடிக்கடி ஏற்ற இறக்கங்கள் காணப்படுவதால், விவசாயிகள் நியாயமான வருமானத்தைப் பெறுவதில் சிக்கலை எதிர்கொண்டு வருகின்றனர். இதைவிட உற்பத்திச் செலவினர்களுக்கு ஏற்ற வகையில் தமது விளை பொருள்களை விற்று விருமானம் ஈட்டமுடியாத நிலையும் இங்கு காணப்படுகின்றது.

நெற்செய்கையும் இங்கு இடம்பெறத் தவறவில்லை. வன்னிப் பெரு நிலப்பரப்பைப் பொறுத்தவரையில் பெரும் போகம், சிறுபோகம் என இரண்டு வகையான நெற்செய்கைகள் இடம்பெறுகின்றன. பெரும்போகத்தின் போது மழையை நம்பியே பயிர்ச்செய்கை இடம்பெறுகின்றது. மழைபொய்த்தால் எல்லாமும் பொய்த்துவிடும். சிறுபோகச் செய்கைகள் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் குளங்களின் நீரை நம்பி மேற்கொள்ளப்படுகின்றன. குடா நாட்டைப் பொறுத்தவரையில் மழையை நம்பியதான பெரும்போக நெற்செய்கை மாத்திரமே இடம்பெறுகின்றது. மழை பொய்த்தால் விவசாயிகள் பாடு திண்டாட்டம்தான். கடந்த ஆண்டும் இதே நிலைதான் காணப்பட்டது.

> “
> போர்காரணமாக வடபகுதியிலிருந்து பெருமளவானவர்கள் புலம் பெயர்ந்து வெளிநாடு களில் வாழ்கின்றனர். இவர்கள் தமது உறவினர் களுக்கு அனுப்பிவைத்த பணம் அவர்களது பொருளாதாரத் தேவைக்குப் பெரிதும் உதவியது. இங்கு வசித்தவர்கள் பட்டினியால் இறந்து போகாமைக்குப்இந்தப் பணமே பெரிதும் உதவியது என்பதை எவருமே மறுக்க முடியாது.


### வட பகுதியைவிட தென் பகுதியில் தொழில் வாய்ப்புக்கள் அதிகமுண்டு

நாட்டின் தென்பகுதியில் ஏராளமான தொழிற்சாலைகள் அமைந்துள்ளன. அவற்றில் பெரும் எண்ணிக்கையானவர்கள் தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுள்ளனர். இதனால் ஓரளவாவது தமது பொருளாதாரத் தேவைகளை அவர்களால் சமாளிக்க முடிகின்றது. ஆனால் வடபகுதியில் இந்த நிலை காணப்படவில்லை. ஏற்கனவே இருந்த தொழிற்சாலைகளும் போரின்போது அழிவடைந்து விட்டன. இவற்றுக்கு மாற்றீடாகப் புதிய தொழிற்சாலைகள் இங்கு அமைக்கப்படவில்லை. அரசு இந்த விடயத்தில் அக்கறைகாட்டுவதாகவே தெரியவில்லை. போர் காரணமாக வடபகுதியிலிருந்து பெருமளவானவர்கள் புலம் பெயர்ந்து வெளிநாடுகளில் வாழ்கின்றனர். இவர்கள் தமது உறவினர்களுக்கு அனுப்பி வைத்த பணம் அவர்களது பொருளாதாரத் தேவைக்குப் பெரிதும் உதவியது. இங்கு வசித்தவர்கள் பட்டினியால் இறந்துபோகாமைக்குப் இந்தப்பணமே பெரிதும் உதவியது என்பதை எவருமே மறுக்க முடியாது. ஆனால் உலக நாடுகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் காரணமாக இதிலும் தொய்வு நிலையொன்று காணப்படுகின்றது.

இளைஞர்கள் தவறான வழிகளில் செல்வதற்குத் தொழில்வாய்ப்புக்கள் இல்லாமையும் ஒரு காரணமாகும். தமக்குத் தேவையான பணத்தைப் பெறுவதற்கு இளைஞர்கள் முதலில் தொழில்வாய்ப்புக்களைத் தேடுகின்றனர். அது சாத்தியமாகாது விட்டால் சட்டவிரோதமான வேறு வழிகளை இவர்கள் நாடிச்செல்கின்றனர். போதிய தொழில் வாய்ப்புக்களை வடபகுதியில் உருவாக்குவதன் மூலமாக இந்த இழி நிலையைப் போக்க முடியும். இளைஞர்களும் அரச வேலைதான் வேண்டுமென்ற பிடிவாதப்போக்கைத் தளர்த்தி தனியார் துறைகளிலும் கால் பதிப்பதற்குத் தயாராக இருத்தல் வேண்டும். தொழில்களில் வேறுபாடு ஒன்றுமே கிடையாது. அரச துறையோ, தனியார் துறையோ அவரவருக்கு ஏற்ற தொழிலைத் தெரிவு செய்வதே புத்திசாலித்தனமானது.

### தொடர்ந்தும் போரைக் காரணம் காட்டுவது கையாலாகாத்தனம்

எதற்கெடுத்தாலும் போரையே காரணமாகக் கூறிக்கொண்டிருப்பதை இனியாவது தவிர்த்துக்கொள்ள வேண்டும். போர் ஓய்ந்து எட்டு ஆண்டுகளாகிவிட்டன. போரின்வடுக்கள் இன்னமும் மறையாமல் இருக்கின்றபோதிலும், அவற்றையே நினைத்துக் கொண்டிருப்பதால்பயன் எதுவும் கிடைத்துவிடப்போவதில்லை. இனிமேல் ஆக வேண்டியதைச்சிந்தப்பதே புத்திசாலித்தனமானது. வடக்கில் மாகாணசபை என்ற பெயரில் தமிழர்களுக்கான ஆட்சியொன்று அமைந்துள்ளது. ஆனால் அங்கு நீயா? நானா? என்ற பலப்பரீட்சை இடம்பெறுகின்றதேயொழிய உருப்படியான வேலைத்திட்டங்கள் இடம்பெறுவதாகத் தெரியவில்ல. இந்த நிலை தொடருமேயானால் வடபகுதி மக்களின் நிலை மிக மோசமானதாகவே மாறிவிடும். ஆகவே மாகாணசபை ஊடாக மத்திய அரசுக்கு அழுத்தங்களைக் கொடுப்பதன் வாயிலாக வடபகுதியின் பொருளாதார நிலையை அபிவிருத்தி செய்வதற்கான வேலைத்திட்டங்களை உருவாக்க முடியும். இந்த வகையில் புலம்பெயர்ந்து வாழ்கின்ற தமிழர்களும் தங்களால் இயன்ற பங்களிப்பை வழங்கவும் முடியும். இவை எல்லாவற்றுக்கும் மேலாக இலங்கை அரசு இனவேறுபாட்டைக் கைவிட்டு உதவுவதன் வாயிலாகவே வடபகுதி மக்களின் பொருளாதரத்தில் அபிவிருத்தியைக் காண முடியும்.



## ஆசிரியருக்கான கடிதம்

### தலைகளை கண்டபின்னராவது தலைமைகளின் மெளனம் கலையுமா?

கண்ணோ மூடாமல் கொள்ளாமல், ஆடாமல் அசையாமல், தேடாமல் நாடாமல் ஓடாமல் எவருக்கும் அகப்படாமல் இரைபோடும் மனிதருக்கே இரையாகத் தம்முயிர் ஈந்த அந்த 37 மாடுகளின் முகங்களின் ஈரம் கண்டு அழுதவர்கள் பல பேர். 74 கண்களும் சைவமக்களைப் பார்த்து பல கேள்விகளை முன் வைத்தே கண்ணீர் வடித்திருக்கின்றன. அது மட்டுமல்ல, உங்களுக்கு நாம் என்ன துரோகமிழைத்தோம் என்ற நீதி நெறி விளக்கத்திற்கும் விடையைக் கேட்டுக் கண்கள் மூடாது குளிரூட்டப்பட்ட அறையில் பயணித்தன. அவை எருதுகளாக இருந்தாலும் சரி, பசுக்களாக இருந்தாலும் சரி, கன்றுகளாக இருந்தாலும் சரி, சிவபூமியில் அவமாகி அநியாயமாகக் கொன்றழிக்கப்பட்ட செயல் சகல தலைமைகளையும் மெளனிக்கச் செய்யாமல் மெளனத்தைக் கலைத்துவிட்டது. இதற்குப் பரிகாரம்தான் என்ன? இவற்றைத் தடுக்க என்ன செய்யலாம்? இனிமேலும் இவ்வாறான அதர்மச் செயற்பாடுகள் நடைபெறாமலிருக்க என்ன செய்யலாம்? எவருடன் கதைக்க வேண்டும்? மாகாண சபையிலா? நாடாளுமன்றத்திலா? இந்து மத பீடங்களிலா? சைவமாநாடுகளிலா? அந்தணப் பெருமக்களுடனா? யார் எமக்குத் தலைவர்? என்பவை போன்ற வினாக்கள் விடையில்லாமல் மெளனிக்கின்றனவே? சிலவேளைகளில் எல்லோருமே தலைவர்களாக இருப்பதனால் மெளனம் வெற்றி பெறுகிறதோ என்னவோ?

எது எப்படியோ இப்படியான படுபாதகங்களைத் தடுத்து நிறுத்திவிட, ஞானப்பிரகாசர் போன்று ஒருவர் இருந்தாலே போதுமப்பா!

கருடன்

# கடன் அட்டைக்கான வட்டி 28 வீதமாக அதிகரிப்பு

## வட்டி வீத அறவீடுகள் 28 வீதமாக அதிகரிப்பு




வங்கிகளால் விநியோகிக்கப்படும் கடன்அட்டைக்களுக்குஅறவிடப்படுகின்ற வட்டி வீதங்களை அதிகரிப்பதற்கு வணிக வங்கிகள் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன என்ற தகவல்தெரிவிக்கப்படுகின்றது.

இதுவரை காலமும் கடன் அட்டைக்காகச்செலுத்தப்படவேண்டியயதான நிலுவைக்கட்டணத்துக்குவருடாந்த வட்டி வீதமானது 24 வீதமாக்கப்பட்டுள்ளதுடன் இந்த அதிகரிப்பானது எதிர்வரும் ஜூலை மாதம் முதலாம் திகதியில் இருந்து 28 வீதத்தால் அதிகப்படுத்தப்படவுள்ளது.

இதன்படி திருத்தப்பட்டதான வட்டி வீதங்கள் ஜூலை மாதம் முதலாம் திகதியின் பின்னதான அனைத்துக் கொடுக்கல் வாங்கல் செயன்முறைகளின் போதும் நடைமுறைப்படுத்தப்படும்என்பதானதகவலும்.வாடிக்கையாளர்களுக்கு அனுப்பப்படும் மாதாந்தக் கட்டண விபர அறிக்கையுடன் அதிகரிக்கப்பட்ட வட்டி வீதங்கள் தொடர்பான தகவல்கள் வழங்கப்படுமெனவும்தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்தஏப்ரல்மாதஇறுதிவரைஇலங்கையில் பாவனையிலுள்ள கடன் அட்டைகளின்எண்ணிக்கையானது 13 லட்சத்து 54 ஆயிரத்து 971 ஆகப் பதிவாகியுள்ளதாக மத்திய வங்கி சுட்டிக்காட்டியுள்ளது.

இவற்றுள் 28 ஆயிரத்து 621 கடன் அட்டைகள் உள்நாட்டில் இடம்பெறுவதானகொடுப்பனவுச்செயற்பாடுகளின் போதும் ஏனைய 13 லட்சத்து 26 ஆயிரத்து 350 கடன் அட்டைகளும் பன்னாட்டு ரீதியில் இடம்பெறுவதானகொடுப்பனவுச்செயற்பாடுகளின் போதும் பயன்படுத்தப்பட்டு வருகின்றமை குறித்து நோக்கத்தக்கது.

> “
> இதுவரை காலமும் கடன் அட்டைக்காக செலுத்தப்பட வேண்டியதானநிலுவைகட்டணங்களுக்கு வருடாந்த வட்டி வீதமானது.24 வீதமாக் கப்பட்டுள்ளதுடன் இந்த அதிகரிப்பானது எதிர் வரும் ஜூலை மாதம் முதலாம் திகதியில் இருந்து 28 வீதத்தால் அதிகப்படுத்தப்படவுள்ளது.



# இலங்கைக்கு வரும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கையில்வீழ்ச்சி

இலங்கைக்கு வருகை தரும்சுற்றுலாபயணிகளின்எண்ணிக்கை வீழ்ச்சியடைந்துள்ள தான தகவல்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

கடந்த மே மாதம் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுத் தகவலடிப்படையிலானபுள்ளிவிபரங்களின்படியே இந்த விடயங்கள் கூறப்பட்டுள்ளதுடன் மே மாதத்தில் இலங்கைக்கு வருகை தந்த சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கையானது 2.5 சதவீதத்தால் குறைவடைந்துள்ளது என்றும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

குறிப்பாக இலங்கையில் நிலவிவரும்சீரற்றகாலநிலைமாற்றங்கள் காரணமாகவே வருகை தரும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கையில்வீழ்ச்சிஏற்பட்டுள்ளதுடன் மத்திய கிழக்கு மற்றும் தெற்காசிய நாடுகளில் இருந்து வருகை தரும் சுற்றுலா பயணிகளின்எண்ணிக்கையே அதிகளவில் வீழ்ச்சியடைந் துள்ளமையும் குறித்து நோக்கத்தக்கது.

> “
> இலங்கையில் நிலவி வரும் சீரற்ற காலநிலை மாற்றங்கள் காரணமாகவே வருகை தரும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது

## ‘பிரபல வர்த்தகநாமம்’ விருது சிங்கர் சிறிலங்காவுக்கு

இலங்கையினபிரபலவர்த்தகநாமம்’ என்ற விருதை தொடர்ந்தும்11ஆவதுஆண்டாக சிங்கர் சிறி லங்கா நிறுவனம் பெற்றுக்கொண்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

வோட்டர்ஸ் எட்ஜில் அண்மையில் இடம்பெற்றிருந்த சிலிம் நெயில்சன் (SLIM Nielsen) மக்கள் விருதுகள் வழங்கும் நிகழ்விலேயே மேற்படி ‘இலங்கையில் மிகவும் பிரபலமான வர்த்தகநாமம்’ என்ற மதிப்புறு விருதைப் சிங்கர் சிறிலங்கா நிறுவனம் தனதாக்கிக்கொண்டுள்ளது.

தவிர, வருடத்தின் இளையோரின் அபிமானத்தை வென்ற வர்த்தகநாமம், நீடித்து உழைக்கும் நுகர்வோர் சாதனங்கள் - வருடத்தின் மிகச்சிறந்த வர்த்தகநாமம் ஆகியவற்றுடன் வருடத்தின் சிலிம் நெயில்சன் மக்களின் வர்த்தகநாமம் - 2017 போன்ற விருதுகளையும் சிங்கர் சிறிலங்கா நிறுவனம் வெற்றிகொண்டுள்ளமைநோக்கத்தக்கது.

SINGER®


CSE COLOMBO STOCK EXCHANGE

கொழும்பு பங்குப்பரிவர்த்தனை - 147-2/3, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம் - 212221455

21/6/2017
www.cse.lk

பங்குச்சந்தைத் தகவல்கள்

| சுட்டிகள் | | | இன்று | நேற்று |
|---|---|---|---|---|
| ASPI | ↑ | 25.80 | 6,731.25 | 6,705.45 |
| S&P SL20 | ↑ | 22.43 | 3,923.02 | 3,900.59 |
| வியாபாரப்புரள்வு | | | 903,210,880 | 1,014,600,900 |
| உள்நாடு:- கொள்வனவு | | | 384,978,368 | 499,090,944 |
| விற்பனை | | | 644,031,740 | 378,364,320 |
| வெளிநாடு:- கொள்வனவு | | | 518,232,512 | 515,509,952 |
| விற்பனை | | | 259,179,104 | 636,236,610 |




| கம்பனி-அதிகூடிய பங்குப்பரிமாற்றம் | குறியீடு | இறுதிவிலை | பங்குகள் | புரள்வு (Rs) |
|---|---|---|---|---|
| ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் | JKH.N | 175.00 | 1,241,410 | 217,183,590 |
| சிலோன் ஹோல் ஸ்ரோஸ் | CCS.N | 850.00 | 94,288 | 80,145,430 |
| மெல்ஸ்ரா க்ரோப் | MELS.N | 67.30 | 1,085,496 | 72,723,885 |
| ஹற்றன் நஷனல் வங்கி | HNB.N | 250.00 | 200,770 | 50,144,349 |
| இலங்கை கொமரஷல் வங்கி | COMB.N | 140.00 | 325,345 | 45,543,281 |
| சம்பத் வங்கி | SAMP.N | 286.50 | 156,862 | 45,186,984 |
| டயலொக் | DIAL.N | 11.90 | 3,172,328 | 37,750,703 |
| ரிச்சட் பீரிஸ் | RICH.N | 10.00 | 3,451,390 | 34,702,627 |
| லங்கா ஐ.ஓ.சி. | LIOC.N | 30.70 | 924,015 | 28,213,461 |
| லங்கா மாபிள் | TILE.N | 110.00 | 203,964 | 23,404,645 |

- பங்குலாபம் -

செ.'ப்ட் லொஜிக் ஹோல்டிங்ஸ் - ரூபா 0:65 சதம்
லங்கா ஐ ஓ சி - ரூபா. 1:25
ஏசியா சியாக கொமோடிட்டி - ரூபா. 0:10 சதம்

| சந்தைக் குறிகாட்டிகள். | |
|---|---|
| கம்பனிகள் | 296 |
| பரிமாற்றத்தில் | 252 |
| விலை உழைப்பு | 11.5 |
| புத்தகப்பெறுமதி | 1.5 |
| பங்குலாப விளை | 2.7 |

# கேள்விக்கான கோருதல்
# விளையாட்டுத் திணைக்களம், வடக்கு மாகாணம்.

1. தலைவர், திணைக்கள பெறுகைக்குழு, சார்பில் விளையாட்டுத் திணைக்களம், வடக்கு மாகாணம், செம்மணி வீதி, யாழ்ப்பாணத்திற்காக கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வேலைகளுக்கான இப்போது தகவுடையோரும் தகைமை பெற்றவருமான கேள்வியாளர்களிடமிருந்து குறியீடு செய்யப்பட்ட கேள்விகளைக் கோருகின்றார்.
2. கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வியின் மூலம் நடத்தப்படும். இருப்பினும் வியாபார பதிவினை வடக்கு மாகாண நிர்வாக எல்லைக்குள் கொண்டுள்ள கேள்வியாளாக்ளே விண்ணப்பிக்க முடியும்.
3. கேள்வியாளர்கள் கறுப்புப் பட்டியலில் பெயர் இடம் பெறாதவராயிருப்பவரும், 04/2016 (i) ஆம் இலக்க 30.09.2016 ஆம் திகதிய பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA/ICTAD) கட்டடம் நிர்மாணிப்பதற்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்தினை பதிவு செய்யப்பட்டிருப்பதுடன் வடக்கு மாகாணத்திற்குள் செல்லுபடியான வியாபார / கம்பனி பதிவினையும் கொண்டிருத்தல் வேண்டும்.
4. தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் கேள்வி ஆவணத்தில் பகுதி IV (Section IV) இலும், மேலதிக தகவல்கள் பகுதி V (Section V) / கேள்வி தரவுகள் மற்றும் ஒப்பந்த தரவுகள் இலும் உள்ளடக்கப்பட்டுள்ளது.
5. அக்கறை கொண்டுள்ள தகைமையுடைய கேள்வியாளர்கள் கீழ்வரும் விலாசத்தில் மேலதிக தகவலைப் பெறலாம் என்பதுடன், இந்த முகவரியில் 9.00 மணியிலிருந்து 15.00 மணிவரை அலுவலக நாள்களில் கேள்வி ஆவணங்களைப் பரிசோதனை செய்யலாம்.

**விளையாட்டுத் திணைக்களம்,**
**வடமாகாணம்,**
**செம்மணி வீதி,**
**நல்லூர்,**
**யாழ்ப்பாணம்.**
**Tel: 021-2215054 Fax: 021-2054074**

6. அக்கறை கொண்டுள்ள கேள்வியாளர்களினால் ஆங்கில மொழியிலான கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதியொன்றை மேற்குறிப்பிடப்பட்ட முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பித்து 21.06.2017 முதல் 12.07.2017 வரை 9.00 மணியிலிருந்து 15.00 மணி வரையான காலப்பகுதியில் மீளளிக்கப்படாத தொகையினை கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறு கட்டணமாகச் (பணமாகச்) செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
7. கேள்விகள் 13.07.2017 ஆம் திகதியன்று 11.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் **தலைவர், திணைக்கள பெறுகைக்குழு, விளையாட்டுத் திணைக்களம், வடக்கு மாகாணம், செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்** எனும் முகவரியில் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ இரு பிரதிகளில் ஒப்படைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாராக்ள் ஒவ்வொரு வேலைக்குமான கேள்வி அடையாள இலக்கத்தினை தபாலுறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். நேரடியாக கீழேயுள்ள முகவரியில் வருகைதர விரும்பும் கேள்வியாளர்களின் பிரதிநிதிகளது சமூகத்தில் கேள்வி கோரல் முடிவுற்ற உடனேயே கேள்விகள் திறக்கப்படும்.
8. கேள்வி தொடர்பான முதற் கூட்டம் விளையாட்டுத் திணைக்களம், செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் 04.07.2017 அன்று 10.00 மணிக்கு நடைபெறும்.
9. கேள்வி விலைமனுவின் இறுதிநாளிலிருந்து அட்டவணையில் குறிப்பிடப்பட்ட நாள்கள் வரை செல்லுபடியுடையதாக இருத்தல் வேண்டும்.
10. சகல கேள்விகளுக்கும் கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறான கேள்விப் பிணைப்பொறுப்பு இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
11. கேள்வி பகுப்பாய்வு செய்யப்பட்டு ஏற்புத்தன்மையுடைய குறைந்த பகுப்பாய்வு செய்யப்பட்ட கேள்வியுடைய ஒப்பந்தகாரர் தெரிவு செய்யப்படுவார்.

| கேள்வி அடையாள இல | வேலை விவரம் | மீளளிக்கப்படாத தொகை (ரூபா) | மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) | கேள்வி செல்லுபடியாகும் காலம் (நாட்கள்) | ஒப்பந்த காலம் (நாள்கள் ) | தேவையான தரம் | கேள்விப் பிணை விவரம். | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | தொகை | தேவைப்படும் காலம். |
| PSDG/SPO/2017/01 | சங்கானையில் பூப்பந்தாட்டத் திடல் நிர்மாணித்தல் | 2,500.00 | 7.03 | 77 | 120 | C7 (கட்டடங்கள்) | 74,000.00 | 26.10.2017 வரை |

தலைவர்,
திணைக்கள பெறுகைக்குழு,
விளையாட்டுத் திணைக்களம்,
வடக்கு மாகாணம்,
யாழ்ப்பாணம்.

(C/30163)(10)

# பாடசாலை அதிபர்களிடையே முன்னிலை பெறவேண்டிய தலைமைத்துவப் பண்புகள்



நடேசு தயாளன்

முகாமைத்துவம் என்பது பலதரப்பட்ட படிநிலைகளைக் கொண்ட பணிநிலைகளின் செயன்முறைத் தொகுப்புகள் ஊடாகக் கட்டமைக்கப்படுவது.எவரும் வழிநடத்தல் மற்றும் கட்டுப்படுத்தல் போன்ற செயல்நிலைகள் தனித்துவங்களையும் ,அதீத முக்கியத்துவங்களையும் கொண்டமைந்திருக்கும்.

அந்த வகையிலே பாடசாலை அதிபர்களின் தலைமைத்துவம் மற்றும் முகாமைத்துவம் சார்ந்த வகிபங்கானது பரந்துபட்டதாக அமைந்திருக்கும். குறிப்பாக அவர்களின் செயலூக்கமானது சவால் நிறைந்ததாகவும் மாணவர்கள், ஆசிரியர்கள், நிர்வாகிகள், ஏனைய சமூக நிறுவனங்கள் என அனைத்துத் தரப்பினருடனும் இடையறாத தொடர்புகளைக் கொண்டமைந்ததாகவும் அமைந்திருக்கும். பிரதானமாக தீர்மானம் மேற் கொள்ளும் செயலொழுங்குக்கு அவர்களின் பணிநிலை பிரதானமாகக் கருதப்படுத்தப்படுகின்றது.

## முகாமைத்துவத்தின் செல்நெறிகள்

இன்றைய காலகட்டத்தில் நிறுவன முகா மைத்துவச் செல்நெறிகள் சந்தையை மையப்படுத்திய பொறிமுறையாகவும், பன்முகப்படுத்துதல் செயன்முறைகள், வாடிக்கையாளரின் எதிர்பார்ப்புகளை மையப்படுத்திய செயன்முறை ஆதாரங்களின் அடிப்படையுடைய முன்னேற்றச் செயன்முறைகள் என்ற வகையிலும் மாற்றங்கண்டுள்ளன. ஆனாலும் பாடசாலைகளைப் பொறுத்தவரையிலே பாடசாலை அதிபரை மையப்படுத்தியதான அறிவுறுத்தல் தலைமைத்துவமானது இன்றைய காலகட்டத்தில் முக்கியத்துவம் பெற்றுள்ளன. பாடசாலையை முகாமை செய்பவரின் பிரதான பணியாக அறிவுறுத்தல் வழங்கும் செயல்நிலைகளே முதன்மையான தாகச் சொல்லப்படுகின்றன. பாடசாலை அதிபர்கள் பிள்ளைகளின் அடைவு மட்டத்திற்கும், பாடசாலைகளது கல்வி முறைமை படிநிலைகளின் வெளிப்பாட்டுத் திறனுக்கும் பதில் கூறக்கூடியவர்களாகவும், பொறுப்பு வகிக்க வேண்டியவர்களாகவும் காணப்படுகின்றனர்.

பாடசாலை அதிபர்களில் சிலர் தலைமைத்துவம்; என்பதனையும்,முகாமைத்துவம் என்பதனையும் வெவ்வேறான பணிநிலைகளாகவே நோக்குகின்றனர். எனினும் வினைத்திறன் உடையவர்கள் இவை இரண்டினதும் ஒன்றிப்புப் பற்றிய தெளிவான பார்வைகளையும்,அறிவையும் கொண்டுள்ளனர். இந்த இரு செயல்நிலையுடை விடயதானங்களின் இணைப்பாக்கத்தினை சிறந்த முறையிலே கையாள்பவரே வினைத்திறன்மிக்க பாடசாலைக் கட்டமைவை தனித்துவம் செய்யக்கூடிய கல்வி நிர்வாகியாக விளங்க முடியும்.

## செயன்முறைகளின் இடையேயான இணக்கப்பாடு

பாடசாலைகள் தமக்கே உரிய கலாச்சாரத்தினை சரியான முறையிலே கட்டியெழுப்பவும்,அதனை வடிவமைத்துக் கொள்ளவும் வேண்டுமெனில் தலைமைத்துவச் செயன்முறைக்கும், முகாமைத்துவச் செயன்முறைக்கும் இடையிலே அதிக இணக்கப்பாடுகள் காணப்படுதல் அவசியமானதாகும். பாடசாலை அதிபருடைய தலைமைத்துவப் பண்பின் நோக்கானது பிள்ளைகளின் கல்வி ரீதியான அடைவினை முன்னேற்றம் பெறச் செய்தலையும், அவர்களை நாட்டின் சிறந்த குடிமக்களாக மாற்றங்கொள்ளச் செய்வதனையும் நோக்காகக் கொண்டிருக்க வேண்டும். அத்தோடு பணியாற்றுபவர்களின் அபிவிருத்தி நலன் சார்ந்ததாகவும் அவை அமைந்திருக்க வேண்டும்.

பன்னாட்டளவில் பாடசாலைகளை நிர்வகிக்கும் முகாமையாளர்கள் பல்வேறுவிதமான சவால்களை எதிர்கொண்டு வருகின்றனர். புதிய நூற்றாண்டுக்கான நியமங்களை கருத்தில் கொள்ளும் போது தொழில் நுட்பம் சார் கண்டு கொள்ளல்களும், புதிய கண்டுபிடிப்புகளும், உலகமயமாதல் தார்ப்பரியங்களும் பாடசாலைக் கல்வியில் அதிக மாற்றங்களை வேண்டி நிற்கின்றன. பாடசாலைகள் இளைய சமூகத்தினரை திறன் அறிவுடையவர்களாக மாற்றமுறச் செய்து மாற்றங்களை தந்துகொண்டுள்ள உலகின் போக்கினிடை பயணப்பட உதவுவதாக அமையவேண்டியுள்ளது. எதிர்பார்ப்புகளின் விரைவான மாற்றங்களுக்கும், அதனை நடைமுறைப்படுத்துதல் குறித்தான திறன் விருத்திக்கும் பாடசாலை அதிபர்கள் தங்களைதகவமைத்துக்கொள்ளவேண்டிய தேவைகளும் ஏற்பட்டுள்ளன.



பன்னாட்டளவில் பாடசாலைகளை நிர்வகிக்கும் முகாமையாளர்கள் பல்வேறுவிதமான சவால்களை எதிர்கொண்டு வருகின்றனர். புதிய நூற்றாண்டுக்கான நியமங்களை கருத்தில் கொள்ளும் போது தொழில் நுட்பம் சார் கண்டு கொள்ளல்களும், புதிய கண்டுபிடிப்புகளும், உலகமயமாதல் தார்ப்பரியங்களும் பாடசாலைக் கல்வியில் அதிக மாற்றங்களை வேண்டி நிற்கின்றன.

## இருபத்தோராம் நூற்றாண்டுக்கான தேவைகளின் இணைப்பாக்கம்

இருபத்தோராம் நூற்றாண்டுக்கான தேவைகள் அனைத்துமே ஆரம்ப, இரண்டாம் நிலைப் பாடசாலைகளின் அதிபர்கள் தங்களது அதிகரித்த இயங்கியல் ரீதியான வகிபாகத்தினை உறுதி செய்யவும், அதனை நிறைவேற்ற வேண்டியும் பணித்துள்ளன. இந்தநிலையிலே பாடசாலை அதிபரானவர் தலைமைத்துவத்தினையும், முகாமைத்துவத்தினையும் பின்வரும் வழிகளில் இணைப்பாக்கம் செய்ய வேண்டும்.கட்டயமாகச் செய்திருக்க வேண்டும்.

1. உயர் தரத்துடன் கூடிய அறிவுறுத்தல்கள்.
2. ஒவ்வோர் செயலொழுங்குக்கும் தரவுகளைப் பயன்படுத்துதல்
3. பொருத்தமான நேர முகாமைத்துவம் பேணல்
4. வினைத்திறனுடைய கற்றல் செயற்பாடுகளை வெளிப்படுத்தல்.
5. அறிவியல் நிலைச் சார்புடைய பிரதிபலிப்புச் சிந்தனை நிலை

இங்கு நேரத்தினையும், தரவுகளையும் கையாளும் திறன் என்பது முகாமைத்துவத்தில் மிகவும் பெறுமதியானதாகும். ஆய்வடிப்படையிலான தீர்மானங்களை மேற்கொள்ளும் போது அங்கு அறிவின் திறனாற்றல் வளர்த்தெடுக்கப்பட வேண்டிய தேவைப்பாடு அவசியமாகின்றது. வெற்றிகரமான தரவுப் பயன்பாடானது முகாமைத்து வத்தினையும்,தலைமைத்துவத்தினையும் ஒன்றிணைப்பதாக அமைந்திருக்கும்.

வெற்றிகரமான செயற்பாட்டுத் திறன் கொண்ட பாடசாலை அதிபர்கள் தங்களுடைய செயற்பாடுகளை வேறுபட்ட வகையறைகளினுள் மேற்கொள்ளும் ஆற்றலுடையவர்களாக திகழ்கின்றனர். .

தலைமைத்துவத்துக்கும், முகாமைத்துவத்துக்குமான தத்துவார்த்த இயல்புகளை மனதில் இருத்திக் கொண்டுள்ள பாடசாலை அதிபர்கள் பாடசாலைகளை வெற்றி நிலை நோக்கி நகர்த்திச் செல்பவர்களாக விளங்குகின்றனர். அதிபர்களது முன்மாதிரியான நடத்தைக் கோலங்கள் எப்போதுமே தன்னைத் தொடர்ந்து வருபவர்களிடம் தாக்கத்தினை ஏற்படுத்தும் என்ற உணர்வை மனதிலிருத்திக் கொள்பவர்களாக இருக்க வேண்டும். மகிழ்ச்சிகரமான மனோநிலை, நேர்மனப்பாங்கு கொண்ட சிந்தனை,அறிவின் விருத்தி நிலையைப் பேணும் இயல்புகள், ஒவ்வொருவரையும் மதிக்கும் இயல்புகள், தனியாள் வேறுபாடுகளைக் கருத்தில் கொள்ளும் நிலை,சிறப்பான தொடர்பாடல் நிலை என்பன இன்றைய காலகட்டத்தில் அவசியமான மூல வளங்களாக பேணப்பட வேண்டிய கூறுகள்.

## விருத்தி நிலை சார்ந்த செயலொழுங்குகள்

வரையறைகளைத் தனக்குள்ளும் ஆசிரியர்களுக்குள்ளும் உருவாக்காது இருத்தல், தேவைகளையும் எழுகின்ற சவால்களை வளமான முறையிலும்,ஆக்க மலர்ச்சி நிலையிலும் கையாளும் திறன், பிரச்சினைகளைத் தீர்க்கும் திறன், ஏனைய நபர்களது ஆலோசனைகளையும் வழிகாட்டுதல்களையும் செவிமடுக்கும் இயல்பு என்பன முகாமைத்துவ விருத்திநிலை சார்ந்தவையாகக் காணப்படுகின்றன.

பாடசாலை நிர்வாகம், முகாமைத்துவம் தொடர்பான அடிப்படைச் செயலொழுங்குகள், பொதுவான விதிமுறைக்குட்படுதல் என ஒவ்வொரு அதிபரும் தான்சார்ந்த பாடசாலை செயலொழுங்குகள் தொடர்பில் திறனுடையவராக இருத்தல் வேண்டும். இங்கு சிறப்பான செயற்பாடுகளின் திட்டமிடல் செயலொழுங்குகள் குறித்து அதிபரது வகிபாகம் அதீத முக்கியத்துவம் பெறுகின்றது.

## சிறந்த பாடசாலை முகாமைத்துவத் திறன் இயல்புகள்


சிறந்த பாடசாலை முகாமைத்துவத் திறனும், தலைமைத்துவமும் கொண்ட அதிபரிடம் பின்வரும் இயல்புகள் இருத்தல் வேண்டும்.

1. மேல் நிலை அதிகாரிகளுடன் பாடசாலையின் அண்மைய தரக்குறிகாட்டி (Bench mark) தொடர்பில் கலந்துரையாடல்
2. ஆசிரியர்களது கல்விசார் திட்டமிடல்கள் தொடர்பில் பரிசோதனைகளை மேற்கொள்ளுதல்
3. பாடசாலை முகாமைத்துவம்சார் குழுவினருடனான கலந்துரையாடல் நடைமுறை
4. முறைசாரா வகையிலான வகுப்பறை மேற்பார்வை உத்திகளின் கையாளல்

ஆக.இதனடிப்படையிலே நாம் நோக்கும் போது பாடசாலைகளின் முகாமைத்துவம் மற்றும் தலைமைத்துவ நிலைகளில் இணைப்பாக்கத்தினை மேற்கொள்ளும் திறனுடைய பாடசாலை அதிபர்கள் கல்வி ரீதியான வெற்றி அடைவுகளை வடிவமைப்பவராகவும், கற்றல் கற்பித்தலுக்குப் பொருத்தமான சூழலை உருவாக்குபவராகவும், தலைமைத்துவ,முகாமைத்துவ இயல்புகளை ஏனையோருக்குப் பரவச் செய்பவராகவும், பாடசாலையின் உரித்தாளர்கள் குறித்த தரவுச் செயற்பாடுகளை அபிவிருத்தி நோக்கிய பாதையில் நகர்த்திச் செல்லும் இயல்புடையவராகவும் இருத்தல் வேண்டும்.இன்றைய காலப்போக்கின் எதிர்பார்ப்பாகவும்,தேவைப்பாடாகவும் இந்த விடயங்களே முன்னிலை பெறுகின்றன.

கட்டுரையாளர், அதிபர்,
யா/ கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயம்.

# நீங்கள் இந்த நேரத்தில் பிறந்தவர்களா?



ஒருவர் பிறந்த நேரத்தைப் பொறுத்தே அவரின் சாதகம் கணிக்கப்படுகிறது. அவரது ராசி, நட்சத்திரத்தைப் பொறுத்தும் அவரின் எதிர்காலம், வேலை குறித்து அறியப்படுகிறது. இதன் அடிப்படையில் ஒருவரின் குணாதிசயங்கள் மாறுகின்றன.

(நேற்றைய தொடர்ச்சி)

**மாலை 6 முதல் 8 மணிவரை**

இந்த நேரத்தில் பிறந்தவர்கள் தங்கள் வாழ்க்கையில் தங்களுக்கு நெருக்கமான அல்லது நண்பர்களை சார்ந்து வாழும் விதமாக அமைந்து காணப்படுவார்கள். குடும்பம் என்பது இவர்களுக்கு இரண்டாம்பட்சம்தான். சமூக வாழ்க்கையில் அதிகம் இணைந்திருப்பார்கள்.

**இரவு 8 முதல் 10**

இந்த நேரத்தில் பிறந்தவர்கள் மத்தியில் கற்பனைத் திறன் அதிகம் காணப்படும். திறமைகள் அதிகம் கொண்டிருப்பார்கள். தங்களுக்குப் பிடித்த வேலைகளை மட்டுமே செய்வார்கள். அதிலும் சிறந்து காணப்படுவார்கள்.

**இரவு 10 முதல் 12 மணிவரை**

இந்த நேரத்தில் பிறந்தவர்கள் வெற்றி, தோல்வியை சமமாகக் காணும் பண்பு கொண்டிருப்பார்கள். ஏற்றத்தாழ்வுகளை எளிதாகக் கடந்து வந்துவிடுவார்கள்.

**நள்ளிரவு 12 முதல் 2 மணிவரை**

இந்த நேரத்தில் பிறந்தவர்கள் அதிக புத்திசாலியாக இருப்பார்கள். சாகசங்களை விரும்புவார்கள். பயணிக்க விரும்புவார்கள். ஊடகம் சார்ந்த வேலை யில் அதிக கவனம் செலுத்துவார்கள்

**நள்ளிரவு 2 முதல் அதிகாலை 4 மணிவரை**

இந்த நேரத்தில் பிறந்தவர்களுக்கு உணவு சார்ந்த விருப்பம் அதிகமாக இருக்கும். குடும்பம் மற்றும் பொருளாதார நிலை மேலோங்கிக் காணப்படும்.

## வரலாற்றில் இன்றைய தினம்



| | |
|---|---|
| 1593 - | கூட்டுகிறிஸ்தவப்படைகளால் ஒட்டமான் தோற்கடிக்கப்பட்டது. |
| 1783 - | ஐஸ்லாந்து லகி எரிமலை வெடிப்பினால் ஏற்பட்ட தீங்குவிளைவிக்கும் முகில் கூட்டம் பிரான்ஸ் லெ கவ்றே பகுதியைச் சென்றடைந்தது. |
| 1870 - | அமெரிக்காவில் காங்கிரசினால் நீதித் திணைக்களம் உருவாக்கப்பட்டது |
| 1879 - | பிரிட்டன் குடியேற்ற அதிகாரிகள் சாள்ஸ் வோல்டர் றான்ட் மற்றும் லெப்டினன்ட் சாள்ஸ் எகற்றன் அயெர்ஸ்ற் ஆகியோர் இந்தியா மகாராஷ்டிரா மாநிலத்தின் புனேயில் வைத்துக் கொல்லப்பட்டனர். |
| 1898 - | ஸ்பானிஷ் அமெரிக்கப் போர்: ஐக்கிய அமெரிக்கப்படைகள் கியூபாவில் தரையிறங்கின. |
| 1906 - | சுவீடன் நாட்டின் கொடி தேர்ந்தெடுக்கப்பட்டது. |
| 1907 - | லண்டனில் நிலக்கீழ் புகையிரதப்பாதைகள் திறக்கப்பட்டன. |
| 1911 - | ஐந்தாம் ஜோர்க் மற்றும் மேரி ஆகியோர் ஐக்கிய இராச்சியம் பெரிய பிரித்தானியா மற்றும் அயர்லாந்தின் அரசனாகவும் அரசியாகவும் முடிசூடினர். |
| 1918 - | இன்டியானவரம்மொண்டில்ஹம்மண்ட் சேர்க்கஸ் தொடருந்து விபத்தில் 86 பேர் சாவடைந்ததுடன்127பேர்காயமடைந்தனர். |
| 1940 - | பிரான்ஸ் கட்டாயத்தின் பேரில் ஜேர்மனியுடன் போர் நிறுத்த ஒப்பந்தத்தில கைச்சாத்திட்டது. |
| 1941- | ஒப்பரேஷன் பார்பரோஸ்ஸோ நடவடிக்கை மூலம், நாஸி ஜேர்மனி சோவியத் யூனியன் மீது படையெடுத்தது. |
| 1963 - | ஷன்சிபாருக்கு உள்ளக சுயாட்சியை ஐக்கிய இராச்சியம் வழங்கியது |
| 1982 - | பிரிட்டன் வானூர்தி சேவை வானூர்தி சேவை விமானம் 9 எரிமலைக்கு மேலாகப் பறந்து சென்ற வேளை எரிமலை வெடித்து சாம்பல் பறந்த போது விமானத்தின் நான்கு இயந்திரங்களும் செயலிழந்தன, மீண்டும் இயந்திரங்கள் இயங்கி பத்திரமாகத் தரையிறங்கினர் விமானிகள் |
| 1990 - | மலையகத்திலும் தெற்கிலும் இனக்கலவரம் மூண்டது கட்டடங்கள் தீக்கிரை பலரும் காயம் . |
| 1990 - | கொண்டச்சி ராணுவ முகாம் அதிரடித் தாக்குதலில் தகர்ப்பு 12 புலிகள் வீரச்சாவு வாகனம் மீட்பு. |

### நாளை

**ஆனி - 30**

வெள்ளிக்கிழமை -23.06.2017

திதி: சதுர்த்தசி மு.ப. 11.41 வரை

நட்சத்திரம்: ரோகினி மு.ப. 07.42வரை

சுபநேரம்:05.54-07.24 வரை

ராகுகாலம்:10.24-11.54 வரை

## எல்லைகளுக்கு உட்பட்டு இரசிகர்களாக இருப்போம்

பன்னாட்டு கிரிக்கெட் சபையின் மினி உலகக்கிண்ணத் தொடர் இங்கிலாந்தில் நடந்து முடிந்துள்ளது. ஆஸ்திரேலியா, இங்கிலாந்து, இந்தியா ஆகிய மூன்று அணிகளின் மீதும் அளவுக்கு அதிகமான எதிர்பார்ப்புக்கள் இருந்த போதிலும் எவரும் எதிர்பாராவண்ணம் கிண்ணத்தை வென்றது பாகிஸ்தான் அணி. அத்தனை ஆட்டங்களும் விறுவிறுப்புக்கும், பரபரப்புக்கும் பஞ்சம் இல்லாமல் நடந்தன. ரசிப்பதற்கு ஏற்றவையாக இருந்தன. இரசிகர்களுக்கு விருந்து படைப்பவையாக இருந்தன. ஆனால் இத்தகைய முக்கிய தொடர்களையும் அல்லது முக்கிய ஆட்டங்களையும் ரசிப்பது என்பது ஒருவரையறைக்கு உட்பட்டதாக இருத்தல் அவசியம். அதில் நாம் காலாகாலமாகப் பற்பல தவறுகளைச் செய்கிறோம்.

இலங்கை அணி பாகிஸ்தானுடன் தோல்வியடைந்து தொடரில் இருந்து வெளியேறியமை இந்திய ரசிகர்களால் அல்லது இலங்கை அணிக்கு எதிரானவர்களால் கொண்டாடப்பட்டது யாழ்ப்பாணம் நகரப் பகுதி உள்ளடங்கலாக பல இடங்களில் பட்டாசு வெடித்துக் கொண்டாடப்பட்டது. பின்னர் இந்திய அணி இறுதியாட்டத்தில் பாகிஸ்தானிடம் தோல்வியடைந்து கிண்ணத்தைத் தவறவிட்டதன் பின்னர் இலங்கை ரசிகர்கள் அல்லது இந்திய அணிக்கு எதிரானவர்கள் அதை பட்டாசு வெடித்துக்கொண்டாடினர். தாம்சார்பான அல்லது தாம் ஆதரவு தெரிவிக்கின்ற ஓர் அணியின் வெற்றியை அல்லது மகிழ்ச்சியின் வெளிப்பாட்டை கொண்டாடுதல் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. ஆனால் பட்டாசு வெடிக்கும் அளவுக்கு அப்படி என்னதான் நடந்து விட்டது?

எத்தனையோ தடைகளையும் சவால்களையும் தாண்டி ஓர் வேலைநாளை முடித்து அதற்குரிய ஊதியத்தைப்பெற்று அதை ஏதோ ஒரு அணியின் வெற்றிக்காக பட்டாசு வாங்குவதிலும் அது சார்ந்த வீண் விரயச் செலவுகளிலும் ஈடுபடுதல் என்பது ஏற்றுக்கொள்ளத் தக்கதல்ல. போர், பெண் தலைமைத்துவக் குடும்பங்களை எம்மிடையே பலநூற்றுக் கணக்கில் ஏற்படுத்திவிட்டுச் சென்றுள்ளது. தாம்சார்ந்த வாழ்வாதாரத்தைத் தொலைத்து பல்லாயிரக்கணக்கான குடும்பங்கள் இங்கு உள்ளன. எமது இனம் சார்ந்த சமுதாயம் இப்படி அல்லல்பட்டுக்கொண்டிருக்க நாம் பட்டாசு வெடித்து பரிகாச வேலைகள் செய்வது ஏற்கக்கூடியதா?

மினி உலகக்கிண்ணத் தொடரின் காலப்பகுதியில் சமூக வலைத்தளங்கள் பலவும் கிரிக்கெட் சார்ந்த பதிவுகளிலும், அது தொடர்பான வாதங்கள் பிரதிவாதங்களிலும் நிரம்பி வழிந்தன. ஓர் ஆட்டத்தைப் பார்த்து விட்டு வெற்றி தோல்வியை ரசித்துவிட்டு அந்த இடத்தில் அதைவிட்டுவிட்டு எமது அடுத்த கட்ட வேலையை நோக்கி சென்றுகொண்டிருத்தல் உசிதமானதாக இருக்கும். ஆனால் இங்கு நடப்பது என்ன? ஓர் ஆட்டத்தைப் பார்கிறோம். நாம் ஆதுரவு தெரிவிக்கும் அணி வெற்றிபெற்றால் அல்லது நாம் எதிர்க்கும் அணி தோல்வியடைந்தால் அதை சமூக வலைத்தளங்களில் உட்கார்ந்திருந்து மணிக்கணக்கில் கொட்டித் தீர்த்துக்கொண்டிருக்கிறோம். இதனால் எவருக்கு என்ன பயன்?

வேலைப்பளு, குடும்பச்சுமை, பொருளாதாரம் தொடர்பிலான சிந்தனைகள் இன்னும் பலஇதர அழுத்தங்கள் ஆகியவற்றை ஓரளவு குறைத்துவிட அல்லது குறைந்தளவான நேரத்துக்காவது மறந்துவிட ரசனை இன்றியமையாதது. ஆனால் அவை எல்லைகள் மற்றும் வரையறைகளுக்கு உட்பட்டவையாக இருத்தல் அவசியம்.

# சுடோக்கு
## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | 7 | | 3 |
| 2 | 5 | | | | | | 1 | |
| | | | 5 | 6 | | 9 | | |
| 3 | | 9 | | | | 5 | | |
| | | | 1 | 9 | 8 | | | |
| | | 7 | | | | 2 | | 8 |
| | | 6 | | 8 | 4 | | | |
| | 1 | | | | | | 4 | 5 |
| 4 | | 2 | | | | | | |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 5 | 7 | 4 | 8 | 9 | 3 | 1 | 6 |
| 1 | 6 | 9 | 2 | 3 | 7 | 8 | 5 | 4 |
| 4 | 8 | 3 | 5 | 6 | 1 | 9 | 2 | 7 |
| 8 | 3 | 2 | 7 | 9 | 5 | 4 | 6 | 1 |
| 7 | 1 | 6 | 3 | 2 | 4 | 5 | 8 | 9 |
| 5 | 9 | 4 | 8 | 1 | 6 | 7 | 3 | 2 |
| 3 | 4 | 8 | 1 | 7 | 2 | 6 | 9 | 5 |
| 6 | 2 | 5 | 9 | 4 | 8 | 1 | 7 | 3 |
| 9 | 7 | 1 | 6 | 5 | 3 | 2 | 4 | 8 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளே 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதி கள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல்



சினிமா

# ரகுமானின் மகள் சினிமாவில் அறிமுகம்!

நடிகர் ரகுமான் 1983 ஆம் ஆண்டில் மலையாளத்தில் வெளியான கூடுவிடே என்ற படம் மூலம் சினிமாவில் அறிமுகமாகினார். அதனை தொடர்ந்து இயக்குனர் பாலசந்தர் இயக்கிய புதுப்புது அர்த்தங்கள் படம் மூலம் தமிழில் சிறந்த நடிகராக ரகுமான் திகழ்ந் தார். தமிழ், மலையாளம், தெலுங்கு படங்களில் நடித்துள்ளார். இவர் அஜித்துடன் நடித்த பில்லா,சிங்கம், துருவங்கள் பதினாறு ஆகிய படங்கள் அவருக்கு நல்ல பெயரை வாங்கி கொடுத்தன. இவருக்கு இரண்டு மகள்கள் உள்ளனர். இவரின் மூத்த மகள் ருஷ்தா மலை யாள சூப்பர் ஸ்டார் மம்முட்டி மகன் துல்கன் சல்மானின் தீவிர ரசிகை. அவருடன் படத்தில் நடிக்க வேண்டுமென கூற அவரது தந்தை ரகுமான் அவரை சினிமாவில் அறிமுகப்படுத்தும் வேலையில் தற் போது தீவிரம் காட்டி வருகிறார் என்று கூறப்படுகிறது. துல்கன் சல்மான் – ருஷ்தா நடிக்கும் படத்தை பிரபல இயக்குனர் இயக்க உள் ளார் என்று மலையாள சினிமாவில் பரவலாக பேசப்படுகிறது.

தாலி கட்டிய கணவனுக்கு மனைவியை அதிகாரம் செய்ய உரிமை உண்டா?



உரிமை உண்டு. ஆனா தைரியம் உண்டா? என்பதுதான் கேள்வியே...

ஒரு சிலர் எங்க படுத்தாலும் அசந்து தூங்கிடுறாங்க... எப்படின்னு தெரியல



நமக்கு ஆபிஸ்ல மதியத்துக்கு அப்புறம்தான் தூக்கம் களை கட்டும்

மாஸ்டர் பீஸ் @Kannan_Twitz · M
சொல்ல நினைப்பதை வாய்ப்பு கிடைக்கும் போதே சொல்லவில்லையெனில், சொல்ல நினைக்கும் போது வாய்ப்புக்கள் கிடைப்பது கடினமே.

twitter



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?



**மேடம்:** உங்களின் பேச்சு செயலில் தயக்கம் ஏற்படலாம். தொழிலில் இலாபம் சுமாரான அளவில் இருக்கும். பெண்கள் செலவுக்காக கடன் வாங்க நேரிடலாம். பிராணிகளிடம் இருந்து விலகி இருப்பது நல்லது.

**இடபம்:** மனதில் நேர்மை நிறைந்திருக்கும். குடும்பத்தினரின் ஆதரவு கிடைக்கும். தொழில், வியாபார வளர்ச்சியால் இலாபம் அதிகரிக்கும். பிள்ளைகளின் விருப்பம் அறிந்து நிறைவேற்றுவீர்கள்.

**மிதுனம்:** வாழ்வில் மனச்சாட்சிப்படி நடந்து கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் வரு கிற குளறுபடியை சரி செய்ய முயல்வீர்கள். இலாபம் சுமார். மற்றவர் பொருளை பாது காக்கும் பொறுப்பு ஏற்க வேண்டாம்.

**கடகம்:** புதியவர்களின் அறிமுகம் கிடைக் கும். தாமதமான பணிகளை ஆர்வமுடன் நிறைவேற்றுவீர்கள். தொழில் வியா பாரத்தில். வளர்ச்சி இலக்கு திட்டமிட்டபடி நிறைவேறும். சேமிப்பு கூடும்.

**சிங்கம்:** நண்பர்களுக்கு உதவி செய்து மகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில் வரு மானம் அதிகரிக்கும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர். பெண்கள் ஆடை, ஆபரணம் வாங்கி மகிழ்வர்.

**கன்னி:** உங்களின் நற்செயலை சிலர் பரிகாசம் செய்யலாம். தன்னம்பிக்கையுடன் செயல்படுவது அவசியம். தொழில் வியா பாரத்தில் இலாபம் சீராக இருக்கும். வாக னத்தில் பராமரிப்புச் செலவு ஏற்படலாம்.

**துலாம்:** குடும்ப விஷயத்தைப் பற்றி பிறரிடம் பேச வேண்டாம். இஷ்ட வழிபாட்டில் ஈடுபடு வீர்கள். தொழில், வியாபாரத்தில் பணவரவு சுமாராக இருக்கும். பெண்கள் நகை, பணம் இரவல் கொடுக்க, வாங்க வேண்டாம்.

**விருச்சிகம்:** மதி நுட்பத்துடன் செயல்படு வீர்கள். கடந்த கால முயற்சிக்கான பலன் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் ஆதா யம் உயரும். பெற்றோரின் தேவையை அறிந்து நிறைவேற்றுவீர்கள்.

**தனுசு:** நண்பரிடம் கேட்ட உதவி கிடைக்கும். தொழில், வியாபார வளர்ச்சியால் வருமானம் உயரும். பூர்வீக சொத்து மூலம் திடீர் இலாபம் வரும். புத்திரர் விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள்.

**மகரம்:** கருத்து வேறுபாடு உள்ளவரிடம் விலகுவது நல்லது. தொழில் வியாபாரத்தில் இலாபம் சுமாராக இருக்கும். உடல்நலனில் அக்கறை தேவை. பெண்கள் குடும்ப நலனுக்காகப் பாடுபடுவர்.

**கும்பம்:** நண்பர்களால் பிரச்னைக்கு ஆளா கலாம். தொழில், வியாபாரத்தில் அளவான மூலதனம் போதும். பணவரவை விட நிர்வா கச் செலவு அதிகரிக்கும். பணி யாளர்கள் பணிச்சுமையை திறம்பட சமாளிப்பர்.

**மீனம்:** பெருந்தன்மையுடன் பிறருக்கு உத வுவீர்கள். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் பன்மடங்கு உயரும். இஷ்ட தெய்வ வழிபாடு நிறைவேற்றுவீர்கள். பிள்ளைகளின் செயல் பாடு பெருமையளிக்கும்.

## நீதிக்கதை



ஒரு பள்ளிக்கூட வாசலில் பலூன்காரர் ஒருவர் பலூன்களை விற்றுக் கொண்டிருந்தார். அவை மேலே பறக்கும் பலூன்கள்.
அவர் பலூன்களில் காற்றடைத்து விற்பதை ஒரு சிறுமி கவனித்துக் கொண்டிருந்தாள்.
மெல்ல பலூன்காரரிடம் வந்தாள்.
"இந்த பலூன்கள் எல்லாமே மேலே பறக்குமா?" என்று கேட்டாள்.
"ஓ பறக்குமே. என்ன விஷயம்?"
"பலூன் எந்த நிறத்தில இருந்தாலும் பறக்குமா?" என்று மீண்டும் கேட்டாள் அந்தச் சிறுமி.
சிறுமி ஏன் இப்படிக் கேட்கிறாள் என்று பலூன்காரருக்கு புரியவில்லை.
"ஏம்மா கேக்குற?"
"இல்ல, பலூன் கறுப்பு நிறத்தில இருந்தாகூட பறக்குமா?" பலூன்காரருக்கு இப்போது விஷயம் புரிந்தது. அந்தச் சிறுமியின் நிறம் கறுப்பு. "பலூன் மேல போறதுக்குக் காரணம் அதோட நிறம் இல்லம்மா. உள்ள இருக்கிற வாயுதான். என்ன நிறம் எண்டாலும் உள்ள இருக்கிறது சரியா இருந்தா, யார் வேண்டுமானாலும் உயரலாம்" என்றார்.

நீதி: வெளித்தோற்றங்கள் உயர்வைத் தராது.

**ஆசிரியர்:** பஞ்ச பூதங்கள் யாவை?

**மாணவர்கள்:** தமிழ் மிஸ், இங்கிலிஸ் மிஸ், சயன்ஸ் மிஸ், சோசியல் மிஸ், மட்ஸ் மிஸ்





மகிழ்ச்சிக்கு எதுவும் தடையில்லை

# மாய வலைக்குள் ஒரு நுளம்பு

ஒரு நாள் மதிய வேளை. ஒரு மானைப் பிடித்து தின்று பசியாறி விட்டு மர நிழலில் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தது சிங்கம். அப்பொழுது தலைக் கனம் பிடித்த நுளம்பு ஒன்று. அதன் முன்னால் வந்து நின்றது. தான், மனிதர் மிருகம் என்றில்லாது எல்லோர் இரத்தத்தையும் உறிஞ்சி ஏப்பம் விடுவதாலும், தன்னால் பரப்பப்படும் நோய்களுக்கு அஞ்சி மனிதர் வாழ்வதாலும் அதற்கு இந்த தலைக்கனம் ஏற்பட்டிருந்தது. அது சிங்கத்தைப் பார்த்து "காட்டு ராஜாவே உலகில் பலசாலி யார் கூறுங்கள்?" என்றது. சிங்கம் நுளம்பைப் பார்த்து தன் காதுகளை விறைத்த படி வைத்துக் கொண்டு முறைத்தது. "என்ன பார்க்கிறீர்கள். நான் தான் அந்தப் பலசாலி" என்றது பெருமிதத்துடன். இதனைக் கேட்டு சிங்கம் கொல்" என்று சிரித்தது.

"என்ன சிரிப்பு ராசவே?. பல கோடி ஆண்டுகளுக்கு முன்பு பூமியில் டைனோசர் என்ற ஒரு மிருகம் பலசாலியாக இருந்ததாம், அது இப்போது பூமியில் இல்லையாமே. அடுத்தது நான் தான் பலசாலி" என்றது நுளம்பு. சிங்கம் மீண்டும் தலையை உயர்த்தி நுளம்பை ஏளனத்துடன் பார்த்தது" ஒரு தடவை நான் யுராசிக் பார்க் படம் பார்த்தேன்" "எங்கே பார்த்தாய்"? "சிங்கம். தியேட்டரில்தான். நான் தூணிலும் இருப்பேன். துரும்பிலும் இருப்பேனே! காற்று புகாத இடம் எல்லாம் சென்று விடுவேனே! தீயேட்டரில் நல்ல கூட்டம் நானும் புகுந்து விட்டேன். ஓ உம்மால் எல்லாம் அங்கு வர முடியாதே! அந்தப் படத்தில் இறந்து போன எம் முன்னோர் ஒருவரின் உடலில் இருந்த குருதியை ஆராய்ந்ததில் அது அழிந்து போன டைனோசரின் குருதி எனக் கண்டுள்ளார்கள்.

"பார்த்தீர்களா டைனோசரையே நாம் கடித்து குருதி குடித்துள்ளோமென்றால், நாம் பலசாலிகள் தானே" என்றது மீண்டும் நுளம்பு.

இதனைக் கேட்டு சிங்கத்தின் மீசை துடித்தது. நுளம்பின் அறிவு பூர்வமான பேச்சில் ஆத்திரமடைந்தது. "அற்ப பதரே! மீண்டும் மீண்டும் உன்னைப் பலசாலி என்கிறாயா?" சிங்கம் கர்ஜித்தது. "ஆமாம் இதோ பாருங்கள். உங்களைப் பிடிக்க மனிதர் கூடுகளையும், நிலப்பொறிகளையும் வைக்கிறார்கள். ஆனால் என்னைப் பிடிக்க முடியாதென்று தெரிந்து பயந்து தான் மனிதர்கள் விதம் விதமான வலைகளுக்குள் பதுங்கி விடுகிறார்கள் பார்த்தீர்களா? இப்போது யார் பலசாலி?" என்றது மீண்டும் நுளம்பு. "வெறும் கடியை மட்டும் வைத்துக் கொண்டிருக்கும் நீ பலசாலி? உன் கதையைக் கேட்க நான் மடையனா? ஒரே அடியில் உடல் நசுங்கி விடும். உனக்கு இத்தனை தலைக் கனமா? இதோ பார், உனக்கு பாடம் புகட்டுகிறேன் என" கர்ஜித்து தன் முன்னங்கால் ஒன்றைத் தூக்கி அசுரவேகத்தில் ஓர் அடிவிட்டது சிங்கம்.

நுளம்பு 'விஞ்ஞ்ஞ்ஞ்' என்று பறந்தது. நுளம்பு தப்பி விட்டதால் மிகக் கோபத்துடன் உடலைச் சிலிர்த்து எழுந்தது சிங்கம். இப்போது நுளம்பு சிங்கத்தின் முதுகில் அமர்ந்து 'நறுக்' என்று ஒரு கடி கடித்தது. 'ஏய் கடிக்காதே' என்று கத்திய சிங்கம், தன் வாலைச் சுழற்றியடித்தது. அந்த வீச்சில் தப்பிய நுளம்பு எழுந்து வந்து சிங்கத்தின் முகத்தில் ஒரு கடி வைத்தது. இவ்வாறு மாறி மாறி சிங்கம் அறியாமல் அதன் முகத்திலும் முதுகிலுமாகக் கடித்து விளையாடுவதும், சிங்கம் துள்ளி வேதனைப்படுவதை வேடிக்கை பார்ப்பதுமாக இருந்தது நுளம்பு. இப்படியாக நுளம்பின் தொடர்ச்சியான கடியால் சிங்கத்தின் உடலெங்கும் வீங்கி விட்டது. அது வேதனையுடன் கடும் கோபமாக இருக்கையில் "என்னை அத்தனை சீக்கிரம் யாரும் கொன்று விட முடியாது. பிறரை வதைப்பதற்கென்றே நான் அவதாரம் எடுத்தவன் " இப்போ




தாவது நான் பலசாலி என்பதை ஒப்புக்கொள்ளுங்கள்" என்று வீரம் பேசிய நுளம்பை நோக்கி எதிர்பாராமல் காலை வீசியது சிங்கம்.

இந்தத் தாக்குதலில் நிலை குலைந்த நுளம்பு தப்பிப் பிழைத்து மேல் நோக்கிப் பறந்தது. சட்டென்று எதிலோ அதன் இறக்கைகள் ஒட்டிக் கொண்டன. "ஐயோ சிலந்தி வலையில் மாட்டிக் கொண்டேனே" என நுளம்பு ஓலமிட்டபடி கால்களை ஆட்டி தப்ப முயல்கையில் கரிய நிற இராச்சத சிலந்தி விருட்டென்று நகர்ந்து நுளம்பைப் பிடித்தது. சிங்கத்தின் கண் முன்னாலேயே நுளம்பின் உடலை உறிஞ்சி விட்டு வெற்றுடலை வலையில் போட்டு விட்டு வலையின் மத்தியில் போய் அமர்ந்து கொண்டது சிலந்தி.

**வல்லவனுக்கு ஒரு வல்லவன் இருப்பான். தற்பெருமை தலைக்கனம் கொண்ட மனிதர் அக் குணங்களாலேயே அழிந்து போவர்.**

## ஒரு பொருள் கூறும் பல சொற்கள்

1. உடம்பு, சரீரம், மெய், மேனி, யாக்கை, உடல்
2. சத்தம், ஓசை, அரவம், ஒலி, தொனி
3. சினம், கோபம், வெகுளி, சீற்றம்
4. குழந்தை, சேய், மகவு, சிசு, குழவி, மழலை
5. வெளிச்சம், சோதி, சுடர், கதிர், பிரகாசம், ஒளி
6. இன்பம், மகிழ்ச்சி, உவகை, குதூகலம்
7. இல்லாள், மனையாள், பாரியார், இல்லக் கிழத்தி, மனைவி
8. இன்னல், அல்லல், துயர், இடர், துன்பம், வேதனை
9. யானை, களிறு, பிடி, தும்பி, கரி, குஞ்சரம், வேளம்
10. காடு, வனம், அடவி, கானகம், ஆரண்ணியம்
11. தோழன், நண்பன், சினேகிதன், பாங்கன், மித்திரன்
12. சோறு, அன்னம், சாதம், அடிசில்
13. பூமி, அகிலம், குவலயம், வையகம், பார், தரணி
14. பரி, மா, புரவி, குதிரை
15. அரசன், மன்னன், வேந்தன், கோ, கொற்றவன்



## வர்ணம் தீட்டுவோம்



## அன்னம்

நீண்ட கழுத்தும் கனத்த உடலும் பெரிய பாதங்களும் கொண்ட நீர்ப் பறவை இது. நீர் பறவைகளிலேயே பெரியதான இது மிக வேகமாக நீந்தவும் பறக்கவும் கூடியது. சுமார் 23 கிலோ எடை கொண்டது. அன்னம் சத்தமாக ஒலி எழுப்பாது. இவை குறைந்த ஆழமுடைய நீர்ப் பகுதிகளில் நீர்த் தாவரங்களைத் தேடி அங்கு மிங்கும் அலையும் இயல்புடையவை. வெள்ளை நிறமுடைய உடலும், கறுப்பு நிறக்கால்களும் கொண்ட ஐந்து சிற்றினங்கள் பூமியின் வட கோளப்பகுதியில் வாழ்கின்றன. கறுப்பு உடலும் கழுத்தும் கொண்ட சிற்றினம் ஒன்று தென் கோளப்பகுதியில் வாழ்கிறது. ஆணும் பெண்ணும் ஒரே மாதிரியாக தோற்றமளிக்கும். அன்னம் இறுதிவரை ஒரு துணையுடனேயே வாழ்க்கை நடத்தும். தாவரக் குவியல்கள் மீது முட்டைகளை இடும். பெண் அடைகாக்க ஆண் காவல் புரியும். இளம் குஞ்சுகள் பல மாதங்கள் வரை பராமரிக்கப்படுகின்றன. இந்தப் பறவை நீந்தும் போது தோன்றும் நயமான அழகுத் தோற்றம் காரணமாக பல ஆண்டுகளாக இவை அழகின் சிறப்புக்கு அடையாளமாக கருதப்படுகின்றன. இந்திய இலக்கிய சமய உலகில் அன்னத்துக்கு சிறப்பிடம் உண்டு. பாலையும் நீரையும் பிரித்து உண்ணுவது அன்னப் பறவை என்ற சிறப்பும் இதற்கு உண்டு. நன்மையும் தீமையும் கலந்த உலகில் அறிவும் கல்வியும் தீமையைத் தள்ளி நன்மையைக் கொள்ள வேண்டும் என்று கூற இந்த அடையாளம் பயன்பட்டது.

படைப்புக் கடவுளான பிரமாவுக்கும் அவரது மனைவி சரஸ்வதிக்கும் அன்னமே வாகனம். நிலத்தில் நடக்கும் போது இது தத்தித் தத்தியும் ஒயிலாகவும் நடப்பதால் பெண்களின் நடை அழகுக்கு அன்னமே உதாரணமாகக் காட்டப்படுகிறது.

## விகடத் துணுக்குகள்



ஆசிரியர் :- எலி எத்தனை ஆண்டுகள் உயிர் வாழும்?
மாணவர் :- அது, பூனை அதனைப் பிடிக்கும் காலத்தைப் பொறுத்துத்தான் அமையும்.

ஒருவர்:- நான் பிழை செய்தால் என் அப்பாவுக்கு அவர் மூக்கு மேல் கோபம் வரும்.
மற்றவர் :- 'என் அப்பாவுக்கு என் மீது தான் கோபம் வரும்.



*மாணவர்...*

இதனால் பாதிக்கப்பட்ட 30 மாணவர்கள் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

சைட்டத்துக்கு எதிராகப் போராட்டங்களை முன்னெடுத்து வரும் பல்கலைக்கழக மாணவர்கள் நேற்றுப் பிற்பகல் சுகாதார அமைச்சு கட்டடத்திற்குள் நுழைந்து அதனைத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முயற்சித்தனர். இதன்போது உள்ளே நுழைந்த கலகம் அடக்கும் பொலிஸார் மாணவர்கள் மீது தடியடி மற்றும் கண்ணீர்ப் புகைப் பிரயோகம் மேற்கொண்டு அவர்களை அங்கிருந்து விரட்டியடித்தனர். இதனால் அந்தப் பகுதி பெரும் போர்க்களம் போல் மாறியதுடன் இதில் காயமடைந்த 30 மாணவர்கள் தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். (த)

## வீடு வாடகைக்கு உண்டு

திருநெல்வேலி மேற்கு நாவலடி ஒழுங்கையில் (யாழ் பல்கலைக்கழகத்திற்கு 10 நிமிட நடை தூரத்தில்) சகல வசதிகளுடன் கூடிய (A/C உட்பட) வீடு வாடகைக்கு உண்டு. July 30க்கு முன் தொடர்பு கொள்ளவும்.

(உத்தியோகத்தர்கள் விரும்பத்தக்கது.)

**தொடர்பு.077 349 2125,077 471 1175,077 951 7684**

## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணத்தில் மேல் மாடி வீடு விற்பனைக்கு உண்டு. நன்னீர் வசதியுடன், சகல வசதிகளும் உண்டு.

**தொடர்பு. 077 600 1701**

# 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 03 . 04 . 1986 | 30 . 06 . 2015 |

திதி . திரயோதசி

## அமரர் சின்னராசா குகனேஸ்வரன்(தர்சன்)

ஈராண்டு சென்றாலும் நாளாக நாளாக
தீராது உங்கள் பிரிவின் வலி
நூற்றாண்டு கடந்தாலும் உங்கள்
கருணை முகம் காணாது
அடங்காது நாம் கதறி அழும் ஒலி
வானுறையும் தெய்வ சந்நிதியில்
ஆன்ம ஈடேற்றம் பெற
இறையாசி வேண்டி அஞ்சலிக்கின்றோம்.

மாகியப்பிட்டி வடக்கு,
கொம்பனிப்புலம்.

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி சரோஜினிதேவி கனகலிங்கம்



கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரோஜினிதேவி கனகலிங்கம் நேற்று (21.06.2017) புதன்கிழமை காலமானார்.

அன்னார் கந்தையா கனகலிங்கத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான இராசா தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும் கிருஷ்ணவேணி (கனடா), கஜேந்திரகுமார் (ஆஸ்திரேலியா), நந்தகோபன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயும் காலஞ்சென்ற இராஜகுலசிங்கம் மற்றும் கமலாதேவி, ஜெயவீரசிங்கம், பரராஜசிங்கம், சாந்தாதேவி, தனபாலசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் சுந்தர் (கனடா), அமலா (ஆஸ்திரேலியா), தர்ஷினி (கனடா) ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.06.2017) வெள்ளிக்கிழமை மு.ப.9 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்
**021 205 2697**

கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

## மரண அறிவித்தல்

### திருமதி நாகம்மா பொன்னம்பலம்



கோண்டாவில் கிழக்கை பிறப்பிடமாகவும் கனடாவை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி நாகம்மா பொன்னம்பலம் நேற்று (21.06.2017) புதன்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முத்துத்தம்பி தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும் பொன்னம்பலத்தின் அன்பு மனைவியும் தவமணி(கோண்டாவில்), கனகலிங்கம்(புலவர், கோண்டாவில்), மனோராணி(கனடா), சுந்தரலிங்கம் (கனடா), லலிதா(லண்டன்) ஆகியோரின் அன்புத்தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெற்று பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஞானவைரவர் வீதி,
கோண்டாவில் கிழக்கு.
கோண்டாவில்.

தகவல் :
குடும்பத்தினர்.
கனகலிங்கம்
(புலவர் மகன், கோண்டாவில்)

## மரண அறிவித்தல்



### திருமதி அருந்ததிதேவி கந்தையா

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் கோப்பாய் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அருந்ததிதேவி கந்தையா நேற்று (21.06.2017) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா தில்லையம்மா தம்பதியரின் அன்பு மகளும் வேலுப்பிள்ளை கந்தையா அவர்களின் அன்பு மனைவியும் கலையரசி, அன்பழகன்(டுபாய்), அருனழகன், கலைச்செல்வி, காயத்திரி (மலேசியா), இளங்குமரன் ஆகியோரின் அன்புத் தாயாரும் . சசிதரன், குகானந்தி, சர்மிலாதேவி, மதியழகன், நிசாகுலன் ஆகியோரின் அன்பு மாமியாரும். அர்ச்சனா, அகிலவன், ஆரண்யா, அபிநயா, சுயனஸ்ரீசாயன், சிவானந்தி, சாருகேஷ், மதுரங்கன், ஆரங்கன், கீர்த்தனா, ஆதவன், கபிஷன், கபிஷிகா ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.06.2017) வியாழக்கிழமை பி.ப 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் கந்தன் காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சரவணபவானந்தா வீதி,
கோப்பாய் வடக்கு,
கோப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்.

**077 758 8128** (அருள்)

Galaxy Star
வெற்றி வாரம் 170 திகதி 21.06.2017
நட்சத்திர மற்றும் வெற்றி இலக்கங்கள்
05 03 11 22 36
அடுத்த ஞாயிற்றுக்கிழமை
சுப்பர் பரிசுப் பொதி
ரூ. 2, 314, 880/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>GS என டைப் செய்து
1919 இற்கு அனுப்பவும் அல்லது நேரடி அழைப்பு 1919
2017.06.25ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மஞ்சள் நிற டிக்கட்டுக்களாகும்.
வெற்றிபெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம் 2893 திகதி 21.06.2017
வெற்றி எண்கள் மற்றும் ஆங்கில எழுத்து
16 48 56 57 P
போனஸ் இல.
50
சனிக் கிழமை ஜக்பொட்
67, 633, 707/-
தொ.பே : 011 4824824
SMS: DLB<space>LOT<space>SF என டைப் செய்து
1919 இற்கு அனுப்பவும்
www.dlb.lk
பச்சை நிற டிக்கட்டுக்கள்
24.06.2017 ஆம் திகதி சனிக் கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்

DLB
CAR PLUS
சீட்டிழுப்பு 11
சீட்டிழுப்பு திகதி 2017.06.21
வெற்றி இலக்கங்கள்
02 08 53
ஆங்கில எழுத்து C
அதிர்ஷ்ட நாள் சனி
1 17
வழங்கப்பட்ட மொத்த பரிசு
5,059,460/=
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>DL என டைப் செய்து
1919 இற்கு அனுப்பவும் அல்லது நேரடி அழைப்பு 1919


## வேலணை பிரதேச சபை
## பகிரங்க அறிவித்தல்
## கட்டாக்காலி மாடுகள் பிடித்தல்

எமது சபைக்கு உட்பட்ட மண்டைதீவு, அல்லைப்பிட்டி, வேலணை, புங்குடுதீவு, நயினாதீவு பிரதேசங்களில் கட்டாக்காலியாக திரியும் மாடுகள் 28.06.2017 ஆம் திகதி முதல் எமது சபையால் அங்கீகாரம் வழங்கப்பட்ட குழுவினால் பிடிக்கப்படவுள்ளது.

எனவே வளர்ப்பு மாடுகளை உரியவர்கள் கட்டி பராமரிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

**அப்பாத்துரை குருநாதன்,**
**செயலாளர்,**
**பிரதேசசபை, வேலணை.**

## மரண அறிவித்தல்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 19 | 19 |
| 08 | 06 |
| 1932 | 2017 |

### சி. குலசேகரம்

**(சாந்தி ஸ்ரோர்ஸ், பருத்தித்துறை)**

நாகர் கோயிலைப் பிறப்பிடமாகவும் பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் தற்போது கொழும்பு, வெள்ளவத்தையில் வசித்தவருமான சின்னப்பொடி குலசேகரம் (முன்னாள் பிரபல வர்த்தகர், சாந்தி ஸ்ரோர்ஸ், பருத்தித்துறை) கடந்த (19.06.2017) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற உடையார்கந்தரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற சின்னப்பொடி முத்துப்பிள்ளை தம்பதியரின் ஏக புதல்வரும் கார்த்திகேசு நல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் தங்கராணியின் அன்புக் கணவரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் 25.06.2017 ஞாயிற்றுக்கிழமை கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் காலை 7.30 மணிக்கு இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தெஹிவளை பொது மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு -
077 222 5050 (மகன்)

தகவல்:
மனைவி, மக்கள்,
மருமக்கள், பெறாமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

# மரண அறிவித்தல்



## பொன்னர் தங்கராசா

யாழ். புத்தூர் கிழக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னர் தங்கராசா 18.06.2017 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னர்-மீனாட்சி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற தம்பு மாணிக்கம் தம்பதியரின் அன்பு மருமகனும், இராசமலரின் அன்புக் கணவரும், தயாவதி, குணராஜன், அருள்குமரன், கவியரசன் (கனடா), காலஞ்சென்ற கவீந்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், குணரட்ணம், திரவியம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், இராசேந்திரம், நிபாஜினி, மீரா, ஜானுஜா ஆகியோரின் அன்பு மாமனும், நிதர்சன், துஷாந், அபிசகன், பிரணவி, சகானா, அயுசன், நிதுசன் ஆகியோ-ரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 22.06.2017 வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் புத்தூர் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: பிள்ளைகள்**


(C30170)

# முதலாம் ஆண்டு நினைவலைகள்

அமரர்

## செல்லையா மனோகரன்

(ஓய்வு பெற்ற மக்கள் வங்கி முகாமையாளர் - சாவகச்சேரி)



" ஆண்டொன்று போனதையா
ஐயனே உன் முகம்பார்த்து
மீண்டும் நீ வாராயோ
ஐயா எம் குலம் விளங்க "

கடந்த வருடம் 02.07.2016 அன்று சிவபதமடைந்த எமது குடும்பக் குலவிளக்கு அமரர் செல்லையா மனோகரன் அவர்களின் ஆண்டுத்திவஷம் இன்று (22.06.2017) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

மேற்படி நிகழ்வில் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்னாரின் ஆத்மசாந்தி பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம் பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் படி அன்புடன் அழைக்கின்றோம்.

லங்காவாசா
கண்டி வீதி,
சாவகச்சேரி வடக்கு,

திருமதி .லங்காதேவி -மனோகரன்
குடும்பத்தினர்.



# மரண அறிவித்தல்

## செல்லையா சந்திரசேகரம்

(நயினாதீவு-05)

**வர்த்தகர், நயினாதீவு மத்தி கிராம அபிவிருத்தி சங்க தலைவர், நயினை நாகபூசனி அம்மன் தொண்டர்சபை காப்பாளர்.**

நயினாதீவு 5ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா சந்திரசேகரம் 21.06.2017 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா-வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான விஸ்வலிங்கம் - சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், கமலாசினிதேவியின் பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான அன்னபூரணி, இராசபூரணி மற்றும் செல்வபூரணி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், தேவரஜனி (பிரான்ஸ்), தேவ தர்ஷினி (லண்டன்), மகிந்தன் (பிரா-ன்ஸ்), சண்முகப்பிரியா (சுவிஸ்), அமுதீஷன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், அம்பிகைநாதன், நவசங்கர், பத்மராணி, திருவழகன் ஆகியோரின் அன்பு மாமனாரும், கனக சபாபதி, சாம்பசிவம், அரியரெத்தினம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், சுகந்தி, பிரதீபன், கவிதா, மயூரன், பிரகலாதன், சயந்தன், சயானி, சர்மினி ஆகியோரின் அன்பு மாமனும், கதுசனா, பிருந்திகா, திவிசன், விதுசன், சரணியா, அஸ்வினி, கர்ஷன், கவிஷன், திபி ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.06.2017) வெள்ளிக் கிழமை அவரது இல்லத்தில் மு.ப 11 மணியளவில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நயினாதீவு சல்லிபரவை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

நயினாதீவு - 05

076 6176115 / 021 5682251 / 076 4258776

(CS/5046)(10)

## காணாமற்...

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா. சம்பந்தன்.

அத்துடன், காணாமல்போனவர்களை கண்டறிவதற்கான தலைமையகம் கொழும்பில் அமைக்கப்பட்டாலும் வடக்கிலுள்ளவர்கள் முறைப்பாடுகளைச் செய்ய வன்னியிலும் ஓர் அலுவலகம் அமைக்கப்படவேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுப் புதன்கிழமை தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவால் முன்வைக்கப்பட்ட காணாமற்போனவர்கள் பற்றிய அலுவலகச் சட்டவரைவின் இரண்டாம் மதீப்பீடு மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

காணாமற்போனவர்களைக் கண்டவறிவதற்கான அலுவலகம் அமைப்பதாகப் பன்னாட்டிடம் வழங்கிய வாக்குறுதி இதுவரை நடைமுறைப்படுத்தவில்லை. இதனை அரசு மேலும் காலதாமதப்படுத்தாது உடனடியாக செயற்படுத்தவேண்டும்.

ஒருவர் காணாமல் ஆக்கப்படுவது என்பது பெரும் குற்றமாகும். அதுமட்டுமல்லாது, அது கொலைக் குற்றத்துக்குச் சமன். கொலைக் குற்றவாளிக்கு உச்சபட்ச தண்டனை வழங்கப்படவேண்டும். வடக்குகிழக்கில் 20 ஆயிரத்துக்கு அதிகமானவர்கள் காணாமற்போயுள்ளதாகக் கூறப்படுகின்றது.

இராணுவ அதிகாரிகள் 5 ஆயிரம் பேருக்கு அதிகமானவர்கள் காணாமற்போயுள்ளதாகவும் கூறப்படுகின்றது. காணாமற்போன பொதுமக்கள் தொடர்பில் விசாரணை செய்வதுபோன்று இராணுவ அதிகாரிகள் குறித்தும் விசாரணை செய்யவேண்டும்.

நாங்கள் இந்த அலுவலகத்தை நிறுவுவது தொடர்பில் நாடாளுமன்றத்தில் ஒத்திவைப்பு வேளை விவாதங்களில் பேசியுள்ளோம். அத்துடன், அரச தலைவர், தலைமை அமைச்சர், அயலுறவு அமைச்சர் என அரசின் உயர் மட்டங்களில் நாங்கள் பேசிப் பேசி ஏமாற்றமடைந்துள்ளோம். இந்த விடயத்தில் பெரும் காலதாமதம் ஏற்பட்டுள்ளது. எனவே, மேன் மேலும் தாமதிக்காது உடனடியாக செயற்படுத்தவேண்டும்.

அலுவலகத்தின் தலைமையகம் கொழும்பில் நிறுவப்படும் என சட்டமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. வடக்கு மாகாணத்திலுள்ளவர்கள் முறைப்பாடுகளைச் செய்வதற்கு இலகுவாக வன்னியில் ஓர் அலுவலகம் அமைக்கப்படவேண்டும்.

அத்துடன், சட்டம் எப்போது எந்த திகதியிலிருந்து நடைமுறைப்படுத்தப்படுவது குறித்து எதுவும் சட்டத்தில் குறிப்பிடப்படவில்லை. இந்தச் சட்டத்துக்குத் தேவையான அதிகாரம் உள்ளது. அலுவலக உத்தியோகத்தர்கள் அனுபவம் உள்ளவர்களாக இருக்கவேண்டும். நீதிமன்றத்தின் அழைப்பாணையைப் பெற்று எந்தவொரு நிலைக்கும் சென்று ஆள்களை கண்டறியவேண்டும். புதைக்கப்பட்டதாக நம்பப்படும் இடங்களை அகழ்வதற்கான அதிகாரங்களும் வழங்கப்படவேண்டும்.

இதன் ஊடாகப் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தீர்வைப் பெற்றுக் கொடுக்கவேண்டும் என்பதே எமது நோக்கம். என்றாலும், நாங்கள் அரசுக்கு எந்த அழுத்தங்களும் பிரயோகிப்பதில்லலயென எமது மக்கள் குறிப்பிடுகின்றனர். நாங்கள் எம்மால் முடியுமானவரை அரசுக்கு அழுத்தம் பிரயோகித்துள்ளோம்.

என்றாலும், அரசுக்கு கூட்டு எதிர்க்கட்சியால் முன்னெடுக்கும் பொய்ப் பரப்புரைகள் பாதிப்பாகத் தடையாக அமைந்துள்ளன. தேசிய பாதுகப்புக்கு அச்சுறுத்தல் என்றும், நாட்டை பாதுகாத்த இராணுவச் சிப்பாய்களைச் சட்டத்துக்குமுன் நிறுத்துவதாகவும் போன்ற பிரசாரங்களைப்பொது எதிரணி முன்னெடுக்கின்றது. காணாமற்போனவர்கள் அலுவலகம் நிறுவப்படுவதால் அவ்வாறு தேசிய பாதுகாப்புக்கு எந்த அச்சுறுத்தலும் இல்லை என்பதை நாங்கள் தெளிவாகக் குறிப்பிட விரும்புகின்றோம். குறித்த அலுவலகத்தின் ஊடாக உயிரோடு இருக்கின்றவர்கள் கண்டறியப்பட்டு விடுவிக்கப்படல், இல்லையென்றால் மரணமடைந்தவர்களுக்கு மரணச் சான்றிதழை வழங்கல், அதன் ஊடாக அவர்கள் தமது நிவாரணங்களைப் பெற்றுக்கொள்வார்கள்.

எனினும், துரதிர்ஷ்ட வசமாக தேர்தல்களில் தோல்வியடைந்தவர்கள் பொய்ப் பிரசாரங்களில் ஈடுபட்டுவருவதுடன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிராக பொய்யான தகவல்களைக் குறிப்பிடுகின்றனர். அவ்வாறே வட மாகாணத்திலுள்ள சில நகைச்சுவையாளர்களும் ஒற்றுமையாக வாழ்வதை விரும்பாது தொடர்ந்தும் முறுகல்களை ஏற்படுத்தவே முற்படுகின்றனர்.

தமிழ் மக்களுக்கான அந்தஸ்தைப் பெற்றுக் கொடுத்து அவர்களுக்கு சுயாட்சியைப் பெற்றுக்கொடுப்பதே எமது நோக்கம். அரசியல் ரீதியாக இலாபமடையும் சிலர் அதனை சீர்குலைக்க முனைகின்றனர்" -என்றார். (த)

## கல்வி...

குரே முன்னிலையில் பதவிப் பிரமாணமும் செய்து புதிய அமைச்சுக்களைப் பொறுப்பெடுத்தார்.

வடக்கு மாகாண அமைச்சர்கள் தொடர்பில் விசாரணை நடத்திய குழு, கல்வி மற்றும் விவசாய அமைச்சர்களைப் பதவி நீக்கவேண்டும் என்று பரிந்துரைத்திருந்தது. இந்த நிலையில் கடந்த 14ஆம் திகதி மாகாணசபை அமர்வில், இரு அமைச்சர்களையும் தங்களது பதவிகளைத் தியாகம் செய்யுமாறு முதலமைச்சர் கேட்டுக் கொண்டிருந்தார்.

இதற்கு அமைவாக இரு அமைச்சர்களும் தங்களது பதவி விலகல் கடிதங்களை வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனிடம் சமர்ப்பித்திருந்தனர். உடனடியாகவே, இரு அமைச்சுப் பொறுப்புக்களையும் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் பொறுப்பேற்றுக் கொண்டார்.

வடக்கு மாகாண ஆளுநர் குரே முன்பாக நேற்று மாலை பதவிப் பிரமாணம் செய்து கொண்டார். இதன் பின்னர் கருத்துத் தெரிவித்த மூன்று அமைச்சுப் பொறுப்புக்களைத் தன் வசம் வைத்துள்ள முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், பதவி விலகிய இரண்டு அமைச்சுக்களையும் நான் பொறுப்பேற்றுக் கொண்டேன். பதவி விலகிய அமைச்சுக்களின் பணிகள் தடைப்படாத அளவுக்கு எல்லாவற்றையும் சுமுகமாக மேற்கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளேன். இனி நடப்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம் - என்றார். (த-5)

## காணாமற்போனோரின் பணி...

பணிகள் தொடர்பிலும் அதிகாரம் தொடர்பிலும் பலவித கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

காணாமல்போனோர் செயலகத்தின் ஊடாக போர்க் காலப்பகுதியின்போதும் அதன் பின்னரான காலப்பகுதியிலும் காணாமற்போனவர்கள் தொடர்பில் தேடிப் பார்ப்பதே பிரதான கடமையும் அதிகாரமுமாகும். காணாமற்போனவர்களைத் தேடுவதைத் தவிர எந்தவொரு அதிகாரமும் காணாமற்போனோர் காரியாலயத்துக்குக் கிடையாது. காணாமற்போனவர்கள் தொடர்பிலான சாட்சி பெற்றுக்கொண்டு அதன்மூலம் காணாமற்போனவர்கள் எங்கு உள்ளனர் என்பது தொடர்பில் தேடப்படும்.

காணாமற்போனவர்களுக்கு என்ன நடந்தது? அவர்கள் உயிருடன் உள்ளார்களா? என்பது குறித்தே குறித்த காரியாலயத்தால் ஆராயப்படும்.

சுமார் 30 வருடகாலப் போர் தெற்கிலும் இருந்தது வடக்கிலும் இருந்தது. போரின்போது காணாமற்போனோருக்கு என்ன நடந்தது என்பதைப் பற்றிமாத்திரமே நாம் ஆய்வு செய்வோம். அதற்கு மாறாக எந்தக் காரணம் கொண்டும் எவருக்கு எதிராகவும் வழக்குத் தாக்க செய்யமாட்டோம். வழக்குத் தாக்கல் செய்வதற்கான எந்தவொரு அதிகாரமும் காணாமற்போனோர் செயலகத்துக்குக் கிடையாது.

போர் காரணமாக தமது உறவுகள் இழந்தவர்களை கண்டு பேசியுள்ளேன். போர் காரணமாக வடக்கில் வாழும் சாதாரண மக்கள் மாத்திரம் காணாமற்போகவில்லை. சுமார் 5,000 படையினரையும் காணவில்லை. ஆகவே, அவர்களுக்கு என்ன நடந்தது என்பது தொடர்பில் நாம் ஆராயவேண்டியுள்ளது. எனவே, இந்தப் பிரச்சினையை மேலும் வளர்க்கவிடாமல் உடன் தீர்வு காணவேண்டும். போர் காரணமாக வடக்கிலும் தெற்கிலும் ஏற்பட்ட காயங்களை உடன் ஆற்றவேண்டும். காயங்களை ஆற்றிக்கொண்டு ஒரே நாடு என்ற கொள்கையின்பிரகாரம்வாழவேண்டும். இந்த நிலையில், காணாமற்போனவர்களுக்கான காரியாலயம் நிறுவியமை ஊடாகப் படையினருக்கு வழக்கு தாக்கல் செய்யவுள்ளதாகவும் போர்க் குற்ற விசாரணை மேற்கொள்ளவுள்ளதாகவும் கூறுகின்றனர். எந்தக் காரணம் கொண்டும் இந்தக் காரியாலயத்தின் ஊடாக எவருக்கு எதிராகவும் வழக்கு தொடரமாட்டோம். அதேபோன்று போர்க் குற்ற விசாரணையை முன்னெடுக்க மாட்டோம். போர்க் குற்ற விசாரணைக்காக காரியாலயம் நிறுவவில்லை.

அத்துடன், நாம் உண்மையைக் கண்டறிய வேண்டும். இதற்கு தென்னாபிரிக்காவின் அனுபவத்தை நாம் பெறவுள்ளோம். இதன்படி உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவை நியமிக்கவுள்ளோம். உண்மையைக் கண்டறிவோம். அதன் பின்னர் தீர்வு காண்போம். முதலில் உண்மையைக் கண்டறிய வேண்டும். இதன்போது ஒரு சரத்தை மாத்திரம் திருத்தம் செய்துள்ளோம். காணாமற்போனவர்களின் உறவினருக்கு தமது உறவுகளைத் தேடுவதற்கு உரிமை உள்ளது.

புதிய அரசமைப்பைத் தயாரிப்பதற்கான வழிநடத்தல், குழுவின் செயற்பாடு சீராக இயங்கி வருகின்றன. தற்போது இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பில் பல விடயங்கள் தொடர்பில் இணக்கத்துக்கு வந்துள்ளோம். மேலும் பல விடயங்களில் இணக்கத்துக்கு வரவேண்டியுள்ளது. ஆகவே, நாட்டின் பிரதான பிரச்சினைக்கு உடனடியாக தீர்வு காணவேண்டியது அவசியம்-என்றார். (த)

## கூட்டமைப்பு...

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையில் நாளை மாலை நடைபெறவுள்ளது.

நிறைவேற்று அரச தலைவர் முறைமை ஒழிப்பு விடயத்தில், இரு முதன்மைக் கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சிக்கும், சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையில் இணக்கம் ஏற்படவில்லை. இரு கட்சிகளும் எதிர் எதிர் நிலைப்பாட்டில் உள்ளன.

இந்த விவகாரம் தொடர்பில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேசி, தமக்குச் சாதகமான நிலைப்பாட்டுக்குக் கூட்டமைப்பை வளைத்துப்போடுவதற்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சி முனைப்புக் காட்டி வருகின்றது.

இதற்காகக் கூட்டமைப்புடன் பேசுவதற்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சி முடிவு செய்துள்ளது. அதுவரையிலும் வழிநடத்தல் குழுவின் அமர்வும் ஒத்திப்போடப்பட்டுள்ளது.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியினர் நாளை பேச்சுக்களில் கலந்து கொள்ளவுள்ளனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில் கூட்டமைப்பினர் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-5)

## ஐ.நா. தீர்மானத்தை...

ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

புதிய அயலுறவுத்துறை அமைச்சராக ரவி கருணாநாயக்க பதவியேற்ற பின்னர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் சந்திப்பதற்கு விருப்பத்தை வெளிப்படுத்தியிருந்தார். அதற்கு அமைவாக, அயலுறவுத்துறை அமைச் சில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் நேற்றைய சந்திப்பில் கலந்து கொண்டனர்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை இணங்கிக் கொண்டு நிறைவேற்றிய தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பிலேயே பேசப்பட்டுள்ளது. இதனை எப்படியாக நடைமுறைப்படுத்துவது என்பது தொடர்பில் ஆராயப்பட்டுள்ளது. மிக விரைவாக நிறைவேற்ற வேண்டும் என்று அயலுறவுத்துறை அமைச்சருக்குக் கூட்டமைப்பினர் எடுத்துரைத்துள்ளனர்.

எதிர்கட்சிகள் ஐ.நா. தீர்மானம் தொடர்பில் பொய்ப் பரப்புரை மேற்கொண்டு வருவதாகவும், ஐ.நா. தீர்மானத்தில் சொல்லப்பட்ட விடயங்களை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதில் தான் உறுதியாக இருப்பதாக, அயலுறவுத்துறை அமைச்சர் ரவி, கூட்டமைப்பிடம் தெரிவித்துள்ளார். (த-5)

## ஞானசாரர்...

பலசேனா அமைப்பின் பொதுச்செயலருமான கலகொட அத்தே ஞானசார தேரர் நேற்று நீதிமன்றத்தில் சரணடைந்தார்.

காலையில் சரணடைந்து ஒரு மணி நேரத்துக்குள் நீதிமன்றில் பிணையில் விடுவிக்கப்பட்ட அவர், பிற்பகல் மற்றொரு வழக்கில் கைது செய்யப்பட்டார். எனினும் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட அவர் மீளவும் பிணையில் வெளியே வந்தார்.

வெறுப்புணர்வைத் தூண்டும் பரப்புரைகளை மேற்கொண்ட குற்றச்சாட்டில் கலகொட அத்தே ஞானசார தேரரைக் கைதுசெய்வதற்குப் பொலிஸார் தேடிவந்த நிலையில், கடந்த மாதப் பிற் பகுதியிலிருந்து அவர் மறைந்து வாழ்ந்து வந்தார்.

இந்நிலையில், இரண்டு வழக்குகளில் முன்னிலையாகாத ஞானசார தேரருக்கு எதிராகக் கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றத்தால் பிடியாணையும் பிறப்பிக்கப்பட்டது.

ஞானசார தேரரைக் கூட்டு எதிரணியினரே மறைத்து வைத்திருப்பதாக அரச தரப்பினரும், அமைச்சர் விஜேதாஸ ராஜபக்சவே மறைத்து வைத்திருப்பதாக மற்றொரு தரப்பினரும் குற்றச்சாட்டுகளை முன்வைத்திருந்தனர்.

இந்நிலையில், மறைவிடத்திலிருந்து வெளியே வந்த ஞானசார தேரர் நேற்றுக் காலை கோட்டே நீதிவான் நீதிமன்றத்தில் சரணடைந்தார். இதையடுத்து, அவருக்கு எதிராகப் பிறப்பிக்கப்பட்ட பிடியாணையை நீக்கிய கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்ற நீதிபதி லங்கா ஜயரத்ன, பிணையில் செல்ல அனுமதித்ததுடன், வழக்கு விசாரணையை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 9ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். ஆயினும் பிறிதொரு வழக்கில் அவர் பொலிஸாரால் மீண்டும் கைது செய்யப்பட்டார். குற்றத்தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்ட அவர் புதுக்கடை நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டார்.

இதையடுத்து, புதுக்கடை நீதிவான் நீதிமன்றம் அவரை 10 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணை மற்றும் தலா 5 இலட்சம் பெறுமதியான இரு சரீரப் பிணைகளிலும் விடுவித்துள்ளது. (த)

## விபத்தில்...

(வயது- 13) என்ற சிறுவனே இவ்வாறு உயிரிழந்தார்.

சிறுவனின் தலையில் பலமாக அடி பட்டதாலும் அவரது மண் ஈரலும் பாதிப்படைந்திருந்தமையாலும் 5 தினங்கள் கோமா நிலையிலேயே சிகிச்சை அளிக்கப்பட்டது. எனினும் சிகிச்சை பயனளிக்காது சிறுவன் நேற்று உயிரிழந்தார் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. சிறுவனின் சடலம் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மன்னார் ஏ32 வீதியில் முழங்காவில் 19ஆம் கட்டைப் பகுதியில் உள்ள ஆலயம் ஒன்றில் வருடாந்தத் திருவிழா இடம்பெற்று வருகிறது. கடந்த 16ஆம் திகதி இரவுத் திருவிழாவில் கலந்து கொண்ட குறித்த சிறுவன் வீதியால் பயணித்துள்ளார். அதன் போது அந்த வீதியால் பயணித்த கார் ஒன்று சிறுவனை மோதித் தள்ளியது. விபத்தை ஏற்படுத்திய கார் சம்பவ இடத்தில் நிற்காது தப்பிச் சென்றது. இதனை அவதானித்த அந்தப் பகுதி இளைஞர்கள் அந்தக் காரை நீண்டதூரம் விரட்டிச்சென்றனர். எனினும்கார் ஒடித்தப்பியது. இளைஞர்களிடம் இருந்து கார் தப்பி ஓடிய போதும் அதன் இலக்கத்தகடு ஒன்று கழன்று வீதியில் வீழ்ந்துள்ளது. அதனை மீட்ட இளைஞர்கள் முழங்காவில் பொலிஸாரிடம் அன்றைய தினமே ஒப்படைத்தனர். இலக்கத் தகடு ஒப்படைக்கப்பட்டும் கார் சாரதி இதுவரையில் இனம்காணப்பட்டுக் கைது செய்யப்படவில்லை என அந்தப் பிரதேச மக்கள் கடும் விசனம் தெரிவிக்கின்றனர்.

இலக்கத் தகடுக்குரிய காரின் உரிமையாளர் குருநாகல் பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்று இனம் காணப்பட்டுள்ளார். குருநாகல் பொலிஸார் ஊடாக அவரைக் கைது செய்ய நடவடிக்கை முன்னெடுக்கப்படுகிறது என்று பொலிஸார் தெரிவித்தனர். (வ-101)

## மற்றொரு...

ஆக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக மேலும் ஒரு கடற்படைச் சிப்பாய் சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஏற்கனவே இந்த வழக்கில் 5 கடற்படையினர் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நிலையில், தங்காலை ருகுணு கடற்படை முகாமில் பணியாற்றிய மற்றொரு சிப்பாய் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் முற்பகல் 10 மணியளவில், குற்றப்புலனாய்வுப்பிரிவில் முன்னிலையான குறித்த சிப்பாயிடம், இரவு 8 மணிவரை விசாரணை நடத்தப்பட்டதையடுத்து அவர் அவர் கைது செய்யப்பட்டுள்ளார். (த-ய)

## ஐ.நா...

அன்ரனியோ குட்டரெஸ் இந்த நியமனம் தொடர்பான அறிவிப்பை வெளியிட்டுள்ளார். ஐ.நா. பொதுச்செயலரின் இளையோருக்கான தூதுவராகப் பதவி வகிக்கும், ஜோர்தானைச் சேர்ந்த அகமட் அல்ஹெந்டாவிக்குப் பதிலாக ஜெயத்ம விக்கிரமநாயக்க பொறுப்பேற்கவுள்ளார். (த-ய)

## தொகுதிவாரி...

ரும், சுதந்திரக் கட்சியினரும் இதில் கலந்து கொண்டனர்.

புதிய தேர்தலை முறைமை தொடர்பில் தேர்தல் ஆணைக்குழு முன்வைத்துள்ள 54 திருத்தங்களை உடனடியாக நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து நிறைவேற்றவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதிகாரப் பரவலாக்கம் குறித்து ஏனைய சிறிய கட்சிகளுடன் பேச்ச நடத்தி இறுதி இணக்கப்பாட்டுக்கு வரவேண்டும் எனவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. (த-ய)

# சிவப்பிரகாச ம.வி. வென்றது தங்கம்




யாழ்ப்பாணம், ஜூன் 22
வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான 20 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவு குழுக் குமித்தேயில் தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலய அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது.
நெல்லியடி மத்திய கல்லூரியின் உள்ளக விளையாட்டரங்கில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இந்தப் போட்டியில் தும்பளை சிவுப்பிரகாச மகா வித்தியாலய அணி தங்கப் பதக்கத்தையும் யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி அணி வெள்ளிப் பதக்கத்தையும், உரும்பிராய் இந்துக் கல்லூரி அணி மற்றும் முத்துத் தம்பி மகா வித்தியாலய அணிகள் வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றியுள்ளனர்.
(ம-422)

## இறம்பைக்குளம் மகளிர் ம.வி. காட்டாவில் வென்றது தங்கம்

யாழ்ப்பாணம், ஜூன் 22
வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான 16 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான தனிக் காட்டாவில் வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயத்தை பிரதிநிதித்துவம் செய்த எல்.டெய்சி யூலியட் எமில்டா தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றினார்.
நெல்லியடி மத்திய கல்லூரி உள்ளக விளையாட்டரங்கில் நேற்று முன்தினம் இந்தப் போட்டிகள் நடைபெற்றன. வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயத்தை பிரதிநிதித்துவம் செய்த எல்.டெய்சி யூலியட் எமில்டா தங்கப் பதக்கத்தையும் கைதடி நவீல்ட் பாடலையைப் பிரதிநிதித்துவம் செய்த எஸ்.லக்சனா வெள்ளிப் பதக்கத்தையும் சுண்டுக்குழி மகளிர் கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த எஸ்.அபிரா வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர்.
(ம-422)



## கிளிநொச்சி இந்துக் கல்லூரி சம்பியன்

யாழ்ப்பாணம், ஜூன் 22
வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான 20 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான குழுக் குமித்தேயில் கிளிநொச்சி இந்துக் கல்லூரி அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது.
நெல்லியடி மத்திய கல்லூரி உள்ளக விளையாட்டரங்கில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற போட்டியில் கிளிநொச்சி இந்துக் கல்லூரி அணி சம்பியன் கிண்ணத்தையும் சென். ஜோன்ஸ் கல்லூரி வெள்ளிப் பதக்கத்தையும் சாவகச்சேரி இந்து கல்லூரி மற்றும் முத்துத்தம்பி மகா வித்தியாலய அணிகள் வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றியுள்ளன. (ம-422)

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 22
அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடர் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது. இந்தத் தொடரில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும் முதலாவது ஆட்டத்தில் அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து மணற்காடு சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகமும் மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டு கழகத்தை எதிர்த்து கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன.
(ம-422)

## நிவேதனுக்கு தங்கம்

யாழ்ப்பாணம், ஜூன் 22
வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான 16 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான தனிக் காட்டாவில் சென். ஜோன்ஸ் கல்லூரியை பிரதிநிதித்துவம் செய்த வி.நிவேதன் தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றினார்.
நெல்லியடி மத்திய கல்லூரி உள்ளக விளையாட்டரங்கில் நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டியில் சென். ஜோன்ஸ் கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த வி. நிவேதன் தங்கப் பதக்கத்தையும் வி.திருசாந் வெள்ளிப் பதக்கத்தையும், தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தைப் பிரதிநிதித்துவம் செய்த கே.சோபிகன் வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றியுள்ளனர். (ம-422)



## தனிக் காட்டாவில் அஜந்தினி தங்கம்

யாழ்ப்பாணம், ஜூன் 22
வட மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான 18 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான தனிக் காட்டாவில் கைதடி நவீல்ட் பாடசாலையை பிரதிநிதித்துவம் செய்த வை.அஜந்தினி தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றினார்.
நெல்லியடி மத்திய கல்லூரி உள்ளக விளையாட்டரங்கில் நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டியில் கைதடி நவீல்ட் பாடசாலையை பிரதிநிதித்துவம் செய்த வை.அஜந்தினி தங்கப் பதக்கத்தையும் முத்துத் தம்பி மகா வித்தியாலயத்தைப் பிரதிநிதித்துவம் செய்த டி.தனுசிகா வெள்ளிப் பதக்கத்தையும் வை. யசோதா வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றியுள்ளனர்.
(ம-422)



## திருக்குடும்பக் கன்னியர் அணி இந்து மகளிரைத் தோற்கடித்தது

யாழ்ப்பாணம், ஜூன் 22
யாழ்ப்பாண மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் நடத்தும் இளநிலைப் பரிவினருக்கான கூடைப்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற 20 வயதுப்பரிவு பெண்களுக்கான ஆட்டமொன்றில் யாழ்ப்பாணம் திருக்குடும்பக் கன்னியர்மட அணி வெற்றிபெற்றது.
யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் நேற்றுமுன்தினம் பிற்பகல் 3 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் திருக்குடும்பக் கன்னியர் மட அணி மோதியது.



முதல் பாதியின் முடிவில் 27:9 என்ற புள்ளிகளின் அடிப்படையில் திருக்குடும்பக் கன்னியர் மட அணி முன்னிலை வகித்தது. அந்த அணி தொடர்ந்தும் ஆதிக்கம் செலுத்தி முடிவில் 66:36 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது. (ம-23)

# முல்லை பொது விளையாட்டு மைதானத்தை சீரமைத்துத் தருமாறு வீரர்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 22
சீரமைக்கப்படாமல் இருக்கும் முல்லைத் தீவு பொது விளையாட்டு மைதானத்தை சீரமைத்துத் தருமாறு அந்தப் பகுதி விளையாட்டு வீரர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
முல்லைத்தீவு நகர[illegible] பகுதியில் இருக்கும் இந்த மைதானம் கவனிப்பாரற்றுக் காணப்படுகின்றது.
முன்னைய காலங்களில் இந்தப் பொது விளையாட்டு மைதானத்தில் பல போட்டிகள் நடைபெற்று வந்துள்ளன. ஆனால் தற்போது சில ஆண்டுகளா[illegible] மைதானம் உ[illegible]யில் திருத்தப்படாமல் முல்லைத்தீவு மாவட்ட விளையாட்டு விழாக்கள் கூட தனிப்பட்ட கழகங்களுக்கு உரிய மைதானத்திலேயே நடைபெற்று வருகின்றன. அத்தோடு கால்பந்தாட்ட பயிற்சி மற்றும் மெ[illegible]வல்லுநர் பயிற்சிகளை [illegible]மற்கொள்வதற்குப் பொருத்தமற்றதாக குன்றும் குழியுமாக காணப்படுகின்றது. எனவே உரியவர்கள் நடவடிக்கை எடுத்து மைதானத்தை சீரமைத்துத் தருமாறு வீரர்கள் மற்றும் கழகங்களின் தரப்பிலிருந்து வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.
இது தொடர்பாக முல்லைத்தீவுப் பிரதேச சபை செயலாளர் சி.சபேசனுடன் தொடர்பு கொண்டு கேட்ட போது மைதானம் சீரமைப்புச் செய்வது தொடர்பாக நிதி கோரியிருக்கின்றாம். போதியளவு நிதி கிடைக்காததால் மைதானத்தை சீரமைக்க முடியாது உள்ளது.
அத்தோடு கடந்த ஆண்டு குறிப்பிட்ட நிதியில் மைதானத்தைச் சுற்றி மதில் கட்டியுள்ளோம். மேலதிக நிதி கிடைக்குமிடத்து முழுவதுமாக சீரமைக்கப்படும் என அவர் தெரிவித்தார்.
(ம)

# இந்தியா - இலங்கை அட்டவணை வெளியீடு

இந்தியா - இலங்கை அணிகளுக்கு இடையிலான தொடரின் அட்டவணைகள் பற்றியு விவரங்கள் முழுமையாக வெளியிடப்பட்டுள்ளன.

மினி உலகக்கிண்ணத் தொடரை முடித்துக் கொண்டு இந்திய அணி மேற்கிந்தியத் தீவுகளுக்குச் சென்றுள்ளது. மேற்கிந்தியத் தீவு களில் 5 ஆட்டங்கள் கொண்ட ஒருநாள் தொடரிலும் ஓர் ரி-20 ஆட்டத்திலும் விளை யாடுகிறது. இந்தத் தொடர் நாளை ஆரம்பமாகிறது.

இந்தத் தொடர் முடிந்தவுடன் இந்திய அணி இலங்கைக்கு வரவுள்ளது. மூன்று ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடர், 5 ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடர் மற்றும் ஓர் ரி-20 ஆட்டம் என்பன நடைபெறவுள்ளன.



ஜூலை 26ஆம் திகதி டெஸ்ட் தொடர் ஆரம்பமாகிறது. இரண்டாவது ஆட்டம் ஓகஸ்ட் 4, மூன்றாவது ஆட்டம் ஓகஸ்ட் 12 ஆகிய திகதிகளில் நடைபெறவுள்ளன.

டெஸ்ட் தொடரைத் தொடர்ந்து ஒருநாள் தொடர், ஓகஸ்ட் 20ஆம் திகதி ஆரம்பமாகிறது. ஒருநாள் தொடரின் ஏனைய நான்கு ஆட்டங்களும் முறையே ஓகஸ்ட் 24, ஓகஸ்ட் 27, ஓகஸ்ட் 30, செப்ரெம்பர் 3 ஆகிய திகதிகளில் நடைபெறவுள்ளன. ரி-20 ஆட்டம் செப்ரெம்பர் மாதம் 6ஆம் திகதி நடைபெறவுள்ளது.

டெஸ்ட் ஆட்டங்கள் கண்டி, காலி மற்றும் கொழும்பிலும், ஒருநாள் தொடரின் ஆட்டங்கள், கொழும்பு, தம்புள்ள, பல் லேகல ஆகிய இடங்களிலும் நடைபெறவுள்ளன. (ம)

## மினி உலகக்கிண்ணத்தை கைவிடுவதற்கு பரிசீலனை

மினி உலகக்கிண்ணத் தொடரை கைவிடுவதற்கு பன்னாட்டு கிரிக்கெட் சபை பரிசீலித்து வருகிறது என்று பன்னாட்டு ஊடகங்கள் பலவும் செய்தி வெளியிட்டன.

இங்கிலாந்தில் அண்மையில் மினி உலகக்கிண்ணம் நடைபெற்றது. பாகிஸ்தான் சம்பியனானது. அடுத்த தொடர் எதிர்வரும் 2021ஆம் ஆண்டு இந்தியாவில் நடைபெறவுள்ளது.

ரி-20 உலகக்கிண்ணத் தொடரில் அதிக கவனம் செலுத்தும் வகையில் அதிகபட்சமாக 20 அணிகளை பங்கேற்க வைக்க பன்னாட்டு கிரிக்கெட் சபை ஆலோசனை நடத்தி வருகிறது. இதனால் உலகக்கிண்ணம், ரி-20 உலகக்கிண்ணம் இரண்டையும் தவிர்த்து மினி உலகக்கிண்ணத் தொடரை இந்த வருடத்துடன் கைவிடுவதற்கு பன்னாட்டு கிரிக்கெட் சபை பரிசீலித்து வருகிறது என்று சொல்லப்படுகிறது.

இது தொடர்பில் பன்னாட்டு கிரிக்கெட் சபையின் தலைமைச் செயல் அதிகாரியான ரிச்சட்சன், 'அடுத்த மினி உலகக்கிண்ணத் தொடரை 2021ஆம் ஆண்டில்தான் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. அதற்குள் எந்த மாற்றமும் நிகழலாம். மினி உலகக்கிண்ணத் தொடருக்குப் பதிலாக இரண்டு ரி-20 உலகக்கிண்ணத் தொடர்களை நடத்துவது குறித்து பேச்சு நடைபெற்று வருகிறது என்று தெரிவித்தார். (ம)

# கோக்லிக்கும் எனக்கும் சுமுகமான உறவில்லை

## போட்டுடைத்தார் கும்ளே

"இந்திய அணியின் தலைவர் கோக்லிக்கும் எனக்கும் இடையில் சுமுகமான உறவில்லை. அணியில் சில கருத்து முரண்பாடுகள் உள்ளன இவ்வாறு தெரிவித்தார்" அந்த அணியின் முன்னாள் தலைமைப் பயிற்சியாளர் கும்ளே.



இந்திய அணியின் தலைமைப் பயிற்சியாளர் பதவியில் இருந்து நேற்று முன்தினம் விலகினார் கும்ளே. மினி உலகக்கிண்ணத் தொடரின் இறுதியாட்டத்தில் பாகிஸ்தானுடன் அடைந்த தோல்வியை அடுத்தே கும்ளே பதவி விலகினார் என்று செய்திகள் வெளியாகியிருந்தன. ஆனால், தனது விலகலுக்கான உண்மையான காரணத்தை அவர் நேற்றுத் தெரிவித்தார்.

"இந்திய அணியின் தலைமை பயிற்சியாளராக என்னை நீடிக்குமாறு கிரிக்கெட் சபை கேட்டுக்கொண்டது. இது என் மீது உள்ள நம்பிக்கையின் காரணமாகும். இதை கௌரவமாகக் கருதுகிறேன்.

ஆனால் இந்திய அணித் தலைவருக்கும் எனக்கும் இடையில் சுமுகமான புரிதல்கள் இல்லை. எனவே பதவி விலகிவிடுதலே சிறந்தது என்று முடிவெடுத்தேன்.

எனக்கும் அணித்தலைவருக்கும் இடையில் ஏற்பட்ட தவறான புரிதல்களைத் தீர்த்துவைக்க இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டது. ஆனால் அது சரிவராமல் போய்விட்டது. ஆனால் அணித்தலைவர், தலைமைப் பயிற்சியாளர் இருவருக்கும் இடையிலான எல்லைகளை நான் எப்போதும் மதிக்கக்கூடியவன் என்பதை உறுதியாகச் சொல்லிவிட முடியும்.

கடந்த ஒரு வருடத்தில் பல்வேறுபட்ட விடயங்களைச் சாதித்துள்ளேன். இதற்கு ஒத்துழைப்புத் தந்த அணித் தலைவர், வீரர்கள், சக உறுப்பினர்கள் என அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவிக்கிறேன் என கும்ளே மேலும் தெரிவித்தார்.

கும்ளே - கோக்லி இருவருக்கும் இடையில் கருத்து முரண்பாடுகள் உள்ளன என்று மினி உலகக்கிண்ணத் தொடர் ஆரம்பிக்கும் முன்னரேயே செய்திகள் வெளிவந்தன. ஆனால் ஆரம்பத்தில் இவை இந்திய அணித்தலைவர் கோக்லியாலும், கும்ளேயாலும் மறுக்கப்பட்டன. தற்போது இந்த விவகாரம் கும்ளேயால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. (ம)



# இங்கிலாந்து தொடர்கள் எங்களை வலுப்படுத்தும்

## வில்லியர்ஸ் நம்பிக்கை

"இங்கிலாந்துக்கு எதிராக ஆரம்பமாகியுள்ள தொடர்கள் எம்மை வலுப்படுத்தும் வாய்ப்புக்கள்" இவ்வாறு தெரிவித்தார் தென்னாபிரிக்க அணியின் தலைவர் வில்லியர்ஸ்.

தென்னாபிரிக்க அணி இங்கிலாந்துக்குச் சுற்றுப்பயணம் சென்றுள்ளது. இந்த இரு அணிகளுக்கும் இடையில் மூன்று ரி-20 ஆட்டங்களைக் கொண்ட தொடரும், நான்கு டெஸ்ட் ஆட்டங்களைக் கொண்ட தொடரும் நடைபெறவுள்ளன.

ரி-20 தொடர் நேற்று ஆரம்பமானது. இந்த நிலையில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே வில்லியர்ஸ் இவ்வாறு தெரிவித்தார்.

மினி உலகக்கிண்ணத் தொடரில் லீக் சுற்றோடு வெளியேறிய பின்னர், இரண்டு நாட்களுக்கு மிகவும் கடினமாக இருந்தது. ஏராளமான விமர்சனங்கள் எழுந்தன. இதையெல்லாம் தென்னாபிரிக்க வீரர்கள் நேர்மறையாக எடுத்துக்கொண்டு, தற்போதைய தொடரை முன்னேற்றத்துக்கான வாய்ப்பு என்று கருதுகிறார்கள். இந்த மூன்று ஆட்டங்களும் எனக்கும், சக வீரர்களுக்கும் வாய்ப்பை கொடுக்கும் என வில்லியர்ஸ் மேலும் தெரிவித்தார். (ம)

# இளநிலைப் பிரிவு கூடைப்பந்து அரையிறுதி ஆட்டங்கள் இன்று

யாழ்ப்பாணம், ஜூன் 22

யாழ்ப்பாண மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் நடத்தும் இளநிலைப் பிரிவு கூடைப்பந்தாட்டத் தொடரின் 20 வயதுப்பிரிவு அரையிறுதி ஆட்டங்கள் இன்று நடைபெறவுள்ளன.

கொக்குவில் இந்துக் கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் பிற்பகல் 2.30 மணிக்கு இடம்பெறும் பெண் கள் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி அணி மோதவுள்ளது. பிற்பகல் 3.30மணிக்கு இடம்பெறும் இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் உடுவில் மகளிர் கல்லூரி அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் திருக்குடும்பக் கன்னியர் மட அணி மோதவுள்ளது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் பிற்பகல் 2.30 மணிக்கு இடம்பெறும் ஆண் கள் பிரிவு முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி மோதவுள்ளது. தொடர்ந்து பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து மானிப்பாய் ஏஞ்சல் பன்னாட்டுப் பாடசாலை அணி மோதவுள்ளது. (ம-23)

## கரப்பந்தாட்டத்துக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

யாழ்ப்பாணம், ஜூன் 22

அரியாலை சனமூக நிலையத்தின் ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு யாழ்ப்பாண மாவட்ட ரீதியில் கரப்பந்தாட்டத் தொடரொன்றை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்தத் தொடரில் பங்குபற்ற விரும்பும் கழகங்கள் தம் முடன் தொடர்புகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ம-23-108)

# இலங்கை வீரர்களுக்கு உடற் தகுதி போதாது

## தயாசிறி பாய்ச்சல்

பன்னாட்டு அணிகளின் ஏனைய வீரர்களுடன் ஒப்பிடுகையில் இலங்கை வீரர்கள் தமது உடற் தகுதியை மேம்படுத்துவதிலும், அதைத் தக்கவைப்பதிலும் பின்னடைவைச் சந்திக்கின்றனர் என்றவாறாக கருத்துத் தெரிவித்தார் விளையாட்டுத் துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகர.

அமைச்சரவைத் தீர்மானங் களை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டிலேயே இது தொடர்பில் வெளிப்படுத்தியுள்ளார்.

"எதிர்வரும் காலங்களில் 100 சதவீதம் உடற் தகுதி இருந்தால் மட்டுமே அவர்கள் அணியில் சேர்த்துக் கொள்ளப் படுவார்கள். பன்னாட்டு வீரர்களுடன் ஒப்பிடுகையில் இலங்கை வீரர்கள் உடற் தகுதியை நிரூபிப்பதி லும், அதைத் தக்கவைப்பதிலும் பின்னடைவைச் சந்திக்கின்றனர். மினி உலகக்கிண்ணத் தொடரில் சிகர் தவான் சதம் விளாசிய பின்னர் களத்தடுப்பிலும் ஈடுபட்டார். இது அவரின் உடற் தகுதியைக் காட்டுகிறது" என தயாசிறி மேலும் தெரிவித்தார். (ம)

# பாகிஸ்தான் அணிக்கு கோலாகல வரவேற்பு

மினி உலகக்கிண்ணத்தைக் கைப்பற்றி தாயகம் திரும்பிய பாகிஸ்தான் அணிக்கு அந்த நாட்டில் மிகவும் கோலாகல வரவேற்பு கொடுக்கப்பட்டது. இங்கிலாந்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இறுதியாட்டத்தில் எவரும் எதிர்பாரா வண்ணம் இந்தியாவை வீழ்த்தி கிண்ணம் வென்றது பாகிஸ்தான். மறுநாள் தாயகம் திரும்பிய அந்த அணிக்கு லாகூர் வானூர்தி நிலையத்திலிருந்து பல கிலோமீற்றர் தூரம்வரை வீதியின் இருமருங்கிலும் ரசிகர்கள் நிறைந்திருந்து உற்சாக வரவேற்பு வழங்கினர்.

பாகிஸ்தான் அணித்தலைவர் சர்பராஸ் அகமட்டின் வீட்டுக்கும் முன்பும் பல்லாயிரக்கணக்கான மக்கள் திரண்டிருந்து தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

"நாங்கள் வரலாற்றுச் சாதனை படைத்துள்ளோம். இந்த வெற்றியானது மறக்கப்படாது என நம்புகி றேன். இது எப்போதும் நினைவில் கொள் எப்படும். இளம் வீரர்கள் இந்த தொடரில் சிறப்பாக விளையாடினார்கள். அதே வேளையில் மூத்த வீரர்களும் முக்கியமான ஆட்டத்தில் சிறந்த திறனை வெளிப்படுத்தினார்கள். இது பாகிஸ்தான் கிரிக்கட்டுக்கு சிறந்தது. கிண்ணம் வெல்வது கடினமாக இருந்தது. ஒட்டுமொத்த அணியின் முயற்சியாலேயே இது சாத்தியமானது" என அகமட் உரையாற்றினார். (ம)

**யாழ்.நகரில் புதிய பிரிவுகள் ஆரம்பம்**
**கையடக்க தொலைபேசி திருத்தும் பாடநெறி**
**Mobile Phone Repairing Coures**

♦ பதிவுக்கட்டணம் - 2500/- ♦ பாடநெறிக் கட்டணம் - 11500/-

மாதம் ஒன்றுக்கு 100 000 இற்கு மேல் வருமானம் பெறக்கூடியது. திருத்தும் துறையில் 10 வருடத்துக்கு மேல் அனுபவம் கொண்ட முதல்தர ஆசிரியர் Ganesh Sir அவர்களினால் நடத்தப்படுகின்றது.

♦Smart Phone கள் உட்பட அனைத்து Phone களும் பயிற்சியளிக்கப்படும். மிகச்சிறிய முதலீட்டில் மிகச்சிறிய இடத்தில் குறுகிய காலத்தில் படித்து உடனடியாக ஆரம்பிக்கக் கூடிய ஒரு சுய தொழில்.

ஆரம்பம் 24 June சனி காலை 9.00 மணிமுதல் 24,25,26,27 ஆகிய நான்கு நாள்கள் உடன்பதிவு செய்துகொள்ள

Soft View Academy
No.221, Kandy Roda, Jaffna. 077 747 5783

**அறைகள் வாடகைக்கு**

குறைந்த விலையில் அறைகள் வாடகைக்கு உண்டு. நாள் வாடகை 600/= முதல் 3000/= வரை A/C, T/V அனைத்து வசதிகளுடன் உண்டு.
Hotel Villa City
422/1, Galle Road, Wellawatte, p/n -072 255 2222

**மில் விற்பனைக்கு**

வீதி முகப்புடன் கோட்டா அரிசி மில் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு, 077 6001701

**விற்பனைப் பிரதிநிதிகள் தேவை.**
(வடமராட்சியில்)
பிரபல Mobile Net Work Company ஒன்றுக்கு தேவை.
077 777 1633

**தவறவிடப்பட்டது**

கம்பஸ் லேனுக்கும் திருநெல்வேலி சந்திக்கும் இடையில் ரவி கருணாநாயக்க (951171182V) இலக்கமுடைய அடையாள அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம் அடங்கலாக பணப்பை தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்து தருபவர்களுக்கு சன்மானம் வழங்கப்படும்.
தொடர்பு- 078 286 5456, 0717616339

**வாகனம் வாடகைக்கு உண்டு**

முழுமையாக மூடப்பட்டுள்ளது. 10 1/2 அடி நீளம் கொண்ட JMC வகை லொறி வாடகைக்கு உண்டு. தொடர்புகளுக்கு
0778448797

**சாரதி தேவை**

பிரபல தனியார் நிறுவனம் ஒன்றுக்கு
இரவுநேரத்தில் பணிபுரியக்கூடிய சாரதி தேவை.
ஆர்வம் உள்ளவர்கள்
இன்று (22.06.2017) வியாழக்கிழமை,
நாளை (23.06.2017) வெள்ளிக்கிழமை
நேரில் சமுகம் தரவும்.
நேரம் : மாலை 6.30 தொடக்கம் இரவு 08.00 மணி வரை
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 25.05.2017 வியாழக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்ப குலவிளக்கு

திருமதி
## அனுராதா சுரபாஸ்கரன்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (22.06.2017) வியாழக்கிழமை காலை 8.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் 24.06.2017 சனிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அவரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம். இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**"துர்க்காபுரம்"**
**ஸ்ரீ ஞானதுர்க்கை அம்மன் ஆலயம்**
**படித்த மகளிர் திட்டம், மிருசுவில்.**

**குடும்பத்தினர்.**

# 8 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் மகேந்திரன் சசீந்திரன்

அன்னை மடியில் 13.10.1984 — மண்ணின் மடியில் 22.06.2009

எட்டாண்டுகள் கடந்தாலும்
இதயத்தால் அழியாத எங்களின் உறவே !
ஏன் ஐயா எங்களை விட்டு பிரிந்து
இறையடி சேர்ந்தாய் !
தவிக்கிறோம் நாங்கள்
தடுமாறுகின்றோம் உன் இழப்பால் !
மனம் பொறுக்குதில்லை மண்ணை மறந்த
மகேந்திரன் சசீந்திரன் நினைவு !
மரணம் என்பது எல்லோருக்கும் வரும்
எப்பவும் வருவது திண்ணம் !
ஆனால் இருபத்திநான்கு வருடங்கள்
மட்டுமே வாழ்ந்து மடிந்தாய் !
சாதிக்கும் வயதில் சாவு
உன்னை அழைத்ததே !
ஏங்குவதே நெஞ்சம் சாதனை செய்வாய்
சரித்திரம் படைப்பாய் என்றிருந்தோம் !
சோதனை வந்து சோகத்தையும் தந்ததே
என்ன செய்வோம் இறைவா !
எத்தனை ஆண்டுதான் கடந்தாலும்
உங்களை நினைத்தே
வாழ்வோம் நாம் !

31, K.K.S Road,
Kokuvil West, Kokuvil.

**குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்

## திருமதி உமாமகேஸ்வரி கந்தசாமி



மலர்வு 13.04.1940 — மறைவு 20.06.2017

சாவகச்சேரி, கல்வயலைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை நீராவியடியை வசிப்பிடமாகவும் தற்போது வவுனியா பெரியார்குளம் பூந்தோட்டத்தில்வசித்து வந்தவருமாகிய கந்தசாமி உமாமகேஸ்வரி கடந்த (20.06.2017) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கார்த்திகேசு முத்துப்பிள்ளை தம்பதியின் சிரேஷ்ட புதல்வியும் காலஞ்சென்ற காசிப்பிள்ளை யோகாம்பிகை தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற காசிப்பிள்ளை கந்தசாமியின் அன்பு மனைவியும் குகதாசன் (தபாலதிபர், கிளிநொச்சி), சரவணபவான்(ஜேர்மனி), சண்முகதாசன் (பிரான்ஸ்), குமரதாஸ் (பிரான்ஸ்), ஆறுமுகதாஸ் (ஆசிரியர், இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி, வவுனியா) ஆகியோரின் அன்புத் தாயாரும் நளினி (வவுனியா), மனோரதி (ஜேர்மனி), சுபத்திரா (பிரான்ஸ்), ஜெயாநந்தினி (பிரான்ஸ்), விஜிதா (ஆசிரியர், முஸ்லிம் மகா வித்தியாலயம், வவுனியா) ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.06.2017) வெள்ளிக்கிழமை பூந்தோட்டம் பெரியார்குளம் வவுனியாவிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பி.ப.2.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக பூந்தோட்டம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: மகன்மார்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**
**(க.குகதாசன் தபாலதிபர், கிளிநொச்சி)**
024 222 1480
077 083 3332



**குடும்ப முன்னேற்றத்துக்கான அனைத்து ஆக்கங்களும் ஒரே சஞ்சிகையில்!**

தரம் 5

சிங்கள மொழி பெயர்ப்பு வினாத்தாள்கள் (1 + 11)

ஆசிரியர் உதயந்தி அமரதுங்க
(செளமிய சிங்கள பத்திரிகை)

திருத்தல் சேவையுடன்

மருத்துவ உணவு, போட்டி பரீட்சை கையேடுகள்

**ஜூன் மாத ஒளிஅரசி இதோ வெளிவந்துவிட்டது**

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 22.06.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.